மாத இதழ் - February 2013

# வண்ண வானவில்

பருவம் 03 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 28 40/-



## யாழ்ப்பாணத்தில் வீரிய மருந்துகள்

## சல்யூட் To Tony Greig

## கோபிநாத் பேசுகிறார்

## கமல் Album

## அண்டவெளியில் உருவாகும் ஒரு புதிய கிரகம்

S.Krishkanthan @ ANCL 2013

# VIP Album
## Kamal





நடிகையர் திலகம்
கரத்தால் கலைப்பசிக்கு...










தாய், தந்தை குடும்பத்தாருடன்...





முதல் மனைவி வாணி கணபதியுடன்...



கமல்-சரிகா திருமணத்தை
சிவாஜி நடத்தி வைத்தபோது...



ஸ்ருதி, அக்ஷரா, கௌதமியின் மகள் சுபலட்சுமியுடன்



## பயோடேட்டா

பிறந்த திகதி : 7 நவம்பர் 1954
பிறந்த இடம் : பரமக்குடி, சென்னை
தந்தை : டி. ஸ்ரீனிவாசன் (குற்றவியல் சட்டத்தரணி)
தாய் : ராஜலஷ்மி
சகோதரர்கள் : சாருஹாசன்
சந்திரஹாசன்
சகோதரி : நளினி ரகு
உயரம் : 1.65 மீட்டர்
மனைவி : வாணி கணபதி (1978-1985)
சரிகா தாகூர் (1985-2004)

தற்போதைய துணை : கௌதமி டடிமலா (2005-
மகள்மார் : ஸ்ருதி, அக்ஷரா

முதல் படம் : களத்தூர் கண்ணம்மா
(குழந்தை நட்சத்திரம் 1960)
(பதின்ம நட்சத்திரம் - மாணவன் 1970)
பெற்ற விருதுகள் : பத்மஸ்ரீ, கலைமாமணி

பட உதவி: பிரதீப்

# யாழ்ப்பாணத்தில் கண்டபடி விலைபோகும் வீரிய மாத்திரைகள்



விஸ்வலிங்கம் கந்தவேள்
உளவள துணையாளர்

ஆண்கள் வீரியத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். உள்ளம் வீரியம் கொண்டதாக, உடல் வீரியம் கொண்டதாக இருக்கவேண்டும் என்று கருதும் ஆண் இவை இரண்டையும்விட பெண்ணுடனான பாலியல் உறவில் சளைக்காதவனாகவும், அவளைத் திருப்பதிப்படுத்துபவனாகவும் திகழ வேண்டும் என்பதையே முக்கியமாகக் கருதுகிறான். வீரியம் என்று சொன்னதும் ஒரு இளைஞன் மனதில் செக்ஸ்தான் தட்டுப்படுகிறது.

திருமணத்துக்கு முன்னர் பெண்ணுடன் பழகுவதையும் திருட்டுத்தனமாக பாலியல் சுகங்களை தொட்டுப்பார்ப்பதையும் மறைவாகத்தான் செய்யவேண்டியிருக்கிறது. பாலியல் கல்வி இருபாலாருக்கும் செவி வழிச் செய்திகள் தான். இதனால் பல தவறான அனுமானங்கள், நம்பிக்கைகள் இளம் சமூகத்தினர் மத்தியில் மண்டிப் போயுள்ளது. இதை போலி வைத்தியர்களும், காசு பார்க்கும் வைத்தியர்களும், ஏமாற்றுப் பேர்வழிகளும் மருந்து விற்பனை செய்யும் சிலரும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இன்று மருந்துகளை பார்மஸிகளில் மருத்துவர் சீட்டு இன்றியே பெற முடிகிறது. சில வருடங்களுக்கு முன்னர் ஒரு ஆங்கிலப் பத்திரிகை, சிலரை கொழும்பு பார்மஸிகளுக்கு அனுப்பி மருத்துவர் சீட்டு இல்லாமல் சில முக்கிய மருந்துகளை வாங்கியதை கட்டுரையாக பிரசுரித்திருந்தது. கடந்த வருட முற்பகுதியில் மருத்துவர் சீட்டு இல்லாமல் மருந்து தருவதற்கு பார்மஸிகள் மறுக்கத் தொடங்கியிருக்கின்றன.

சுகாதாரத்துறையின் கெடுபிடி காரணமாக அவை மறுத்திருக்கலாம். எல்லாம் சில மாதங்கள்தான். பழைய குடிரு கதவைத் திறவடி என்பதுபோல மருத்துவர் சீட்டு இல்லாமலேயே இப்போது நாடெங்கும் வேண்டிய மருந்துகளை வாங்கலாம். கேட்டால் மறுக்காமல் பார்மஸிகாரர்கள் மருந்து தருகிறார்கள்.

இந்த மருந்துகளில் வீரிய மாத்திரைகளும் அடங்கும்.

ஆணுக்கு விறைப்பை ஏற்படுத்தவும், விறைப்பு நின்று பிடிக்கவும் விந்து வெளியேற்றம் உடனடியாக நிகழ்வதைத் தடுத்து தாமதப்படுத்தவுமே இந்த மாத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. பல்வகையான வர்த்தக நாமங்களில் இவை கிடைக்கின்றன. SILBENAFIL- CITRATE என்பதே இதன் மூலப் பெயராகும்.

இனி யாழ்ப்பாணத்துக்கு பயணமாவோம்.

யாழ் நகரில் சுமார் பத்து வகையான வீரிய மாத்திரைகள் விற்பனையில் உள்ளன. புலிகளின் காலத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தபோதும் கூட இந்த மாத்திரைகள் மாத்திரம் எப்படியோ வரவழைக்கப்பட்டு விற்பனையில் இருந்தன என்பதுதான் விசேஷம். இதைப் பாலியலின் மகத்துவம் என்று சொல்வதா?

இம்மருந்துகளைப் பொதுவாகவே பெண்கள் வாங்குவதில்லை. எனினும் பாலூட்டும் தாய்மாரும். கர்ப்பவதிமாரும் இவ்வீரிய மருந்துகளை உபயோகிப்பதாக ஒரு அதிர்ச்சித் தகவல் கிட்டியிருக்கிறது. ஏன்?

கர்ப்பமாகவும் பாலூட்டும் பருவத்திலும் தம்மிடம் பாலுணர்வு குறைவாக காணப்படுவதாக பெண்களில் சிலர் கருதுவதாகவும் தாம்பத்திய உறவில் ஈடுபடும்போது தமது உணர்வுகள் மேலோங்கி இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் இம்மாத்திரைகளை உபயோகிப்பதாகவும் காரணம் கூறப்படுகிறது. எனினும் இவர்கள் இத்தகைய மாத்திரைகள் உபயோகிப்பது நல்லதல்ல. அது பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மருத்துவர்களின் முடிவாகும்.

யாழ்ப்பாணத்தில் இம்மாத்திரைகளை 16 முதல் 70-78 வயது வரையிலான ஆண்கள் வாங்குகின்றனர். இவ்வாறு வீரிய மாத்திரைகளை வாங்குவோரில் 80 சதவீதமானோர் மருத்துவரின் மருத்துவச்சீட்டின்றியே பார்மஸிகளில் வாங்குகின்றனர். யாழ். போதனாஸ்பத்திரியைச் சுற்றிலும் அமைந்திருக்கும் பத்துக்கும் மேற்பட்ட பார்மஸிகளில் இம்மருந்துகள் கிடைக்கின்றன. சிலர் மருந்துகளின் பெயரைச் சொல்லி வாங்குகின்றனர். பலர் வீரியத்துக்கு டெப்லட் இருக்கோ? என்று கேட்டு வாங்க, வேறு சிலர் தயங்கித் தயங்கிக் கேட்டு ஒரு வழியாக பார்மஸிக்காரருக்கு புரிய வைத்து வாங்குகிறார்கள்.

சிலரைத் தவிர பலருக்கு ஒரே தடவையில் எத்தனை மாத்திரை எடுக்கவேண்டும் என்பது புரிவதில்லை. நான்கையும் ஒரே தடவையில் பாவித்தால் அதிக வீரியம் கிடைக்கும் என நம்புகிறவர்களும் இருக்கிறார்கள். இந்த வீரிய மாத்திரைகளை கண்டபடி எடுப்பது நல்லதல்ல. நிறைய மாத்திரைகள் நிறைய வீரியத்தைத் தரும் என்ற நம்பிக்கை ஆபத்தானது. கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

மருந்துவர்கள் இம்மாத்திரைகளை விறைப்புத்தன்மையற்றவர்களுக்கும் விறைப்பு நீடித்து நிற்பதற்கும் விந்து கழிதலை தாமதப்படுத்தவுமே சிபாரிசு செய்கின்றனர்.


எனினும் தமது பாலியல் வீரிய சக்தியின் அளவை ஆண்கள் எப்போதும் தப்பாகவே எடை போடுகின்றனர். இதற்காக அவர்கள் கற்பனைக் கதாநாயகர்களின் 'வீரிய சக்தி'யுடன் தமது சக்தியை சமன்படுத்திப் பார்த்து சலிப்படைகின்றனர். வீரியம் என்றால் என்ன என்பதை பெரும்பாலான ஆண்கள் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அதைச் சுற்றி நிறைய மூட நம்பிக்கைகளும், பொய்களும், தவறான நம்பிக்கைகளும் சூழ்ந்துள்ளதாலேயே, வீரிய மருந்துகளை நாடிச் செல்கின்றனர்.

இவ்வீரிய குளிசைகளை, இருதய நோய் கண்டவர்கள், சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கபட்டவர்கள், செங்கமாரியால் பாதிக்கப்பட்டவர்கள் என்போர் பாவிக்கக் கூடாது. பாவிப்பதாக இருந்தால் நிச்சயமாக மருத்துவரின் சிபாரிசு இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அங்கீகாரம் பெற்ற மற்றும் பெறாத சகல பார்மஸிகளிலும் இவற்றை மருத்துவ சிபாரிசு இன்றியே வாங்கலாம். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இருக்கும் ஒரு பார்மஸியில் மட்டும் தினமொன்றுக்கு 300 மாத்திரைகள் விற்பதாக தெரிகிறது.

இம் மாத்திரைகளைத் தொடர்ச்சியாக அல்லது அவசியமில்லாமல் பாவித்தால் நோய் எதிர்ப்பு சக்தி குறைய வாய்ப்புள்ளது. மேலும் பழக்கம் காரணமாக மாத்திரை போடாவிட்டால் பெண்ணுடன் சேர முடியாது என்ற நிரை ஏற்படக்கூடிய வாய்ப்பும் உள்ளது. பின்னர் இது விரக்தி நிலைக்கும் மனத்தளர்ச்சிக்கும் இட்டுச் செல்லாம்.

வீரியக் குறைவு என்பது ஹோர்மோன், முள்ளந்தண்டு ஆகிய உடலியல் சார்ந்த பிரச்சினைகளோடு சமூக, உளவியல் சார்ந்ததாகவும் இருக்கிறது. விரைவான விந்து வெளியேற்றம் என்பது எல்லா ஆண்களுக்கும் எப்போதாவது ஒரு சமயத்தில் ஏற்படக்கூடிய ஒன்றாகும். பெரிதுபடுத்தத் தேவையில்லை.



வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
– பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை
அலங்கரிப்பவர்
அமலாபால்

மார்ச் மாத
வானவில்
01ம் திகதி முதல்
கடைகளில்...

# டோனி கிரேக் நினைவஞ்சலி





# நமது கிரிக்கெட் மீது பாசம் கொண்டிருந்த டோனி

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் விளையாட்டு வர்ணணையாளர்களாக பலர் இருந்தபோதும் அத்துறையில் விளையாட்டு அபிமானிகளில் நிறையபேருக்கு பிடித்த ஒரு வர்ணனையாளர் என்ற பெயரை பெறுவது எளிதானது அல்ல.

சிறந்த குரல்வளம், தங்கு தடையின்றி பேசும் திறன், வர்ணனைக்கு வளம் சேர்க்கும் வகையில் பழைய நினைவுகளை, நிகழ்வுகளை இடையில் சேர்த்துக்கொள்ளும் லாவகம், விளையாட்டு பற்றிய நுணுக்கங்கள் வர்ணனையை கேட்போரை ஆசனங்களிலேயே உட்கார வைக்கும் (கட்டி வைக்கும்) சாமர்த்தியம் ஆகிய அனைத்தும் திறமையான ஒரு விளையாட்டு வர்ணனையாளருக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்கள். இந்த அனைத்து குணாதிசயங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தவர்தான் அண்மையில் மறைந்துபோன பிரபல கிரிகெட் வர்ணனையாளர் டோனி கிரேக்.

இவரது குரலைக் கேட்டால் போதும், கிரிக்கெட் ரசிகர்கள் தொலைக்காட்சிப் பெட்டியை சூழ்ந்து கொள்வர். குறிப்பாக இலங்கை ரசிகர்களுக்கு இவரது குரலைக் கேட்டால் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படும்.

தனது வர்ணனை ஒன்றின் மூலமே இலங்கை கிரிக்கெட் அணியையும் இலங்கை வீரர்களையும் உலக கிரிக்கெட் ரசிகர்கள் பெரிதும் ஈர்க்கும் வகையில் செயற்பட்டவர் டோனி கிரேக்.

இலங்கையின் இயற்கை அழகு கிரிக்கெட் ஆகியவை கிரேக்குக்கு ரொம்பப் பிடித்தவை. லிட்டில் கலு (ரொமேஸ் களுவிதாரன), மாஸ்டர் பிளாஸ்டர் (சனத் ஜயசூரிய) கெப்டன் கூல் (அர்ஜுன் ரணதுங்க) என்று இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு அடைமொழி சூட்டி அழகு பார்த்தவர் அவர்.

1996 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலக கிண்ணத்தை சுவீகரிப்பதற்கு பலரது கூட்டு முயற்சியே வழி கோலியது. வீரர்கள் வெற்றிக்காக மைதானத்தில் விளையாடினர். மைதானத்துக்கு வெளியே இருந்து பல உந்து சக்திகள் வீரர்களை ஊக்குவித்தன. அவ்வாறான சக்திகளில் ஒன்று அல்லது ஒருவர் டோனி கிரேக் என்றால் எவரும் மறுக்கப் போவதில்லை.

1946 அக்டோபர் 6ம் திகதி தென் ஆபிரிக்காவின் குயின்ஸ்டவுன் நகரில் பிறந்தவர் டோனி கிரேக். அவரது முழுப்பெயர் அந்தனி வில்லியம் டோனி கிரேக் என்பதாகும். அவரது தந்தை ஸ்கொட் இங்கிலாந்தில் இருந்து தென் ஆபிரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர். கிரேக்கின் தாய் தென் ஆபிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர்.

**14ம் வயதிலிருந்தே அவருக்கு வலிப்பு நோய் இருந்தது. இதை அவர் இரகசியமாகவே வைத்திருந்தார்**



குயின்ஸ் டவுன் பாடசாலையொன்றில் படித்த டோனி கிரேக் பாடசாலை காலத்திலேயே கிரிக்கெட் விளையாட்டில் திறமைக்காட்டினார். இது அவரை தென் ஆபிரிக்காவின் 'கரி கப்' போட்டிகள் வரை அவரை இட்டுச் சென்றது. அதன் மூலம் இங்கிலாந்தின் சசெக்ஸ் பிராந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்பு கிடைத்தது.

சசெக்ஸ் அணிக்காக விளையாடும் வாய்ப்பு கிடைத்தபோது டோனி கிரெய்க்கு 19 வயது. லங்காஷயர் அணிக்கான முதல் போட்டியிலேயே 156 ஓட்டங்களை பெற்று அணியில் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டார்.



6 அடி 6 அங்குலம் உயரமான டோனி மைதானத்தில் அவரது உயரம் காரணமாக தனித்துச் தெரிந்தார்.

1972 ஜுன் 8 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை ஆரம்பித்த டோனி கிரேக் 1977 ஆகஸ்ட் 30ம் திகதி தனது 58ஆவது இறுதி டெஸ்ட் போட்டியையும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவே விளையாடினார்.

58 டெஸ்ட் போட்டிகளில் அவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 3599. இதில் 8 சதங்களும் 20 அரைச்சதங்களும் அடங்கின. டெஸ்ட் போட்டிகளில் 141 விக்கட்டுகளை வீழ்த்தினார். 1975 முதல் 1977 வரை அவர் இங்கிலாந்து அணியின் தலைவராகவும் கடமையாற்றினார்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றவுடன் டோனி நைன் நெட்வோர்க் என்ற தொலைக்காட்சி சேவையில் கிரிக்கெட் வர்ணனையாளராக இணைந்து கொண்டார். பின்னர் அவர் ஸ்கைஸ்போர்ட்ஸ் மற்றும் செனல் 4 தொலைக்காட்சி சேவைகளில் வர்ணனையாளராக சேர்ந்து கொண்டார்.

**லிட்டில் கலு, மாஸ்டர் பிளாஸ்டர், கெப்டன் கூல் என்றெல்லாம் எமது வீரர்களுக்கு அடைமொழி வைத்து அழகு பார்த்தவர்**

டோனி கிரேக்கின் வாழ்க்கையில் நிறையப்பேருக்கு தெரியாத ரகசியம் ஒன்று உள்ளது. 14 வயதில் இருந்து அவர் வலிப்பு நோய்க்கு ஆளாகியிருந்தார் என்பதே அந்த ரகசியமாகும். ஆனால் மாத்திரைகளாலும் பழக்க வழக்கங்களாலும் அவர் அதனை முடிந்தவரை கட்டுப் படுத்தியிருந்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்ற காலத்தில் கிரேக் அதிக நேரம் தூங்குவார். சகவீரர்களிடம் தூங்குமூஞ்சி என்ற அடைமொழியை இது பெற்றுத்தந்தது. எனினும் தனது நோயில் இருந்து கட்டுப்படுத்திக் கொள்ளவே அவர் அதிக நேரம் தூங்கினார் என்பது ஒரு ரகசியமாகவே இருந்தது. இது பற்றி தெரிந்திருந்த ஓரிரு சக வீரர்கள் அந்த ரகசியத்தை காப்பாற்ற அவருக்கு உதவியமை குறிப்பிடத்தக்கது.

1979ல் டோனி கிரேக் இங்கிலாந்தில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டரீதியாக குடிபெயர்ந்தார்.

தொடர்ந்து கிரிக்கெட் வர்ணனையாளராக உலகளாவிய ரீதியில் லட்சக்கணக்கான ரசிகர்களை மகிழ்வித்த டோனி கிரேக் இலங்கை கிரிக்கட் வீரர்களை ஊக்குவித்து செயற்பட்டார். அதன் மூலம் இலங்கை வீரர்கள் பற்றி வெளிநாட்டு ரசிகர்களுக்கு நிறைய தகவல்கள் கிடைத்தன.

இலங்கை என்றால் ஒரு கிரிக்கெட் விளையாடும் நாடு. அப்போதைய கிரிக்கெட் உலகில் பந்தை பதம் பார்ப்பவர் (மாஸ்டர் பிளாஸ்டர்) என்ற கிரேக்கின் அடைமொழியுடன் கூடிய அதிரடி ஆட்டக்காரன் சனத் ஜயசூரியவின் நாடு என்று உலகின் பல கிரிக்கெட் அபிமானிகளுக்கு டோனி கிரேக் அறிய வைத்தவர். இதற்கெல்லாம் பிரதியுபகாரமாக இலங்கை உல்லாசத்துறையின் தூதுவராக 2011 மார்ச் முதல் சில மாதங்கள் கடமையாற்ற அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

கடந்த (2012) மே மாதம் கிரேக் இருமலுக்காக வைத்தியரை பார்க்கச் சென்றிருந்தார். புரோன்கைடிஸ் என்ற சுவாசம் தொடர்பான நோயாக இது இருக்கலாம் என முதலில் கருதப்பட்டது. ஆனால் பரிசோதனையில் பின் இது நுரையீரல் புற்றுநோய் (கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கும் இதே நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்) என தெரியவந்துள்ளது.

தனக்கு நுரையீரல் புற்று நோய் ஏற்பட்டபோதும் டோனி கிரேக் மனம் தளரவில்லை. தனது வர்ணனையின்போதே அவர் ரசிகர்களுக்கு அதுபற்றி குறிப்பிட்டார். ''எனக்கு நுரையீரல் புற்று நோய் ஏற்பட்டுள்ளது. நிலைமை நன்றாக இல்லை. எனினும் எது வந்தாலும் அதனை தைரியத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்' என்று அவர் தனது கிரிக்கெட் ரசிகர்களுக்கு வர்ணனையின் இடையே குறிப்பிட்டார்.

இலங்கையை, இலங்கை கிரிக்கெட்டை, இலங்கை கிரிக்கெட் வீரர்களை மிகவும் நேசித்த அந்த உலகப் பிரபல்ய கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கிரேக் கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் செய்ன்ட் வின்சன்ட் வைத்தியசாலையில் காலனிடம் 'காட்ச்' கொடுத்து அவுட் ஆனார்.

அந்த நேரத்தில் இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலிய அணியுடன் சிட்னியில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றில் விளையாடிக் கொண்டிருந்தது. டோனி கிரேக்குக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கில் இரு அணிகளினதும் வீரர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் சிட்னி விளையாட்டு மைதானத்தில் போட்டியின் இறுதி நாள் விளையாட்டுக்கு முன் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கிரேக்கின் குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எதிரெதிர் அணித் தலைவர்களான மைக்கல் கிளார்க், மஹேல ஜயவர்தன ஆகியோர் அழைப்பு விடுத்தனர்.

டோனி கிரேக்கின் மனைவி விவியன், மகன்மார் மார்க், டொம் ஆகியோருடன் பெருமளவிலான கிரிக்கெட் ரசிகர்களும் இந்த அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

டோனி கிரேக் எப்போதுமே அணியும்' (கிரேக் ஸ்டைல் என்று பெயர் வாங்கியுள்ள) வெள்ளை தொப்பியை அன்றைய தினம் அணிந்து வருமாறு சிட்னி விளையாட்டு மைதான நிதியம் ரசிகர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தது. இதன்படி அன்றைய தினம் ஆயிரக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் கிரேக் தொப்பியுடனேயே காணப்பட்டனர்.

மௌன அஞ்சலியின் போது கிரேக்கின் அந்த வெள்ளைத் தொப்பி மைதானத்தின் நடுவே நடப்பட்டிருந்த கிரிக்கெட் கம்புகளின் மேல் வைக்கப்பட்டிருந்தது. மைதானத்தில் குழுமியிருந்தவர்களுக்கு மட்டுமன்றி இந்த அஞ்சலியை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த லட்சக் கணக்கானோரின் கண்களையும் கண்ணீரால் மறைத்தது.

டோனி கிரேக்கின் உடல் மறையலாம். ஆனால் அந்த வெள்ளைத் தொப்பியும் கம்பீரக் குரலும் ஒரு போதும் இலங்கை ரசிகர்களால் மறக்க முடியாது.

அத்துடன் லிட்டில் கலு, மாஸ்டர் பிளாஸ்டர், கெப்டன் கூல் என்று அவர் சூடிப்பார்த்த அடைமொழிகள் அதே கம்பீரக் குரலில் இப்போதும் கேட்கிறது.

இலங்கை கிரிக்கெட்டுக்காக செய்தவைக்கு

**தேங்க் யூ டோனி கிரேக்!**

ராம்ஜி



என்னங்க உங்களுக்கு ஏற்கனவே ராணி என்று ஒரு பெண்டாட்டி இருக்காளாமே உண்மையா?

ஆமாடி உனக்கு தாலி கட்டும்போது சொன்னேன்தானே உன்னை ராணி மாதிரி வச்சிருப்பேன் என்று விளங்கலியா?

- சசி, இணுவில்.

## இலங்கைத் தமிழ் திரையுலகம்




### தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

# தீயில் கருகிய 'நெஞ்சுக்குத் தெரியும்'

## ராஜேஷ்வரி ஷண்முகம் நடித்த ஒரே தமிழ்ப்படம்

தென்னிந்தியாவில் மேடை நாடக உலகிலிருந்து சினிமா உலகிற்குள் புகுந்த பலர் பின்னாளில் பிரபல சினிமாக் கலைஞர்களாக உருவாகி இருக்கிறார்கள். நடிப்புத் துறை மற்றும் இசைத் துறையில் மட்டுமன்றி இயக்கத்திலும் இவ்வாறு நாடகத்திலிருந்து சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள். மேடை நாடக இயக்கத்துறையிலிருந்து சினிமா இயக்கத் துறைக்கு வந்தவர்களில் கே. எஸ் கோபாலகிருஷ்ணனையும் கே. பாலச்சந்தரையும் உதாரணமாகச் சொல்லலாம்.



எஸ்.ஏ அழகேசன்

இவர்களைப் போல இலங்கை மேடை நாடகத் துறையில் சிறந்து விளங்கிய ஒரு தமிழர், பின்னாளில் சிங்களத் திரையுலகில் பிரபலமான சினிமா இயக்குநராகத் திகழ்ந்தார். அது மட்டுமல்ல; புகழ் பெற்ற நடிகர்களையும் நடிகைகளையும் சிங்கள சினிமா உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவர் வேறு யாருமல்ல, லெனின் மொறாயஸ் என்ற தமிழர்தான்!

சிங்கள சினிமா உலகில் ஒப்பனையாளராக புகுந்த லெனின் மொறாயஸ், ஒளிப்பதிவாளராக உயர்ந்து இயக்குநராக ஜொலித்தார்.

இவர் சிங்கள சினிமா உலகின் ஜனரஞ்சகமான இயக்குநர் என்றே சொல்லி விடலாம். அந்த அளவுக்கு சிங்கள சினிமா ரசிகர்களின் மனதில் நிறைந்து நின்றவர். சில வருடங்கள் சிங்களச் சினிமா உலகை ஆட்சி செய்தவர்.

சினிமா மோகம் காரணமாக 1955ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்றவர் லெனின் மொறாயஸ். பல சினிமா ஸ்ரூடியோக்களின் வாசற்படிகளில் ஏறி இறங்கினார். கடைசியில் சென்னை வாஹினி ஸ்ரூடியோவில் ஒப்பனைக் கலைஞராகப் பயிற்சிப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டு வருடங்களின் பின் விசாப் பிரச்சினைக் காரணமாக மீண்டும் இலங்கைக்குத் திரும்பினார்.

சிலோன் ஸ்ரூடியோவில் ஏதாவது வேலைகிடைக்குமா என்று தேடிப்போனார். தேடிப்போனவருக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அவருடன் ஒரே கல்லூரியில் படித்த மாணவன் ஒருவன் அந்த ஸ்ரூடியோவில் ஒளிப்பதிவுக்கு பொறுப்பாளராக இருந்தார். அந்த மாணவர்தான் பிரபல இயக்குநர் பிரேம்நாத் மொறாயஸ்.

பிரேம்நாத் மொறாயஸின் உதவியுடன் லெனின் மொறாயஸ் சிலோன் ஸ்ரூடியோவில் சேர்ந்துகொண்டார். அங்கு உதவி ஒளிப்பதிவாளர் பதவி கிடைத்திருந்தது. அங்கு 10 படங்களுக்கு உதவி ஒளிப்பதிவாளராக கடமையாற்றினார். இந்த அனுபவம் அவரை பிரதான ஒளிப்பதிவாளர் பதவிக்கு உயர்த்தியது. 'சித்தக மஹிம' (உள்ளத்தின் அருமை) என்ற படத்தின் மூலம் பிரதான ஒளிப்பதிவாளராக உயர்ந்தார்.

1966ஆம் ஆண்டு அவர் பிரதான இயக்குநராகவும் உயர்ந்து விட்டார்.

ஏனைய இயக்குநர்களைப் போலவே இவரும் முதலில் தென்னிந்திய தமிழ்ப்படம் ஒன்றைத் தழுவியே சிங்களப்படமொன்றை இயக்கினார். 'கற்பகம்' என்ற படத்தை தழுவி எடுக்கப்பட்ட 'சுதுதுவ' என்ற அந்தப் படத்துக்கு ராஜா ஜோசுவாவுடன் சேர்ந்து இணை இயக்குநராக கடமையாற்றினார்.

1969ஆம் ஆண்டு 'சூரயன்கெத் சூரயா' என்ற படத்தை லெனின் மொறாயஸ் முதன்முதலாக தனித்து நின்று இயக்கினார். அத்திரைப்படம் 'இரு வல்லவர்கள்' என்ற படத்தைத் தழுவி எடுக்கப்பட்டது.

பாடல் எதுவும் இல்லாது வெளிவந்த தமிழ்த் திரைப்படம் 'அந்த நாளில்' என்பதாகும். இந்தப் படத்தைத் தழுவி 'அபிரஹச' என்ற படத்தை உருவாக்கினார். அது 1971ல் திரைக்கு வந்து ஒரு புரட்சியையே ஏற்படுத்தியது.



லெனின் மொறாயஸ்



உதவி இயக்குநர் அன்டனி கிரகரி

தொடர்ந்து லெனின் மொறாயஸ் பல வெற்றிப் படங்களை இயக்கினார். ஆண்டுகளுக்கு ஒன்றாக 13 படங்களை இயக்கி வெளியிட்டார். 1975 முதல் 1980 வரை இவரது படங்கள் பெரு வெற்றி பெற்றன. பெரும்பாலும் இவரது படங்களில் காமினி பொன்சேகாவும் மாலினி பொன்சேகாவும் பிரதான பாத்திரங்களில் தோன்றியுள்ளனர்.

லெனின் மொறாயஸ் இயக்கிய பல சிங்களப்படங்கள் தமிழ்ப் படங்களை தழுவி எடுக்கப்பட்டவை என்பது உண்மை. ஆனால் அவை அனைத்தும் தமிழ்ப் படங்களின் காபன் கொப்பி என்று சொல்லி விட முடியாது. இலங்கைக்கு உரிய சில பண்புகளையும் சேர்த்துக்கொண்டார். அவர் இயக்கும் படங்கள் வித்தியாசமான கதைக் கருக்களைக் கொண்டு விளங்கின. காதல், வீரம், சோகம், நகைச்சுவை என்று சுவைக்கு ஒவ்வொன்றாக ஒவ்வொரு படங்களை அறிமுகப்படுதினார். அவர் இயக்கிய இறுதிப்படமான 'யுகயென் யுகயட்ட' 1987இல் திரைக்கு வந்தது.



யார் அவள் படத்தில் ஏ.ஈ மனோகரன், மாலினி பொன்சேகா

லெனின் மொறாயஸ் தமிழர் என்பதால் இலங்கை தமிழ்ப்படம் ஒன்றைத் தயாரிக்க முன் வந்ததில் வியப்பில்லை.

அவர் 'யார் அவள்' என்ற படத்தை தமிழில் உருவாக்கி வெளியிட்டார். 'அபிரஹச' என்ற சிங்களப் படத்தை தமிழில் டப் பண்ணியே அந்தப் படத்தை உருவாக்கினார். ஆனாலும் ஏ.ஈ மனோகரனும் மாலினி பொன்சேகாவும் தோன்றும் பாடல் காட்சி ஒன்றை ஒளிப்பதிவு செய்து இப்படத்தில் செருகிவிட்டார்.

இப்பாடலை எஸ். ராமச்சந்திரனும் சுஜாதா அத்தநாயக்கவும் பாடினர். எம். கே றொக்சாமி இசை அமைத்தார். 'யார் அவள்' ஒரு 'டப்' படம் என்பதால் லெனின் மொறாயஸ் அத்திரைப்படத்துடன் திருப்திப்படவில்லை.

அதனால் இலங்கையில் முழு நீளத் தமிழ்த்திரைப்படம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அவர் கனவை நனவாக்க எஸ்.ரி.ஆர் அதிபர் எஸ். தியாகராஜாவும் நல்லூர் மனோகரனும் முன்வந்தனர்.

இவர்களின் தயாரிப்பில் 'நெஞ்சுக்குத் தெரியும்' என்ற முழு நீளத் தமிழ் திரைப்படத்தை இயக்கினார். நல்லூர் மனோகரனும் ஹெலன் குமாரியும் பிரதான பாத்திரத்தில் நடித்தனர். கதாநாயகியின் தாயாக ராஜேஷ்வரி ஷண்முகம் நடித்தார். ராஜேஷ்வரி ஷண்முகம் நடித்த ஒரே ஒரு தமிழ்ப்படம் இது மட்டுமேயாகும்.


லெனின் மொறாயஸ் படம் இயக்கும்போது அனேகமாக இரண்டு பேரை உதவி இயக்குநர்களாக வைத்துக்கொள்வார். ஒருவர் எஸ். ஏ. அழகேசன் மற்றவர் அன்ரன் கிரகரி.

'நெஞ்சுக்கு தெரியும்' திரைப்படம் முற்று முழுதாக தயாரித்து முடிக்கப்பட்டது. பல கலைஞர்கள் இப்படத்தைப் பார்த்திருக்கின்றனர். திரைக்கு வருவதற்கு தயாராக ஹெந்தலை விஜயா ஸ்ரூடியோவில் வைக்கப்பட்டிருந்தது. 1983 ஆடிக்கலவரத்தின்போது விஜயா ஸ்ரூடியோ தீயினால் சாம்பரானது. 'நெஞ்சுக்குத் தெரியும்' நம் கண்களுக்கு தெரியாமல் தீயில் கருகி விட்டது. நெஞ்சுக்குத் தெரியும் படம் திரைக்கு வந்திருந்தால், லெனின் மொறாயஸின் புகழ் தமிழ் ரசிகர்கள் மத்தியிலும் பரவியிருக்கும்.

பொதுவாக லெனின் மொறாயஸ் தனது படங்களுக்கான திரைக்கதை வசனத்தை ஆங்கிலத்தில்தான் எழுதி வைத்திருப்பார். எஸ். ஏ. அழகேசனுடன் ஒகஸ்டஸ் விநாயகரத்னம், தர்மசிறி கமகே போன்ற எழுத்தாளர்கள் அவற்றை சிங்களத்தில் மொழிபெயர்பார்களாம். அதனால்தான் லெனின் மொறாயஸின் அனைத்துப் படங்களிலும் எஸ். ஏ அழகேசன் உதவி நெறியாளராக கடமையாற்றியிருக்கிறார்.

லெனின் மொறாயஸ் பல கலைஞர்களை சினிமா உலகிற்கு அறிமுகப்படுத்தினார். கீதா குமாரசிங்க, விஜயகுமாரனதுங்க, ஹெலன்குமாரி போன்றவர்கள் அவர்களில் சிலராவர்.

28.05.1995 அன்று லெனின் மொறாயஸ் காலமானார். இரண்டு தசாப்தகால இடைவெளியில் சிங்களத் திரையுலகின் நெறியாள்கைத்துறையில் கொடி கட்டிப் பறந்தவர் இந்த லெனின் மொறாயஸ் என்ற தமிழர்.



**மகன்:** டேடி நேத்து வந்த சயன்ஸ் டீச்சர் சூப்பர் பிகர்பா...

**அப்பா:** டேய் டீச்சர் எல்லாம் அம்மா மாதிரிடா...

**மகன்:** பாத்தியா, சைக்கிள் 'கேப்'ல நீ ரூட் போடுற



டாடி நீங்க எப்பவாவது எகிப்துக்கு போயிருக்கீங்களா?

இல்லியே

அப்படினா இந்த மம்மியை எங்கிருந்து கொண்டு வந்தீங்க...?


- பாத்திமா மிஸ்னா, பலாங்கொடை



# “தத்ரூபமாக நடிக்க முனைந்ததில் நெற்றி அப்பளமாகியது!”

## இனி அவன் நாயகி சுபாஷினியுடன் ஒரு ஸ்பெஷல் சந்திப்பு

மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com



**'இனி அவன்'** இலங்கைத் தமிழ்ப் படத்தின் மூலம் இலங்கை தமிழ் சினிமாவில் களமிறங்கி இருக்கும் இளமை துள்ளும் இனிமையான நடிகை சுபாஷினி. தென்னிந்திய, இலங்கை சிங்கள சினிமா, தொலைக்காட்சி நாடக வாய்ப்புகள் தம்மை தேடி வந்தாலும் ரொம்பவும் கவனமாக வாய்புகளைத் தேர்வு செய்து அம்மா, அப்பாவுடன் கலந்தாலோசித்தே முடிவுகளை எடுப்பதாக கூறுகிறார் சுபா.

''நமக்கென்று ஒரு கலாசாரம் பண்பாடு இருக்கிறது. அதற்கு அமைவாகவே நடந்துகொள்ள வேண்டும் என்பதில் ரொம்பவும் கவனமாக இருக்கிறேன். இயக்குனர் அசோக ஹந்தகமை என்னிடம் நடிக்கச் சொல்லி கேட்டபோது என் பெற்றோரிடம் அனுமதி பெற்ற பிறகே ஓகே சொன்னேன்'' என்கிறார் சுபாஷினி.

இலங்கை சிங்கள பட உலகில் அசோக ஹந்தகம சர்ச்சைக்குறிய இயக்குநர். இவர் இயக்கிய ஒரு படம் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய படங்கள் சர்ச்சைக்குரியனவாக சிங்களக் கலையுலகில் பேசப்படுவை. இவரது சிந்தனைப் போக்கு பலருக்கு புரிவதில்லை. சிலர் புரிந்துகொள்ள முயல்வதில்லை. வித்தியாசமான பார்வை கொண்ட ஒரு இயக்குநர் இவர். இவர் கையால்தான் சுபாவுக்கு மோதிரக்குட்டு கிடைத்திருக்கிறது!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இவர் இயக்கி வெளியிட்டு இருக்கும் தமிழ் படமான 'இனி அவன்' மண் திரைப்படத்தின் பின்னர் தமிழ்த் திரையுலகுக்கு மீண்டுமொரு எழுச்சியை உருவாக்கி இருக்கிறது. அதற்காக படத்தில் உள்ள குறைகளை எல்லாம் தவிர்த்து விட்டு அசோகவை பாராட்டலாம். ஒரு சிங்களவர் தமிழ்த் திரைப்படமொன்றை இயக்கி வெளியிட முன்வந்ததே பெரிய விஷயம்தான்.

''இயக்குனர் அசோகவின் படத்தில் நடிப்பதை கேள்விப்பட்ட சிலர் அவர் படத்திலா? என்று கேட்டார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனா் அவர் ரொம்பவும் நல்ல இயக்குநர்'' என்று அசோக ஹந்தகமவுக்கு நற்சான்றிதழ் கொடுக்கிறார் சுபாஷினி.

இந்த இளம் நடிகையின் பிறப்பிடம் கொழும்பு வத்தளை. ஆரம்பத்தில் நேத்ராவில் நிகழ்ச்சி தொகுப்பாளினியா்க தொடங்கிய பயணம் சக்தியில் சங்கமித்து இப்போது வசந்தம் ட.வியில்... வர்ண ஜாலம் காட்டுகிறது இவர் குரல்.

இனி அவன் பட வாய்ப்பு பற்றி சுபாஷினி எம்மிடம் பேசினார்.

'' 'யா' டிவியில் கண்ணகிபுரம்' என்ற ஒரு நாடகம் தயாரித்தார்கள். அதில் 'சுபா' என்ற பாத்திரத்தில் நான் நடித்தேன். அந்த நாடகத்தின் இணை இயக்குநராக இருந்தவர் வதீஸ் வருண். அவரும் அப்போது வசந்தம் டீவியில் பணியாற்றி கொண்டிருந்தார். அவர் என்னிடத்தில் சினிமாவில் நடிக்க ஒரு கதா நாயகியை தேடுகிறார்கள்... உங்கள் பெயரைக் கொடுக்கவா என்று கேட்டார். நான் அம்மா, அப்பாவிடம் கேட்டு விட்டு சொல்கிறேன் என்றேன். அதோடு அந்த விசயத்தை நானும் மறந்து விட்டேன். பிறகு ஒரு நாள் நான் அலுவலகம் விட்டு வெளியே வரும்போது ஒரு காரில் இருந்த இருவர் என்னை கை காட்டி அழைத்தார்கள். நான் பயத்தில் உள்ளே ஓடி ஒளிந்து விட்டேன். சக ஊழியர்களிடம் காரில் வந்தவர்கள் என்னை அழைக்கிறார்கள் என்று விஷயத்தைச் சொன்னேன். என்னை பஸ் தரிப்பிடம் வரை வந்து விடுங்கள் என்று கேட்டேன். அப்போது அங்கே வந்த வதீஸ் வருண் காரில் வந்திருப்பவர்தான் இயக்குநர் அசோக ஹந்தகம என்ற விபரத்தை சொன்னார். என் பயமும் தெளிந்தது.


வெளியே வந்த என்னைப் பார்த்த ஹந்தகம 'இந்தப் பொண்ணு அந்த வேடத்துக்கு பொருந்தாது. ஏன் என்றால் போரில் பாதிக்கப்பட்ட ஒரு பெண் இப்படி ஹேர் ஸ்டைல் பண்ணியிருக்க மாட்டாள். நீங்க ஹேர் ஸ்டைலை சாதாரணமாக மாற்றினால் நடிக்கலாம்'' என்றார் என்னிடம். அதன் பின்னர் ஹந்தகம தந்த திரைக் கதையை வாங்கிச் சென்று அம்மாவிடம் கொடுத்து படித்து பார்க்கச் சொன்னேன்.

ஆரம்பத்தில் என் வீட்டார் எவருக்கும் நான் சினிமாவில் நடிக்க போவதில் இஷ்டம் இல்லை. கதையை பார்த்த பிறகு அம்மா ஓகே சொல்ல என் கேச ஸ்டைலையும் மாற்றி இனி அவனில் நாயகி ஆனேன்'' என்று விவரம் சொன்னார் சுபா.

''இனி அவன் படப்பிடிப்பு முழுவதையும் யாழ்ப்பாணத்திலேயே நடத்தி இருக்கிறார்கள். ''மொத்தமாகவே படப்பிடிப்புக்கு பத்து நாட்கள் பிடித்தன. அதிகாலையில் தொடங்கும் படப்பிடிப்பு நள்ளிரவு ஒரு மணி வரை நடைபெறும். எனக்கும் இது முதல் படம் என்பதால் புது அனுபவம். படத்தில் வசனங்கள் குறைவாக இருந்ததால் நிறைய டேக்குகள் போகவில்லை,'' என்று சொல்லும் சுபாஷினி, படப்பிடிப்பில் நடந்த சில சுவாரஷ்யமான சம்பவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

''ஒரு காட்சியில் நான் தூணில் தலை முட்டிக்கொண்டு அழவேண்டும். அதற்காக ஒரு தூணை செட் போட்டு நான் தலையை முட்டும் அந்த இடத்தில் 'ரெஜிபோம் ஒட்டி பெயிண்ட் செய்து இருந்தார்கள். ஆக்ஷன் சொன்னதும் நான் வேகமாக சென்று தூணில் மோதினேன். 'டமார்' என்ற சத்தம்! என் நெற்றி அடிபட்டு வீங்கி விட்டது. காட்சி இயற்கையாக வரவேண்டுமே என்ற ஆர்வத்தில் ரிஜிபோமில் சரியாக முட்டாமல் தூணில் முட்டியதால் வந்த வினை இது! அதனால் அன்று படப்படிப்பு ரத்தானது.

படத்தின் மற்றொரு காட்சியில் நான் ஓடி வரும்போது இரண்டு பக்கமும் தீப்பற்றி எரிவதாக காட்டியிருப்பார்கள். அந்தக் காட்சியில் நான் ஓடி வரும்போது தடுக்கி கீழே விழுந்து விட்டேன். அய்யோ திரும்பவும் ஆரம்பத்திலிருந்தே ஓடி வரவேண்டுமே என்று நினைத்தபோது இயக்குநர் அசோக்க, 'நீ கீழே விழுந்து வந்ததுதான் நல்லா இருக்கு. அதனால் திரும்பவும் விழுந்து விழுந்து ஓடி வா என்றார்.'' அந்த காட்சியில் நடித்து முடித்த போதுதான், இதற்கு கீழே விழாமலேயே இருந்திருக்கலாமே என்று நினைத்தேன்.''



'இனிஅவன்' படத்தின் சிறப்புக் காட்சியை அம்மாவுடன் சென்று பார்த்த சுபாஷினிக்கு தான் வெள்ளித் திரையில் தோன்றியதைப் பார்க்க பெரிய ஆச்சரியமாக இருந்ததாம். அம்மாவின் பாராட்டு தனக்கு இரட்டை சந்தோஷத்தை கொடுத்ததாக மகிழும் சுபாஷினியின் ரோல்மாடல் நடிகை ப்ரியாமணிதானாம். துடுக்குத்தனமாக பருத்தி வீரனில் நடித்திருக்கும் ப்ரியாமணியைத்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று சொன்ன சுபா, கடந்த வானவில் இதழில் வெளியாகி இருந்த ப்ரியாமணி அல்பத்தை தடவிக் கொடுத்து முத்தமிடவும் செய்தார்.

''நான் வத்தளை புனித அன்னம்மாள் பாடசாலையில் கல்வி கற்றப்போது பள்ளி விடுமுறை நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது. வகுப்பில் டீச்சரும் இல்லை, சிஸ்டரும் இல்லை. எனக்கு ஒரே குஷி. உடனே வகுப்பறை பெஞ்சுகளை ஒதுக்கி வைத்து விட்டு வகுப்பறையை குட்டி மைதானமாக்கி விட்டு அங்கே இருந்த ஒரு மேசையின் பழகையை கழற்றி எடுத்து பேட் மாதிரி செய்து நண்பிகளோடு கிரிக்கெட் விளையாடினேன். நண்பி வீசிய பந்தை நான் விலாசித்தள்ள, பந்து கூரையில் தொங்கி கொண்டிருந்த அந்த லொட லொட ஃபேனில் பட்டு ஃபேனின் ஒரு சிறகு கழன்று விழுந்தது. நானும் நண்பியும் அதிர்ந்து போனோம். அடுத்த நிமிடம் அந்த விடத்தை விட்டு எஸ்கேப். பிறகு அடுத்த நாள் காலையில் எங்களின் வகுப்புக்கு வந்த கமலா சிஸ்டர் முதல் நாள் நடந்த கூத்துக்களை குடைய ஆரம்பித்தார். நானும் நண்பிகளும் மேசையை சேதப்படுத்தியதை மட்டும் ஒப்புக்கொண்டோம். ஃபேனை நாங்கள் உடைக்கவில்லை என்று சத்தியம் செய்தோம். எங்கள் மீது சிஸ்டருக்கு நம்பிக்கை வரவில்லை. அதனால் எங்களை மண் தரையில் முட்டிப் போட்டு உட்கார செய்து விட்டார். ஃபேனை உடைத்தவர் உண்மையை ஒத்துக்கொண்டால் எழும்பிப் போகலாம் என்றார். நாங்களும் பிடிவாதமாக மூன்று மணி நேரம் அப்படியே முட்டி போட்டிருந்தோம். சிஸ்டருக்கு எங்கள் மீது இரக்கம் வந்து எழும்பி போக சொல்லி விட்டார்.

உண்மையில் ஃபேனை உடைத்தது நான்தான் என்று புன்னகைக்கிறார் சுபாஷினி. அவரின் புன்னகை 'நாங்கள் அப்பவே அப்படி' என்பது போல இருந்தது.

வண்ண வானவில்

*வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்*

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செ.மீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செ.மீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செ.மீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செ.மீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.40 |
| 1 வருட சந்தா | ரூ.480.00 |
| 6 மாத சந்தா | ரூ.240.00 |
| 3 மாத சந்தா | ரூ.120.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.672.00 |
| 6 மாத சந்தா | ரூ.336.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk

தவம்

# காதலியை சீக்கிரமே கரம்பற்ற என்ன வழி?




ஜயம்பதி ஜயசிங்க

கல்கிசை பொலிஸ் நிலையத்துக்கு விடியற்காலை கிடைத்த தொலைபேசி அழைப்பினையடுத்து பொலிஸார் கல்தேமுல்ல பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு விரைந்தனர்.

குறிப்பிட்ட வீட்டை அடைந்ததும் அந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளரான 35 வயது மதிக்கத்தக்க ஒருவர் பொலிஸாரை வீட்டின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார். அங்கே பொலிஸார் கண்ட காட்சி அவர்களை அதிர்ச்சியடையச் செய்தது.

ஒரு பெண்ணும் அவரது இரு பிள்ளைகளும் படுக்கையிலேயே நெருப்பில் கருகியிருந்தனர்.

கொல்லப்பட்ட பெண்ணின் கணவரும், கணவரின் தாயாரும், வேலைக்காரப் பெண்ணும் அதே வீட்டில் வசித்த ஏனையோராவர்.

குறிப்பிட்ட தினத்தன்று காலை 6.30 மணியளவில் எரியுண்ட பெண்ணின் கணவரது தாயார் மேல் மாடிக்கு சென்றிருக்கிறார். மருமகளும் பிள்ளைகளும் எரியுண்ட நிலையில் இருந்ததைக் கண்ட அவர் அலறிக்கொண்டே கீழே வந்து தனது மகனிடம் (எரியுண்ட பெண்ணின் கணவரிடம்) விடயத்தை கூறியிருக்கிறார். கணவனும் மேலே சென்று பார்த்த பின்னரே பொலிஸுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்.

பொலிஸார் அங்கு வந்ததும் தேவையான விபரங்களை பெற்றுக்கொண்டதுடன் சடலங்களை புகைப்படம் எடுத்த பின்னர் அவற்றை ஆஸ்பத்திரிக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

சட்ட வைத்திய அதிகாரி (JMO) தம்மிக்க ஆரியரட்ன பிரேத பரிசோதனையை நடத்தினார். எரியுண்ட பெண்ணும் அவரது மூன்று வயது மகனும் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஒரு மாதம் மட்டுமே நிறைவான பச்சிளம் குழந்தை எரிகாயங்களினால் கொல்லப்பட்டிருப்பதாகவும் பிரேத பரிசோதனையில் தெரிய வந்தது.

இதையடுத்து கல்கிசை பொலிஸ் நிலையத்தின் குற்றச் செயல் பரிவு பொறுப்பதிகாரி எரிக் மற்றும் சப் இன்ஸ்பெக்டர் குமார் நலவங்ச ஆகியோர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

எரியுண்ட பெண்ணின் கணவன், கணவனின் தாயார், வேலைக்காரப்பெண் ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் இரத்மலான பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றில் மானேஜராக பொறுப்பான பதவியில் இருந்தார்.

31 வயதான மனைவி சந்தமாலி பெர்ணாண்டோ மொரட்டுவ பிரின்ஸஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் ஆசிரியையாக பணியாற்றினார். அவருக்கு வேறு ஒரு ஆணுடன் தொடர்பு இருப்பதாக அவரது கணவர் குற்றம்சாட்டி வந்தார். அதுவே குடும்பத்தில் அடிக்கடி தகராறு ஏற்பட காரணமாக இருந்தது. இதன் காரணமாக கணவனும் மனைவியும் வெவ்வேறாகவே படுத்துறங்கினர்.

மனைவி மேல் மாடியிலும் கணவன் கீழ் தளத்திலும் உறங்கினர். கணவனின் தாயாருக்கும் வேலைக்கார பெண்ணுக்கும் கூட இது பற்றி தெரிந்திருந்தது. சம்பவம் தொடர்பாக கணவன் மீது ஆரம்பம் முதலே இருந்து வந்த சந்தேகம் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்த பின்னர் மேலும் அதிகரித்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தினர்.

விசாரணை முறைகள் மாறியதையடுத்து கணவனால் தாக்குபிடிக்க முடியவில்லை. இறுதியில் உண்மையை கக்கினார்

மனைவியையும் மூன்று வயது மகனையும் கழுத்தை நெறித்து தானே கொலை செய்ததாகவும் அவர் கூறினார். அத்துடன் அந்த கொலைகள் அதிகாலை 12.30 மணிக்கு இடம்பெற்றதாக அவர் கூறினார்.

நள்ளிரவுக்குப் பின் தான் அடிமேல் அடிவைத்து மேல் மாடிக்கு சென்றதாகவும் அங்கு தூக்கத்தில் இருந்த தனது மனைவியின் கழுத்தை நெறிக்கும்போது மனைவியின் அலறலைக் கேட்ட போது 3 வயது மகன் எழுந்து கூச்சலிட முயன்றதையடுத்து மகனின் கழுத்தையும் நெறித்துக் கொன்றதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறினார்.

அப்போது ஒரு மாதமேயான சிறிய மகன் விழித்துக் கொண்டு அழுததாகவும் அவர்கள் மூவரின் மீதும் வாசனை தைலத்தை தெளித்து நெருப்பு வைத்து விட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கட்டிலுக்கு அருகே நெருப்பு பெட்டியையும் மெழுகுவர்த்தியையும் வைத்த பின் மெழுகுதிரியை சற்று எரியவிட்டு கட்டிலில் விழுமாறு செய்து பின் அதனை அணைத்து விட்டதாகவும் கணவன் மேலும் கூறினார்.

எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரி கட்டிலில் விழுந்ததையடுத்தே கட்டிலில் தீப்பிடித்தது என்று பொலிஸாரை நம்ப வைக்கும் நோக்கத்திலேயேதான் இவ்வாறு செய்ததாகவும் அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

இதனை செய்து முடித்த பின் தனது அறைக்கு சென்று ஒன்றுமறியாதவர் போல் படுத்துக் கொண்டதாகவும் காலையில் தனது தாயார் அலறிக்கொண்டே வந்த தன்னை எழுப்பியபோது மேல் மாடிக்கு ஓடிச் சென்று தனது மனைவி குழந்தைகள் எரியுண்டு கிடந்ததைக் கண்டு வேதனை அடைவதைப்போல் காட்டிக்கொண்டு பொலிஸுக்கு தகவல் கொடுத்தாகவும் அவர் மேலும் கூறினார்.

மனைவியும் குழந்தைகளும் படுத்திருந்த அறை முழுவதும் எயார் கண்டிஷன் செய்யப்பட்டிருந்தால் அவர்களது கதறல் சத்தம் வெளியே கேட்கவில்லை. அதனால் அயலவர்களுக்கு எதுவும் தெரிய வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

அது சரி, மனைவி குழந்தைகளை கொலைசெய்யும் அளவுக்கு என்ன காரணம் என்று பொலிஸார் கேட்டனர்.

''எனக்கு இப்போது 36 வயதாகிறது. நான் வேலை செய்யும் நிறுவனத்தில் புதிதாக தகவல் தொழில்நுட்ப கற்கை நிறுவனமொன்றை நான் நிறுவியுள்ளேன். அதில் பல இளைஞர் யுவதிகள் பயிற்சிக்காக சேர்ந்துள்ளனர். அதில் 22 வயதான ஒரு யுவதியிடம் நான் மனதைப் பறிகொடுத்தேன்... அந்த யுவதி அங்கு பயிற்சிக்கு வந்து சில நாட்களே ஆகியிருந்தன.

எனது மனைவியை விவாகரத்து செய்து விட்டு அந்த யுவதியை எப்படியாவது திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை எனக்கு வெறியூட்டியது. எனது வயது 27 என்று அந்த யுவதியிடம் கூறியிருந்தேன். அவளும் அதனை நம்பியிருந்தாள். அவளை என்னால் மறக்கமுடியவில்லை. அவள் வேண்டும் என்றால் இவள் (இப்போதைய மனைவி) இருக்கக்கூடாது. இருந்தால் வீண் பிரச்சினைகள் வரும். எனவே அவளையும் குழந்தைகளையும் எப்படியாவது ஒழித்துக்கட்டவேண்டும். அதனால்தான் இப்படிச் செய்தேன் என்று தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் பொலிஸாரிடம் கூறினார்.

அப்படியானால் உமது மனைவியை விவாகரத்து செய்திருக்கலாமே என்று பொலிஸார் கேட்டனர்.

விவாகரத்து செய்ய வேண்டுமானால் நீண்ட தாமதம் ஏற்படும். அதுவரை அந்த யுவதி காத்திருப்பாரா என்று தெரியவில்லை. அதனால்தான் இப்படி யோசித்தேன். ஆனால் இப்போது எல்லாமே பிழைத்து விட்டது" என்று மிகுந்த மனவருத்தத்துடன் அந்த கொலைகார கணவர் கூறினார்.

கோப்பிக்காலத்தில்...

# தோட்டங்களில் பாடசாலைக் கல்வி

தோட்டப் பாடசாலைகளை எப்படி நடத்துவது என்பதில் ஆரம்பத்தில் பிரச்சினைகள் எழுந்தன.

தோட்டங்களில் வாழும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு எழுதவும், வாசிக்கவும் மேலும் கணக்கு அறிவும் பெற்றுத்தர வேண்டுமென லண்டனில் உள்ள சில அமைப்புகள் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தன. பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. எஸ். ஷிவான், சேர் மென்சர்ஜி, போவனகரீ, ஹேர்பர்ட் ரொபர்ட்ஸ், ஜி.எச். வேயர் இலங்கையில் பெரிய துரையாக பணியாற்றிய ஏ. ஜி. எச். வைஸ் ஆகியோர் தோட்டப் பாடசாலைப் பற்றி பேச ஆரம்பித்தனர். கிழக்கிந்திய சங்கம், பழங்குடிகள் பாதுகாப்புக் கழகம், தேசிய இந்திய சங்கம், ரோயல் கொலனியல் இன்ஸ்டிடியூட் ஆகிய அமைப்புகளும் இவர்களது கோரிக்கைக்கு தமது ஆதரவை வழங்கின. இவ்விடயம் தொடர்பாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பல தடவைகள் பேசப்பட்டன.

இதன் விளைவாக இலங்கை அரசு தோட்டக் கல்வி உதவி வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. எனினும் இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை. பாடசாலையை ஆரம்பித்து நடத்த வேண்டிய பொறுப்பு தோட்ட நிர்வாகத்தினுடையதாக இருந்ததோடு அரசு தரும் உதவித் தொகைக்காக ஒரு வருடத்துக்கும் அதிக அதிகமான காலம் காத்திருக்கவும் வேண்டியிருந்தது. அதுவரை பாடசாலைக் கட்டடம், தளபாடங்கள், ஆசிரியர் சம்பளம், என்பவற்றை தோட்ட நிர்வாகம் பொறுப்பெற்கவேண்டியிருந்தது. மேலும் வழங்கிய உதவித் தொகை சிறியதாக இருந்தது. பாடசாலை அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதை நிரூபித்தால் மட்டுமே பெரிய உதவித் தொகை கிடைக்கும் என்ற நிபந்தனையை துரைமார் விரும்பவில்லை.

இத்திட்டத்தின் தோல்வியைத் தொடர்ந்து ஜே. ஹார்வார்ட் என்ற அரசு அதிகாரி புதிய திட்டமொன்றை உருவாக்கினார். ஒவ்வொரு தோட்டத்திலும் தனித்தனியாக பாடசாலை அமைக்காமல் சில தோட்டங்களுக்கு மத்தியில் பொதுவான ஒரு பள்ளியை அமைப்பது இவரது திட்டமாகும். ஆனால் இதுவும் நடைமுறை சாத்தியமானதல்ல என நிராகரிக்கப்பட்டது. ஏனெனில், பிள்ளைகள் பாடசாலைக்கு வெகு தூரத்தில் இருந்து வரவேண்டியிருந்ததும், சிறுவர்கள் தோட்டங்களில் தொழில் செய்து வருமானம் பெறும் வாய்ப்பை இழக்கச் செய்ததும் இதற்கான காரணங்களாகும்.

இதன் பின்னர் ஆங்கிலேயே அதிகாரியான எஸ். எம். பறோவ்ஸ் என்பவர் நேரிடையாக ஆய்வு செய்து மற்றொரு திட்டத்தை முன்வைத்தார். பழைய பாடசாலைக் கல்வி முறைக்கு பதிலாக லயன்களிலேயே சிறு சிறு லயப் பாடசாலைகளை நடத்துவது என்பதே இத்திட்டம். இது செலவு குறைவான திட்டம் என்பதால் அரசும், தோட்ட நிர்வாகங்களும் இத்திட்டத்தை வரவேற்றன. எனினும் இத்திட்டத்தை லண்டனிலுள்ள 'அழுத்தக் குழு' வினர் வரவேற்கவில்லை. இதன் பின்னர் முழு இலங்கைக்குமான கல்விச் சீர்த்திருத்தங்களை ஆராயுமுகமாக நியமனம் செய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆணைக்குழுவிடம் பொருத்தமான யோசனைகளை தோட்டக் கல்வி தொடர்பாக ஆராய்ந்து அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.



இந்த ஆணைக்குழு அளித்த அறிக்கையில் இரண்டு முக்கிய விடயங்கள் சொல்லப்பட்டிருந்தன. முதலாவது, குறிப்பிட்ட நேரங்களில் மாணவர்கள் கட்டாயமாக பாடசாலைக்கு செல்லவேண்டும் என்று கட்டாயப்படுத்தத்தேவையில்லை என்பதாகும். தோட்டங்களில் கல்வியைக் கட்டாயப்படுத்துவதற்கான சூழல் இன்னும் ஏற்படவில்லை என்பது இரண்டாவது விடயமாகும். இவ்வாறு கட்டாயப்படுத்துவது தோட்ட நிர்வாகங்கள் மட்டுமன்றி தொழிலாளர்களும் விரும்பவில்லை என்பது ஆணைக்குழுவின் கருத்தாக இருந்தது. இந்தக் கருத்துகள் தோட்ட நிர்வாகங்களுக்கு சார்பானவையாக இருந்தன. இது பற்றி சிலோன் ஒப்சேர்வர் வார இதழ் 'இன்றைய பயிர்செய்கை கோட்பாட்டோடு வைத்து பார்க்கும்போது தோட்டங்களில் கட்டாயக் கல்வி என்பது காலத்துக்கு ஒவ்வாதது' என்றெழுதி இருந்தது.

கச்சி

# மொழிக்கொள்கையும் இனப்பிரச்சினையும்

யாழ்ப்பாண இணைப்பதிகாரியாக கேர்ணல் ரிச்சர்ட் உடுகம நியமிக்கப்பட்ட பின்னர் அவரது இரும்புக்கர நிர்வாகத்தின் கீழ் எதிர்ப்பியக்கம் அடக்கியொடுக்கப் பட்டது. எவ்வாறு இருப்பினும் கைது செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் உட்பட சகல மக்கள் பிரதிநிதிகளும் 1961ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ந் திகதி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். ஆயினும் பிற்கால சம்பவங்களை சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது தமிழரசுக்கட்சி தமது போராட்டத்தினை கைவிடாது முன்கொண்டு செல்ல முயற்சி செய்ததை நாம் காண முடிகிறது.

1961ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி எஸ். ஜே. வி செல்வநாயகம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில்,

சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரின் அரசு தமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென்றும் மொழிக்கொள்கையை எதேச்சாதிகாரப் பாணியில் வழிநடத்தினார் என்றும் மிகவும் காரசாரமாக குற்றம் சாட்டினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த தமிழரசு கட்சித் தலைவர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசு மீண்டும் ஒரு முறை தமது

எனவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான டட்லி சேனாநாயக்கவும் தமிழரசு கட்சியின் தலைவர் செல்வநாயகமும் பலசுற்று கலந்துரையாடல்களை நடத்தினார்கள்.

இக்கலந்துரையாடல்களின்போது அதுவரை சிக்கலான நிலையில் இருந்த மொழிப் பிரச்சினையை தீர்த்து வைப்பது டட்லி செல்வா கலந்துரையாடல்களின் அடிப்படை தொனிப்பொருளாக இருந்தது. இப்பிரச்சினை உட்பட இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் பொருட்டு நிர்வாக அதிகாரத்தை பன்முகப்படுத்துவதற்கான கூட்ட ஏற்பாடுகளை வரைதல் பற்றி இணக்கப்பாடுகளை கொண்ட ஒரு ஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு புதிய அரசு அமைப்பதற்கு முன்பு டட்லி சேனாநாயக்கவுக்கும் செல்வநாயகத்துக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.

பிற்காலத்திலே டட்லி- செல்வா உடன்படிக்கை என்று அழைக்கப்பட்ட இந்த இணக்கப்பாடு பிற்காலத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தில் முக்கியமாக தமிழ் மொழிக் கொள்கை பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆகவே டட்லி - செல்வா உடன்படிக்கையை பற்றி சற்று விளக்கமாக விடயங்களை சீர்தூக்கி பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

4. காணி அபிவிருத்தி அரசாணை சட்டத்தின் கீழ் இலங்கைவாசிகளுக்கு காணிகளை பகிர்ந்தளிக்க ஆவனசெய்யும் வகையில் அச்சட்டம் திருத்தி அமைக்கப்படும். குடியேற்றத் திட்டங்களுக்கமைய வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை பகிர்ந்தளிக்கும்போது கீழ்க்காணும் முன்னுரிமையை கடைப்பிடிப்பதாக டட்லி சேனாநாயக்க உடன்பட்டார்.

அ. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் முதலில் மாவட்டத்துக்குள் இருக்கும் காணி அற்றவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஆ. இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் வதிவாக உள்ள தமிழ் மொழியை பேசுபவர்களுக்கும்

இ. மூன்றாவதாக நாட்டின் ஏனைய இடங்களில் வதிவாக இருக்கும் தமிழ் பிரஜைகளுக்கு பிரத்தியேக கவனிப்புடன் இலங்கையின் ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்படவேண்டும்.

### கையொப்பம்

டட்லி சேனாநாயக்க /
எஸ்.ஜே.வி. செல்வநாயகம்
திகதி 65.03.24

1965 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஆதரவுடன் ஐ.தே.கட்சி அரசை அமைத்ததுடன் ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிச கட்சி, திராவிட சங்கம், தமிழரசு கட்சி மற்றும் பல கட்சிகளின் ஆதரவு அந்த அரசுக்கு கிடைத்தது. இந்த அரசின் உள்ளூராட்சி அமைச்சராக தமிழரசுக் கட்சியின் எம். திருச்செல்வம் நியமிக்கப்பட்டார். நிலைமை இவ்வாறு இருக்க இந்த அரசு ஓர் பெரும் சவாலை எதிர்நோக்கியது.

அதாவது பிற்காலத்தில் பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்திய டட்லி- செல்வா உடன்பாட்டை செயற்படுத்துவதே அப்பெரும் சவாலாகும். ஒன்றையொன்று சகிக்காத பல்வேறு கட்சிகளை உள்ளடக்கிய அரசுக்குள் இந்த உடன்பாட்டை அமுல் நடத்துவது ஒரு சிக்கலான அரசியல் அப்பியாசமாக தென்பட்டது.

இந்த அரசின் அமைப்பை பற்றியும் அரசியல் செயற்பாட்டை பற்றியும் விமர்சனம் தெரிவிக்கும் லயனல் போபகே தாம் எழுதிய இனப்பிரச்சியை பற்றிய மார்க்ஸிய விமர்சனம் (ஜாதிக கெடலுவ கென மார்க்ஸ்வாதி விக்ரயக்- 1977) எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார்.

''1948இல் திரு பொன்னம்பலம் ஐக்கிய தேசிய கட்சி அரசுடன் இணைந்து ஐக்கிய தேசிய அரசின் அமைச்சர் பதவியை பெற முன்வந்தமையும் அதன் பின்பு தமிழரசுக் கட்சி ஓர் தனிக்கட்சி என்ற முறையில் முதலாளித்துவ ஐ.தே.கட்சியின் அரசுடன் தள்ளப்பட்டமையை டட்லி சேனாநாயக்க அவர்கள் மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்," என்று குறிப்பிடுகிறார்.

மேலும் டட்லி- செல்வா உடன்படிக்கை பண்டா- செல்வா உடன்படிக்கையின் அளவுக்காவது அதிகாரத்தை பன்முகப்படுத்த அல்லது சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு உரித்தான ஓர் ஆவணமாக காணப்படவில்லை.

மொழி, நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் காணி போன்ற சில விடயங்களை பற்றி மட்டும் கவனம் செலுத்திய இலகு ஆவணமாகவே காணப்பட்டபோதிலும் எதிர்க்கட்சியினர் இந்த ஆவணத்தை பெரும் பூச்சாண்டியாக படம் பிடித்து காட்டினார்.

இவ்வாறு மிகவும் குறைந்த மட்டத்திலேனும் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க தெற்கு அரசியல் கட்சிகள் விரும்பாமை எதிர்காலத்தில் ஒரு பெரும் பிரச்சினையை தோற்றுவிக்கும் என்பதை குறுகிய அரசியல் நோக்கங்களினால் குருடாகிப் போயிருந்த அரசியல்வாதிகளினால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கை முன்வைக்கப்பட்டபோது எவ்வாறு ஐ.தே.கட்சி பொறுப்பற்ற விதத்தில்

# டட்லி - செல்வா உடன்படிக்கை

மக்களை ஏமாற்றியிருப்பதாகவும் அதன் தீய விளைவுகளை மிக விரைவில் நாடு அனுபவிக்கும் என்றும் கூறினார்.

நாம் இச்சம்பவங்களை உற்று நோக்கும்பொழுது தெளிவாக விளங்கிக் கொள்வது என்னவென்றால், மொழிப்பிரச்சினை உட்பட இனப் பிரச்சினையை தீர்த்து வைக்க பல சந்தர்ப்பங்கள் கிடைத்து இரு சாராரினதும் விதண்டாவாதப் போக்கினால் அச்சந்தர்ப்பங்கள் நழுவிப் போயின என்பதாகும்.

பதவியில் இருந்த அரசும் அதற்கு எதிராக இருந்த தமிழ் கட்சிகளும் புரிந்துணர்வோடு நடைமுறை சாத்தியமான ஒரு வழிமுறையை கையாண்டிருந்தால் பிற்காலத்திலே எமது நாட்டில் ஏற்பட்ட தீய விளைவு-களை சந்திக்க நேரிட்டிராது. இந்த வரலாறு எமக்கு புகட்டும் சிறந்த பாடம் அதுவாகும்.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல், இனப்பிரச்சினை தொடர்பாக மிக முக்கியமான ஒரு தேர்தலாக கருத முடியும். இத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை ஆசனங்களை வெற்றி கொண்டபோதிலும் பலமான ஒரு அரசை ஏற்படுத்துவற்கு அவ்வெற்றி போதுமானதாக அமையவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியை தவிர்த்து அதற்கு அடுத்ததாக அதிக ஆசனங்களை பெற்றிருந்த சிறு கட்சி தமிழரசுக்கட்சியாகும்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு பலமான ஆட்சியை அமைப்பதற்கு தமிழரசு கட்சியின் 14 ஆசனங்கள் மிக முக்கியமாகத் தேவைப்பட்டது. அது மட்டுமல்ல. ஆட்சியில் உயிருட்டமாக பங்கு கொள்ளவும் இனப்பிரச்சினைக்கு சடுதியான ஒரு தீர்வை காணவும் அரசு மீது அழுத்தத்தை செலுத்தவும் இச்சூழ்நிலை ஏதுவாக அமைந்திருந்தது.

அவ்வொப்பந்தம் பின்வருமாறு:

தமிழ்மொழி பேசும் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுடன் தொடர்-புடைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் நிலையான அரசொன்றை தாபிப்பதை உறுதிப்படுத்தும் முகமாக கீழ்காணும் வகையில் செயலாற்ற டட்லி சேனாநாயக்கவும் செல்வநாயகமும் உடன்பட்டனர்.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக தமிழ் மொழியை பிரகடனப்படுத்துவதற்கு தமிழ் மொழி விசேட ஏற்பாடு சட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் மொழியை பேசும் எந்தவொரு நபருக்கும் நாட்டின் எந்தவொரு இடத்திலும் தமிழ் மொழியில் செயலாற்றும் உரிமை உரித்தாக வேண்டும் என்ற கொள்கையை தமது கட்சி ஏற்றுக்கொள்கிறது என டட்லி சேனாநாயக்க விளக்கினார்.

2. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் தமிழ் மொழியில் செயற்படுத்தக்கூடியதாக நீதிமன்ற மொழிச் சட்டத்தினை திருத்தி அமைப்பதும் தமது கட்சியின் கொள்கை என டட்லி சேனாநாயக்க குறிப்பிட்டார்.

3. இரு தலைவர்களும் பரஸ்பர இணக்கப்பாட்டுக்கு வரும் வகையிலான அதிகாரம் கொண்ட மாவட்ட சபைகள் இலங்கையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறு இருப்பினும் தேசிய ரீதியிலான தேவையின் அடிப்படையில் அச்சபைகளுக்கு ஆணையிடும் அதிகாரம் அரசுக்கு உரித்தாக வேண்டும் என்று இரு சாராரும் உடன்பட்டனர்.



எஸ்.ஜே.வி.





என்.எம்.பெரேரா

ஒன்றிணைந்தமையும் மிக முக்கியமான விடயமாகும். இச்சகல இனவாத முதலாளித்துவ கட்சிகளுல் தீவிர சிக்கலில் இனவாத கட்சியான 'ஜாதிக விமுக்தி பெரமுன'யும் தமிழர்களின் தோலால் தைக்கப்பட்ட செருப்புகளை அணிவேன் என்று கூறிய அதன் தலைவரே கே.எம்.பி ராஜரட்ணயும் தமிழரசுக் கட்சி மற்றும் திராவிட சங்கத்துடன் இணைந்து தேசிய அரசை உருவாக்கியமை ஓர் விசேட விடயம்."

மேற்கூறியவாறு டட்லி சேனாநாயக்கவும் செல்வநாயகமும் உடன்பட்ட ஒப்பந்தத்தை இரு சாராரும் ரகசியமாக வைத்திருக்க முயன்றபோதிலும் அப்போது பிரபல்யமாக விளங்கிய 'அத்த' எனும் புதினப் பத்திரிகை அந்த ஒப்பந்தத்தின் ஒரு பிரதியை பெற்று தனது பத்திரிகையில் பிரசுரித்தது. இது இலங்கையில் பல குழப்பமான நிலையை தோற்றுவிக்க காரணமாக இருந்ததுடன் டட்லி சேனாநாயக்க அரசை மிக இக்கட்டான நிலைக்கு தள்ளியது.

இச்சந்தர்ப்பத்திலே நாம் கவனத்திற்கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயம் என்னவென்றால் எப்போது இலங்கையில் பிரபல்யம் பெற்று விளங்கிய இடது சாரி கட்சிகளான

லங்கா சமசமாச கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு எதிராக போராட்டத்தில் இறங்கின.

இந்நிலையை விமர்சிக்கும் ரஞ்சித் ஆனந்த ஜயசிங்ஹ இடது சாரி கட்சிகளின் இச்செயற்பாட்டினை இவ்வாறு விளக்குகிறார்:

''ஒரு மொழி என்றால் இரு நாடுகள் இரு மொழி என்றால் ஒரு நாடு என்று கூறிய இடது சாரி தலைவர்கள் முதல் முறையாக இனவாத நிலைப்பாட்டுக்கு நடந்துகொண்டதோ இத்தருணத்தில் ஸ்ரீ.ல.சு.க உட்பட இடது சாரி கட்சிகளும் நடந்து கொண்டன.

இடது சாரி கட்சிகளின் இந்த நடத்தை பற்றி தமது கருத்தை தெரிவிக்கும் லயனல் போபகே தமது நூலில் இவ்வாறு கூறுகிறார்.

''1964ஆம் ஆண்டு ஜூன் மாதம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ஸ்ரீலங்கா சமசமாச கூட்டு அரசு, அரசு கரும மொழி சட்டத்தினையும் தமிழ் மொழி சட்டத்தினையும் தமிழ் மொழி அமுலாக்கல் சட்டத்தினையும் சிங்கள-தமிழ் எனும் இரு சாராருக்கும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த தேவையான பிரமாணங்களை மட்டுமே வெளியிட்டது. இப்பிரமாணங்களின் கீழ் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் மட்டும் எடுத்த போதிலும் அதற்கு அப்பால் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள லங்கா சமசமாச கட்சி எதிர்பார்க்கவில்லை.

மொழி பற்றி அரசின் தீர்மானங்களை அமுல்படுத்தும் பொறுப்பு நிதி அமைச்சர் என்.எம் பெரேரா, நிதி அமைச்சர் ஜி.சி.டி.டி சில்வா மற்றும் கட்சி அமைச்சர் பீ. பீ. ஜீ கலுகல்ல உள்ளிட்ட அமைச்சரவை உப குழுவே பொறுப்பேற்றிருந்தது.

லங்கா சமசமாக கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இதுவரை கடைப்பிடித்த லெனினிசம் அற்ற கொள்கையையும் கைவிட்டு வெளிப்படையாக முதலாளித்துவ சிங்கள குடும்பங்களுடன் கூட்டாட்சியை ஏற்படுத்தி தமிழ் பேசும் மக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை அடக்கியொடுக்குவதற்கு சிங்கள முதலாளித்துவ கும்பல்களுக்கு உதவி செய்யும் பணி இக்காலத்தில் ஆரம்பமாகிறது"

(தொடரும்)

கடந்த வாரம் ஒரு மாலை வேளை சென்னை கோடாம்பக்கத்தின் ரங்கராஜன்புரம் ஓரிரு வாகனங்களை மட்டுமே உள்வாங்கி கொண்டு அமைதியாக இருந்தது. பெல்லவி அடுக்குமாடி கட்டிடத்தின் அருகே தமிழகத்திற்கே உரித்தான ஒரு சிறிய பெட்டிக்கடை பெஞ்சு, மடித்து கட்டிய வேட்டியோடு டீயை ருசித்து கொண்டிருக்கும் மனிதர்களோடு விஜய் டீவி புகழ் கோபிநாத்தும் டீ கிளாசோடு நின்றுகொண்டிருக்கிறார். அப்போது அந்த வழியாக வந்த ஒரு இளைஞன் கோபியை பார்த்து "ஆ... கோபி சார் நீங்களா உங்களை பேஸ்புக், டுவிட்டர்னு தேடிக்கிட்டிருக்கிறேன். நீங்க எங்கே சார் இங்கே?" என்கிறார் ஆச்சரியத்தோடு. "டேய் உன்ன யாருடா அங்கெல்லாம் தேடச்சொன்னது? நேரா ரங்கராஜபுரத்திற்கு வா நான் இந்த பெட்டிக்கடையில்தான் இருப்பேன்," என்று அலட்டல் இல்லாமல் பதில் வந்து விழுந்தது.

கோபிநாத் புதுக்கோட்டை அறந்தாங்கியை பிறப்பிடமாக கொண்டவர். அறந்தாங்கி அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆரம்பகல்வியை கற்றிருக்கிறார். அதற்குப் பிறகு சென்னையில் சில காலம் படித்திருக்கிறாராம்.

"செய்தியாளர் என்பதுதான் என்னுடைய அடையாளம். மற்றவைகள் எல்லாம் அதில் இருந்து வந்த பிற அடையாளங்கள்தான். திரைக்கு முன்னாலும் பின்னாலும் பணியாற்றி வருகிறேன். ஆரம்பத்தில் என்.டீவி, சி.என்.பி.சீ ஆகியவைகளில் செய்தியாளராக பணியாற்றியிருக்கிறேன். நான் தொலைக்காட்சிகளில் செய்த நிகழ்ச்சிகள் பெரும்பாலும் சமூகத்தின் பின்புலத்தை ஒட்டியதாகவே இருக்கிறது. சிகரம் தொட்ட தமிழர்கள், சிகரம் தொட்ட மனிதர்கள், மக்கள் யார் பக்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை குறிப்பிடலாம்," என்று சொல்லும்போது அவர் முகத்தில் ஒரு புன்னகை.

சொல்ல ஆளில்லாத நிலையில் நான் சொல்லும் கருத்தெல்லாம் சரியாகத்தான் தெரியும். ஆனால் ஒருத்தர் அந்தக் கருத்தை மறுத்துச் சொல்லும்போது எனது கருத்து மறுபரிசீலனை செய்யப்படுகிறது. அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராகவும் இருக்கிறோம். பொசிடிவ்வும், நெகடிவ்வும் சேராமல் நமக்கு மின்சாரம் வருமா? அது மாதிரிதான் இதுவும்

ஆரம்பத்தில் ஒரு மணிநேரமாக தொடங்கப்பட்ட இந்நிகழ்ச்சி பிறகு 2 மணி நேரமாக மாற்றப்பட்டது. பேசுவதற்கு நிறைய விசயங்கள் இருப்பதால் நேரமும் அதிகரிக்கப்பட்டது. தமிழர்கள் இயல்பாகவே கருத்துக்களை முன்வைப்பதில் கில்லாடிகள். அதனால் நமது மக்கள் பேசுவதை பார்த்து நாம் ஆச்சரியப்பட அவசியமில்லை. அவர்களுக்கு இப்போது பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது; அவ்வளவுதான். நாங்கள் பேச்சாளர்களை தேர்வு செய்வதில்லை. சாதாரண மனிதர்களைத்தான் தெரிவு செய்கிறோம். அப்படி தெரிவு செய்பவர்களிடம் பேச வைத்து ஒத்திகை எதுவும் பார்ப்பதில்லை. ஒத்திகையில் அவர்கள் எல்லாவற்றையும் பேசிவிட்டால் பிறகு அவர்கள் எப்படி மேடையில் பேசுவார்கள்? நான் அவர்களை நேரிடையாக நிகழ்ச்சியில்தான் சந்திக்கிறேன்," என்று சொல்லும் கோபியிடம், ஆச்சர்யம், அமானுஷ்யம் ஆகிய சொற்களை நீங்கள் உச்சரிக்கும்போது அது தனி அழகாக இருக்கிறதே, எப்படி கண்டு பிடித்தீர்கள்? என்று கேட்டோம்.

"அந்த வார்த்தையே ஒரு மிரட்சியானதுதான். நடந்தது என்ன இயக்குனர்



இன்று ஊடகங்களின் வழியாகத்தான் மொழி கற்பிக்கப்படுகிறது. இன்று பொதுத் தமிழ், வட்டார வழக்குகளை மீறி வந்திருக்கிறது

மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com

# "மொழியை நான் எனது அடையாளமாக நினைக்கவில்லை"

## மனம் திறக்கிறார் கோபிநாத்

ஏழு வருடங்களைக் கடந்து வெற்றிகரமாக பயணிக்கும் நீயா, நானா? பற்றி கேட்டோம். "நீயா நானா ஒரு டீம் வொர்க். இரு துருவங்களைச் சேர்ந்த மனிதர்கள் அறிவு ரீதியாக மோதினால் எப்படி இருக்கும் என்ற எண்ணம்தான் அந்த நிகழ்ச்சி. மக்களின் மன ஓட்டத்தை முழுவதுமாக வெளிப்படுத்த ஒரு பொது மேடை அமைத்து கொடுத்திருக்கிறோம்.

பொசிடிவ்வை, நெகடிவ் வெறுப்பதும், நெகடிவ்வை பொசிட்டிவ் வெறுப்பதும் வாடிக்கையாகிவிட்ட இந்தக் காலத்தில் இந்த நிகழ்ச்சி பலவிதமான கருத்துக்களின் சங்கமம் என்றுதான் சொல்லவேண்டும். மறுத்து

'ஆங்கிலம் கலந்து தமிழ் பேசுவது மிகப் பெரும் குற்றமாகாது'

'ஒருவர் நல்ல தமிழில் பேசும்போது அவர் நல்ல தமிழில் பேசுகிறார் என்று பாராட்ட வேண்டாம்'

'தமிழ் மொழியை உணர்வு பூர்வமான ஒரு சடங்காக பார்ப்பதை நிறுத்தவேண்டும். மொழி கற்றலின் அடிப்படையில் பார்க்கவேண்டிய ஒன்று'

சாய்ராம்தான் அந்த வார்த்தையை என்னிடம் சொன்னார். பிறகு அந்த வார்த்தையை பேசிய பிறகு அவரே என்னை பாராட்டவும் செய்தார். நான் எனது எழுத்துக்களிலும், பேச்சிலும் நிறைய தமிழ் வார்த்தைகளை பயன்படுத்துகிறேன். நீங்கள் உட்பட எல்லோரும் இந்த ஆச்சர்யம், அமானுஷ்யம் பற்றிதான் பேசுகிறீர்கள். Flexibility நெகிழ்வுத்திறன் என்ற வார்த்தையை நான் மட்டும்தான் ஊடகத்தில் பயன்படுத்துகிறேன். ஏனென்றால் இன்று ஊடகத்தின் வழியாகத்தான் மொழி கற்பிக்கப்படுகிறது. வட்டார வழக்குகள் குறைந்துப்போய் பொதுத் தமிழ் வந்து விட்டது. ஊடகம் சொல்வதுதான் தமிழென்று ஆகிவிட்டது. அப்படி பார்த்தீர்கள் என்றால் நெகிழ்வுதிறனில் தொடங்கி, சமூக விழுமியங்கள் வரை நான் நிறைய தமிழ் சொற்களை அறிமுகம் செய்கிறேன். இப்படியான வார்த்தைகளை நான் பயன்படுத்தவதற்குக் காரணம், ஊடகத்தின் வழியாகத்தான் மொழி எல்லோருக்கும் போய்ச் சேருகிறது. திசைவழி என்ற வார்த்தையை கோபிநாத் சொல்கிறாரே என்று கோபிநாத்தை விரும்புகிறவர்கள். அதைப் பற்றி பேசுகிறார்கள். அந்த சொல்லைப் பற்றி ஆராயவும் செய்கிறார்கள். அதனால் அமானுஷ்யம் மட்டும் கோபிநாத் அறிமுகம் செய்தது அல்ல, அதை விட அழகான பல வார்த்தைகளை நான் அறிமுகம் செய்திருக்கிறேன்," என்று படபடத்தவர் மீண்டும் பேசினார்.

"தமிழில் நல்ல தமிழ் கெட்ட தமிழ் என்று எதுவும் கிடையாது. தமிழே நல்ல தமிழ்தான். புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்கள் பேசினால் ஆங்கிலத்தில் பேசுவார்கள். அல்லது தமிழில் மட்டுமே பேசுவார்கள். ஆனால் நாம் ஆங்கிலம் கலந்த ஒரு தமிழை பேசுகிறோம். அது மிகப் பெரிய குற்றமாகாது. ஏன் என்றால் எனக்கு ஆங்கிலத்தை விட தமிழ் பலமான மொழி என்பது தெரியும்.

இதனால் தமிழுக்கு ஒன்றும் ஆகிவிடாது. இது ஒரு செம்மொழி. இதற்கு தன்னை காப்பாற்றி கொள்கிற, தன்னை தற்காத்துக் கொண்டு தன்னை மென்மேலும் வலுப்படுத்திக்கொள்கிற தன்மை உள்ளது. எல்லா இலக்கண அளவுகளும் அதுக்குள்ளேயே இருக்கு. அதனால் இந்த மொழியையெல்லாம் நாம் காப்பாற்ற முடியாது. மொழிதான் நம்மள காப்பாற்றும். அதனால் யாரும் தமிழில் பேசும்போது நீங்கள் ரொம்ப அருமையாக நல்ல தமிழில் பேசுகிறீர்கள் என்று அவரைப் பாராட்டுவதை முதலில் நிறுத்தணும். ஏனென்றால் அது ஒரு கூடுதல் சிறப்பு மாதிரி தெரிகிறது. தமிழ்நாட்டில் மட்டும் தான் தமிழ் பேசினால் பாராட்டுகிறார்கள். தாய்மொழியை பேசுவதற்கு எதற்கு பாராட்டணும்? ஆங்கிலம் கலந்து தமிழ் பேசுகிறவர்கள் என்ற விமர்சத்தை ஒரு பக்கம் வைத்து விட்டு முடிந்தவரை தமிழில் பேசுங்கள். தானாகவே மற்றவனும் பேசுவான். ரஷ்யன் லத்தீன் மொழியில் பேசணும் என்றுதான் ஆசைப்படுகிறான். ஒவ்வொருவரும் மற்ற மொழிகளின் மீது தீராத காதலோடுதான் இருக்கிறார்கள். அடுத்தவன் வீட்டு மல்லிகை அதிகம் மணக்கும் என்பதுபோல. இது யதார்த்தத்தில் இருக்கக்கூடிய உண்மை. ஏனென்றால் தன் மொழியின் மீது உள்ள ஆளுமை தெரியாதவர்களாக இருப்பதால், இந்த பிறமொழி காதல் உண்டாகிறது. மொழிக்கலப்பு என்பது இப்போது வந்த ஒன்றல்ல. அது காலா காலமாக இருந்து வருகிறது. இனிமேலாவது மொழியை உணர்வுபூர்வமான ஒரு சடங்காக பார்க்காதீர்கள். அதை கற்றலின் அடிப்படையில்தான் பார்க்கவேண்டியது.


கணனிக்குள் தமிழை கொண்டு வருவது; கணனி வழியாக தமிழை கொண்டுபோய் சேர்ப்பது என்ற காலக்கட்டத்தில நாம் இருக்கிறோம். இப்போ அதைதான் செய்யவேண்டும். அதை விட்டு விட்டு எல்லோரும் செந் தமிழில் பேசுங்கள் என்பதெல்லாம் எவ்வளவு தூரம் சரிபட்டு வரும் என்பது எனக்குப் புரியவில்லை. எனக்கு என் மொழியை அழகாக பேச முடியும் என்கிற ஒரு நம்பிக்கை இருக்கிறது. ரொம்பவும் மொடர்னாக தமிழை பேசமுடியும். அதற்கான முன்னுதாரணங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மயில்வாகனம், கே.எஸ். ராஜா, அப்துல் ஹமீத் போன்றவர்கள் தமிழில் மிக அழகாக பேசுபவர்கள். இவ்வளவு ஸ்டைலாக எவனுக்கு தமிழ் பேச முடியும்? ஆனால் ஆங்கிலத்தில்தான் அழகாக பேச முடியும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

(31ஆம் பக்கம் பார்க்க)



நிதர்சனமாகும் விண்ணியல் கோட்பாடுகள்

# விண்வெளியில் உருவாகும் புதிய கிரகம்



உருவாகிவரும் இரண்டு கிரகங்கள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது

சத்யா

இந்தப் பிரபஞ்சமும் சூரியக்குடும்பமும் எப்படிப்பட்டது என்பது பற்றி நமக்கு எவ்வாறு சொல்லித்தரப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால் விஞ்ஞானம் சொல்வதோ வேறு விதமாக.

விண்வெளி பௌதீகத் துறை இந்தப் பிரபஞ்சம் மொத்தமும் ஒன்றில் இருந்துதான்- அது வெடித்துச் சிதறியதன் மூலம் தான் - உருவானது என்ற கோட்பாட்டை பல வருங்களுக்கு முன்னரேயே நிறுவியிருந்தது. ஆங்கிலத்தில் இதை BIG BANG கோட்பாடு என்று அழைக்கிறார்கள். இது தவறானது என்ற திசையில் ஏராளமான விவாதங்கள் முன் வைக்கப்பட்ட போதிலும் இறுதியாக உலக விண்வெளி விஞ்ஞானிகள் பெரு வெடிப்பு கோட்பாட்டை ஏற்றுக்கொண்டார்கள்.



எனினும் சந்தேகங்கள் இல்லாமல் இல்லை. இந்த சந்தேகமும் கடந்த ஆண்டு தீர்க்கப்பட்டது. இந்த பெரு வெடிப்பு நிகழ்ந்தபோது உடனடியாக ஒரு துகள்- கடவுளின் துகள்- தோன்றியிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பீட்டர் ஹிக்ஸ் என்ற விஞ்ஞானி நிறுவினார். ஸ்தூல பொருட்கள் உருவாகுவதற்கு 12 அணுக்களே காரணம் என்பது முன்னர் கண்டு பிடிக்கப்பட்டது. அவற்றில் 11 துகள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மிகுதி ஒன்று மட்டும் விஞ்ஞானிகளிடம் சிக்கவில்லை. இதற்கென அமெரிக்கா பல கோடி டொலர்களை செலவிட்டும் அது சிக்காத நிலையில் ஹிக்ஸ் பொஸானைக் கண்டு பிடிக்கும் ஆய்வை அமெரிக்கா கைவிட்டது.

ஆனால் அந்த துகள் இருக்கவே வேண்டும் என்பதை உணர்ந்த ஐரோப்பிய அணு ஆய்வு மையம், பல்கோடி டொலர் செலவில் 37 ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்போடு ஒரு நிலத்தடி அணு உலையை சுவிட்சர்லாந்தில் அமைத்தது. புரோட்டன்களை அதிவேகத்தில் மோதவிட்டதில் கடந்த ஆண்டு அந்த மர்மத் துகள்- ஹிக்ஸ் பொஸான்- வெளிப்பட்டு மறைந்தது. இந்தத் துகளே பொருட்களுக்கு நிறையைத் தருகிறது.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம், மனித ஆய்வின் மூலம் நிறுவப்படும் கோட்பாடுகள் பின்னர் பரிசோதனைகளில் நிரூபிக்கப்படுவதுதான். இதன் மூலம் இப் பிரபஞ்சமே பெருவெடிப்பின் பின்னரேயே தோற்றம் பெற்றது என்பது ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்பெரு வெடிப்பு கோட்பாட்டுக்கு முன்னரேயே, தூசு மேகங்கள் மற்றும் வாயு கோளங்களின் சேர்க்கையாலேயே விண்மீன்களும் கிரகங்களும் தோன்றின என்றும் பிரபஞ்சம் இன்றைக்கும் விரிந்து பரவிச் சென்று கொண்டே இருப்பதால் விண் மீன்களும் கோள்களும் ஒரு பக்கம் அழிந்து கொண்டிருக்க புதிய நட்சத்திரங்களும் கோள்களும் இன்னொரு பக்கத்தில் உருவாகிக்கொண்டிருக்கின்றன என்ற கோட்பாட்டை விண்ணியல் நிபுணர்கள் முன் வைத்தனர். அதாவது நமக்குச் சொல்லபட்டதைப்போல, படைப்பு என்பது நிகழந்து முடிந்த ஒன்றல்ல; அது இன்னும் நிகழந்து கொண்டே இருக்கிறது என்பதே இக்கோட்பாடாகும்.

இதற்கு சான்றாக, சுப்பர் நோவாவாக மாறிய பெரும் நடசத்திரங்கள் வெடித்து சிதறுவதையும், சூரியனைப் போன்ற மத்திய தர நட்சத்திரங்கள் ரெட் ஜயண்ட் எனப்படும் சிவப்பு அசுரனாக மாறுவதையும், சிறிய நட்த்திரங்கள் பல்சார் மற்றும் கருங்குள்ளானாக மாறுவதையும் விஞ்ஞானிகள் தொலைநோக்கிப் புகைப்படங்கள் வாயிலாக நிரூபித்துள்ளனர். தூசு மேகங்களுக்கு இடையே இள நட்சத்திரங்கள் தோன்றி கண் சிமிட்டுவதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

தற்போது மற்றுமொரு அரிய புகைப்படம் நமக்குக் கிடைத்துள்ளது. தொலைத்தூர தூசு மேகமொன்றில் கிரகம் ஒன்று உருவாகும் படம்தான் அது. பூமியில் இருந்து 450 ஒளிவருடாங்களுக்கு அப்பால் அமைந்திருக்கும் புதிய விண்மீனுக்கு எச் டி 142527 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த விண்மீனைச் சுற்றிலும் வாயு மற்றும் தூசு மேகங்கள் சூழந்துள்ளன. முதல் தடவையாக விஞ்ஞானிகள் இந்த நட்சத்திரத்துக்கு அருகே ஒரு கிரகம் உருவாகி வருவதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். கிரகங்கள் எப்படி உருவாகின்றன என்பதற்கு இது சான்றாக அமைந்திருக்கிறது.

இந்த விண்மீன் 20 லட்சம் ஆண்டு வயதுடையதாக இருக்கவேண்டும் என நிபுணர்கள் கணித்துள்ளனர். பிரபஞ்ச அளவில் இது நட்சத்திரமொன்றின் பால்ய வயதாகும், முன்பள்ளி வயது என்று வைத்துக்கொள்ளுங்களேன். இந்த நட்சத்திரம் வயது ஏறும்போது மேலும் பெருத்து சூரியனை விட இரண்டு மடங்கு பெரிதாகிவிடும் என்றும் கணித்திருக்கிறார்கள்.

இந்த விண்மீனைச் சுற்றியுள்ள வாயு- தூசு மேகங்களில் இருந்து இந்தக் கிரகம் உருவாகி வருவதாகவும் வியாழக் கிரகத்தைப் போல ஒரு வாயுக்கள் அடங்கிய கிரகமாக இது இருக்கும் என்று கூறப்படுகிறது. கூடவே இன்னொரு கிரகமும் உருவாகி வருகிறது.

சிலி நாட்டின் அன்டாஸ் மலைப் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து ஐயாயிரம் மீட்டர் உயரத்தில் நிறுவப்பட்டிருக்கும் ரேடியோ தொலைநோக்கியை உபயோகித்தே ஒரு கிரகம் தோற்றம் பெறும் அரிய காட்சியை விஞ்ஞானிகள் புகைப்படமாக எடுத்திருக்கிறார்கள்.

நமது சூரியக் குடும்பத்துக்கு ஏனைய கிரகங்களும் சூரியனின் தோற்றத்தின் பின்னர் இப்படித்தான் படிப்படியாக உருவாகி இருக்கவேண்டும் என்பதை இது வெளிக்காட்டுகிறது.



பெரு வெடிப்பு ஒரு கற்பனைத் தோற்றம்



தமிழ்ச் சினமாவின் பழைய தலைமுறையில் இன்றைக்கும் உற்சாகமாக உயிர்வாழ்ந்து கொண்டிருப்பவர் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன். 1928ம் ஆண்டு பிறந்த இவர் தி.மு.க.வின் ஆரம்ப கால ஆதரவாளர். இன்றைக்கும் அப்படித்தான். முதல் படம் பராசக்தி. 1966ல் வெளியான மறக்க முடியுமா? கடைசி படம். மனைவி நடிகை விஜயகுமாரி. இலட்சியத்தோடு வாழும் தனிப்பிறவி.



குருவும் சிஷ்யனும்



இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.




சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் கோல்.'.பேஸ் ஹோட்டல் பக்கமாக நின்று காலிமுகத்திடலை நோக்கினால் இப்படித்தான் காட்சியளித்திருக்கும். தூரத்தில் காணப்படும் நீளமான கட்டடம் பழைய பாராளுமன்றம். இன்றைய தோற்றத்தில் பிரமாண்டங்களுக்கு மத்தியில் பாராளுமன்ற கட்டடம் குட்டியூண்டாக மறைந்து கிடக்கிறது. காலம் செய்யும் கோலம்!

## மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*




ஏ. மதுரை வீரன்

அந்த ஊரில் மொத்தம் மூன்று கடைகள் இருந்தன. ஊருக்கு வெளியே போக முடியாதவர்கள் மற்றும் குடும்பப் பெண்கள் அந்த கடைகளில்தான் தமக்கு வேண்டிய அனைத்தையும் வாங்கினார்கள். அந்தக் கடைகளில் எல்லாப் பொருட்களும் இருக்கும் என்று சொல்ல முடியாது. எனவே இருப்பதை வைத்து சமாளிக்கவேண்டியிருந்தது. இத்தனைக்கும் அந்த மூன்று கடைகளில் பொருட்கள் யானை விலை குதிரை விலைக்கு விற்கப்பட்டன.

இந்த நிலையில்...

ஊருக்கு வெளியே போய்வர முடிந்தவர்களுக்கு மட்டும் கடவுள் கிருபையால் ஊருக்கு கொஞ்ச தூரத்தில் ஒரு கடை இருந்தது. அங்கு நியாயமான விலையில் தரமான பொருட்கள் கிடைத்தன. அதை நடத்தியவர் சஞ்சீவ என்ற இளைஞர். அதனால் இந்த கடை சஞ்சீவ கடை என்று அழைக்கப்பட்டது.

அந்தக் கடையில் ஊராருக்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைத்தன. எதைக் கேட்டாலும் எவ்வளவு வேண்டும் என்று சஞ்சீவ கடையில் கேட்பார்களே தவிர இல்லை என்ற வார்த்தை ஒருபோதும் வெளிவராது. ஆனால் அந்த கடைக்கு செல்ல ஊருக்கு வெளியே சுமார் கால் மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும். இதை கஷ்டமாகக் கண்டவர்கள் அதிக பணம் கொடுத்து ஊருக்குள்ளேயே தங்களுக்குத் தேவையானதை வாங்கிக்கொண்டனர்.

சஞ்சீவவின் அப்பா அந்த ஊருக்கு ஒரு ஆசிரியராக வந்தவர். நல்ல ஆசிரியர் என்று பிள்ளைகளிடமும் பெற்றோரிடமும் பெயர் வாங்கியவர்.

பாடசாலைக்கு அருகிலேயே ஒரு காணியை வாங்கி ஒரு வீட்டைக் கட்ட ஆரம்பித்தார். கட்டட வேலை மெதுவாகத்தான் நடந்தது. ஆனால் திட்டமிட்டபடி நடந்தது.

சஞ்சீவ விவசாயக் கல்லூரியில் பட்டம் பெற்று வரும்போது அந்த கட்டடம் மாடிக்கட்டடமாக மாறியிருந்தது. அருகில் இருந்த வயல் நிலங்களையும் சஞ்சீவவின் அப்பா வாங்கிப்போட்டார். அந்த நிலங்களை உழுது உரம் போட்டு பணம் கொழிக்கும் வயல்களாக மாற்றினான் சஞ்சீவ. ஒன்று இரண்டு டிராக்டர்களை வாங்கிப்போட்டு ஊராருக்கு வாடகைக்கு விட்டான். ஏழை விவசாயிகளுக்கு இலவசமாகவே கொடுத்துதவினான்.

இந்த நிலையில் சஞ்சீவவுக்கு திருமணம் செய்து வைக்க அவனது பெற்றோர் விரும்பினர். அவனுக்கு தெரியாமல் வெளியூரில் பெண் பார்த்தனர்.

சஞ்சீவவின் அப்பா அந்த ஊருக்கு வந்து குடியேறியபோதும் அவரது உற்றார் உறவினர் பெருமளவில் நகர்ப்புறத்திலேயே இருந்தனர். அத்துடன் சஞ்சீவ குடும்பத்தினர் உயர் ஜாதியினர். தங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற பெண்ணே தமக்கு மணமகளாக வரவேண்டும் என அவர்கள் பெரிதும் விரும்பினர்.

அந்த ஊரில் சிரியலதா என்ற ஒரு யுவதி இருந்தாள். அழகானவள். உயர்தர பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற்ற அடுத்த மாதமே அவளுக்கு அடுத்த ஊரில் டீச்சர் வேலை கிடைத்துவிட்டது.

சஞ்சீவவின் கடை வழியாகத்தான் அவள் தனது பாடசாலைக்கு செல்லவேண்டும். எனவே வார நாட்களில் காலை நேரங்களில் அவள் அவ்வழியாக செல்லும்போது சஞ்சீவ கண்டிருக்கிறான்.

சில நாட்களின் பின் சஞ்சீவவும் அதே நேரம் அவள் பின்னால் காரில் வருவதை சிரியலதா கவனித்திருக்கிறாள். ஆனால் எதேச்சையாக நடந்த விடயம் என்று முதல் ஓரிரு நாட்களில் நினைத்திருக்கிறாள்.

ஆனால் நாள்தோறும் அதே நேரம் அதே பின்தொடர்தல். இப்போது அவளுக்கு சந்தேகம் வந்தது.

நேரத்தைக் கொஞ்சம் மாற்றியமைத்தால் சரியாகிவிடும் என்ற தீர்மானத்தில் பாடசாலைக்கு 15 நிமிடம் முன்னதாகவே செல்லும் வகையில் நேரத்தை மாற்றியிருக்கிறாள். இனி எல்லாம் சரி என்று நினைத்துக்கொண்டிருக்கையில் என்ன ஆச்சர்யம்! இப்போதும் பின் தொடர்தல், 15 நிமிடத்துக்கு முன்னதாகவே இடம்பெற்றது.

அன்றொரு நாள்...

லதா நடந்து செல்லும்போது அன்றாடம் காரில் பின்தொடரும் சஞ்சீவ அன்று காலால் பின் தொடர்ந்தான். பின்னால் சஞ்சீவ நடந்து வருவதாகக் கண்டதும் சிரியலதாவுக்கு தன்னையே நம்ப முடியவில்லை.
அப்படியானால் எதற்கோ இதுதான் ஆரம்பமா?

வேகமாக லதாவை பின் தொடர்ந்த சஞ்சீவ அவளை நெருங்கியதும் நிதானமாக நடக்கத் தொடங்கினான்.

லதாவின் அடிவயிற்றிலிருந்து பட்டாம் பூச்சிகள் பறக்கத் தொடங்கின.

அவள் பஞ்சு... அருகில் நெருப்பு

அருகில் வந்த நெருப்பு மெல்ல மெல்ல அவளை தீண்டியது. திடீரென்று பற்றிக்கொண்டது.

"காருக்கு என்ன நடந்தது?" மெல்லக் கேட்டாள்.

"காருக்கு ஜுரம். கராஜில் தூங்குகிறது." கிசு கிசுத்தான்.

எல்லாக் காதலும் எப்படி நட்பாக ஆரம்பிக்கிறதோ அதுபோலத்தான் சஞ்சீவ-சிரியலதா விவகாரமும் ஆரம்பித்தது.

சஞ்சீவவை பொறுத்தவரையில்

சிரியலதா கண்ணுக்கு இதமாக, நெஞ்சுக்கு இதமாக இருந்தாள். அதற்கு மேலாக குலம், கோத்திரம் எதனையும் அவள் பார்க்கவில்லை.

காதலுக்கு கண்ணில்லை என்று இதைத்தான் சொல்வார்களோ.

அந்தக் காதல் பூவாகி, காயாகி மெல்ல மெல்ல பழுக்கத் தொடங்கியது.

சிரியலதாவின் தந்தை சிமியொன் ஒரு கொல்லன். காலையில் ஆரம்பித்தால் பிற்பகல் மூன்று மணி வரை இரும்புடன் தான் அடிதடி. மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை அடுத்த உலகத்துக்குள் புகுந்தால் அடிதடியுடன்தான் முடியும்.

நிதானத்துடன் இருக்கும்போது சிமியோனிடம் இருக்கும் அடக்கமும் பொறுமையும் ஆச்சர்யப்பட வைக்கும். ஆனால் பானத்தின் பிடியில் இருக்கும்போது அடக்கமும் பொறுமையும் என்ன விலை என்று சிமியோன் நம்மைக் கேட்பான்.

சஞ்சீவவின் அப்பாவை சிமியோனுக்கு ஒரு போதும் பிடிக்காது. பாடசாலையில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக சென்றபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முறுகலாகி இன்றும் தொடர்கிறது. சஞ்சீவவின் கடைப்பக்கம் போக நேர்ந்தால் சிமியோனின் அர்ச்சனை தவிர்க்க முடியாத ஒன்று. வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டித் தீர்க்கும் வரை ஓயாது. ஊரில் உள்ள மற்றைய மூன்று கடைக்காரர்களுக்கும் சஞ்சீவ கடையின் நேர்மை வியாபாரம் பிடிக்காது. அநேகமான நேரங்களில் அவர்களே சிமியோனை பதப்படுத்தி அர்ச்சனைக்கு அனுப்புவதும் உண்டு.

இந்த நிலையில்,

சஞ்சீவ- சிரியலதாவுடன் அடிக்கடி பேசுவது, பழகுவது காற்றில் கசிந்து ஊரார் காதுகளில் விழுந்தது...

சிரியலதாவுக்காக காத்துக்கொண்டிருந்தவன்தான் பால. சிமியோனின் கிட்டத்து சொந்தக்காரன். மது விற்பனையே அவனுக்கு தொழில். இதனால் அவனிடம் நல்ல காசு புழங்கியது. சிரியலதாவிடம் யாரும் பேசினால் கூட பாலவுக்கு பிடிக்காது. சஞ்சீவ பேசிப்பழகுவதை அவன் எப்படி அனுமதிப்பான்? பழிவாங்க வேண்டும் என்று தகித்துக் கொண்டிருந்தான்.

(31ஆம் பக்கம் பார்க்க)



# ஐநூறு ரூபாய்


ஜுனைதா ஷெரீப்




கடந்த இரவு முழுவதும் பெய்த பேய் மழையின் வேகம் சற்றுத் தணிந்திருந்தது. பள்ளிவாசலொன்றில் சுப்ஹு தொழுகையை முடித்துக்கொண்ட இக்பால் தஹ்லிம் கிதாபிலிருந்தும் வாசிக்கப்பட்ட ஹதீஸ்களைச் செவியுற்று, வராந்தையில் நின்றவாறு வழக்கமாக குசலம் விசாரிக்கும் சில நண்பர்களுடன் கதைத்துவிட்டு விரித்துப் பிடித்த குடையின் கீழ் வீட்டையடைந்தார். வீட்டின் அகன்ற நடையில் சுருட்டியவாறு படுத்திருந்த தெருப் பூனையொன்று சற்று தலையை உயர்த்தி இவரைப் பார்த்து தான் படுத்திருப்பதாகக் கட்டியம் கூறிவிட்டு மீண்டும் சுருட்டிக்கொண்டது. சிறகுகளை அடித்தவாறு வேகமாகப் பறந்து வந்த காகமொன்று மரக்கிளையொன்றில் உட்கார்ந்ததும் தொண்டை கிழியக் கரையத் தொடங்கியது.

"சீ! சனியன்", கூறியவாறே அவர் வீட்டினுள் நுழையவும், அவரது மனைவி மர்ழியா தொழுத பாயை சுற்றிக் கையிலெடுத்தவாறு மண்டபத்தினுள் வரவும் சரியாக இருந்தது.

"என்ன காலையிலேயே சனியன்கிறீங்க? நானா சனியன்?" மர்ழியா கேட்டாள்.

"சே.சே. இந்த காகத்தைச் சொன்னேன். காலைலேயே காது வெடிக்கக் கத்துது."

நெய்னாகுடியைச் சேர்ந்த இக்பாலுக்கு ஐம்பது வயதுக்கு ஒன்றிரெண்டு கூடக்குறைய இருக்கலாம். நீண்ட காலமாக கிராம அங்காடியில் மரக்கறி வியாபாரம் செய்பவர். அவர் பெற்ற ஐந்து பிள்ளைகளில் மூவர் ஆண்கள். இருபத்தைந்து வயது நிரம்பப்போகும் மூத்தவன் முத்தலிபு கட்டாரிலுள்ள சந்தைத் தொகுதியொன்றில் எடுபிடியாக சுமார் ஐந்து வருடங்களாக வேலைசெய்கிறான். ஒரு மாத விடுமுறையில் வந்து நிற்கும் அவனுக்கு அடுத்த நாள் அதிகாலை இரண்டு மணிக்கு விமானம் எடுக்கவேண்டியிருந்தது.

முத்தலிபுக்கு அடுத்தவன் கொழும்பிலுள்ள புடைவைக்கடையொன்றில் விற்பனையாளனாகப் பணியாற்றுகிறான். தனது மூத்த மகளுக்காக இக்பால் கட்டிக்கொண்டிருக்கும் மாடி வீட்டுக்கு இவர்கள் இருவர்களினது பங்களிப்பு கணிசமாகக் கிடைத்தது.

சமையற்கூடத்தினுள் கிடந்த சிறியதொரு ஊஞ்சலில் உட்கார்ந்து கைவிரல்களால் தரையைத் தொட்டு அதை ஆட்டிவிட்டார்.

"மர்ழியா! முத்தலிவு எழும்பிட்டானா?"

"இன்னும் இல்ல"

"இன்னும் எழும்பல்லியா? அவன் சுபஹ் தொழுறதில்லியா? எழுப்பி உடு. தொழட்டும்."

"வேணாம். வேணாம். அவன் ராவு படுக்கவே ஒரு மணிக்கு மேலாகிட்டு. அவனைப் பார்க்க வந்த அவன்ட கூட்டாளிமாரு எல்லோரும் போன பின்னாடிதான் அவன் படுத்தான்." கூறியவாறே மகன் கட்டாருக்குக் கொண்டுபோவதற்காக அவள் செய்த பயற்றுப் பலகாரமொன்றையும், கச்சான் பருப்பு பலகாரமொன்றையும் சிறிய தட்டையொன்றினுள் வைத்து அவரிடம் நீட்டினாள்.

"தின்னுறதுக்கு முன்னாலே நான் உன்கிட்டே ஒரு விசயம் பேசியாகணும்.

"என்ன விசயம்?"

"நானும்தான் பல நாட்களா பாக்கிறேன். இது என்ன பழக்கம்?"

"எதைச் சொல்றீங்க?"

"எல்லாம் உன் மூத்த மகனைப் பத்தித்தான். லீவிலே நிக்கிற இந்த ஒரு மாதமா பாக்கிறேன். ஒரு நாளாவது நேரத்துக்கு தொழுது இருக்கானா? கட்டாருக்கு போனதுக்குப் பின்னாடி ரொம்பத்தான் உன் புள்ள மாறிட்டான் போல. முன்னாடியெல்லாம் பாங்கு கேட்டதும் பள்ளியிலே நிப்பான். அப்போதெல்லாம் என் முன்னுக்கு நின்றே வாப்பான்னு கூப்பிடமாட்டான். இப்ப என்னடான்னா ஒரு கதைக்கு மற்றக்கதை கதைச்சா மூக்கிலே கோபம் வருது. ஏன் அவருட காசிலே ஊடு கட்டுறேனென்றா? இல்லே அவருட உழைப்பிலே நாம எல்லோரும் தங்கியிருக்கிறோமென்றா? எனக்கு ஒன்டும் விளங்குதில்ல" கூறியவாறே மீண்டும் குனிந்து தரையைத் தொட்டு ஊஞ்சலை வேகமாக ஆட்டினார்.

"எதுக்கு மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறீங்க. கொஞ்ச நேரமாவது ஆறுதலாப் படுக்கட்டும். சும்மா உடுங்களன். எப்ப பார்த்தாலும் அவனைப்பத்தித்தான் புறுபுறுக்கிறீங்க. இன்னும் எத்தனை நாளைக்கு இங்க நிக்கப்போறான்? இந்த ஒரு நாள் மட்டும்தானே."

தான் கூறியதிலுள்ள தூர நோக்கை மர்ழியா புரிந்துகொள்ளவில்லை என்பதையிட்டு இக்பால் மனதினுள் துக்கித்தார்.

"நான் அவனது எதிர்கால நன்மைக்காகச் சொன்னேன். உனக்கே புரியல்ல. உன் மகனுக்கென்ன புரியவா போகுது? இங்கேயிருந்து முன்னூறு கிலோமீட்டர் பயணஞ்செய்து எயாபோட் போகணும். இன்றைக்கே முடிக்க வேண்டிய வேலை அவனுக்கு எவ்வளவோ இருக்கும். அதையெல்லாம் விட்டுட்டு இப்படி படுத்தா... மர்ழியா, உனக்குத் தெரியுமா அவன் ஏன் இப்படி நடந்துக்கரானென்னு?"

"ஏன் நடந்துக்கரான்?"

"அவன் இப்போ என்னிலே தங்கியிருக்கிறதில்லைதானே... ஒவ்வொருவரும் மற்றவங்களிலே தங்கியிருக்கிற வரைக்கும்தான் தங்கியிருக்கிறவங்களுக்கு மரியாதை செய்வாங்க. எப்போ தன் சுய காலிலே நிக்கிறோமென்ற நினைப்பு அவங்களுக்கு வருதோ.அதுவரையில் ஆத்தைக் கடக்கிற மட்டிலும்தான் அண்ணன்தம்பி கதை. அதுக்குப் பிறகு நீ யாரோ நான் யாரோ கதைதான். அவனாச்சு, நீயாச்சு" கூறியவாறே பலகாரத்தைக் கடித்தார்

பகல் பத்து மணி சுமார் இருக்கலாம். சற்று நேரத்துக்கு முன்னர்தான் நித்திரையை விட்டும் எழுந்திருந்த முத்தலிப் வெளியே வாசலிலிருந்த கிணற்றில் குளித்து விட்டு நீளமான துவாயொன்றை இடுப்பில் கட்டியவாறு வந்துகொண்டிருந்தான்.

"உம்மா, அவருக்கிட்டச் சொல்லி வீட்டிலே எந்தவேலையையும் முடிக்காவிட்டாலும் பரவால்ல. இந்த பாத் றூம்வேலையை மட்டும் உடனடியா முடிக்கச் சொல்லிச் சொல்லுங்க. எத்தனை நாளுக்குத்தான் நாலு பேரு பார்க்க வெளியே கிணத்திலே குளிக்கிறது?" என்றான் சற்று சப்தமிட்டு.

"ஏன் என்கிட்டே சொல்றே. நீயே உன் வாப்பாகிட்டேசொல்லேன். உள்ளேதானே இருக்காரு"

"க்கும். சொன்னாப் போலதான். எல்லாத்துக்கும் எதுத்துக்கொண்டே நிப்பாரு."

மகன் கூறியது இக்பாலுக்கு விளங்கியதோ என்னவோ "ஆமாடா. நான் எதுக்கிறவன்தான். நீதான் ரொம்ப புத்திசாலி. கேட்கிறதா கோபிச்சுக்காதே. உனக்கு எத்தனை மணிக்கு பிளேன்?." பவ்யமாகக் கேட்டார்.

"ஏன் கேக்கிறீங்க. நீங்க போப்பிறீங்களா? காலைலேயே எழுந்ததும் எழாததுமா ஏசினீங்களாமே. வாப்பா! ஒன்டுசொல்றேன். உங்கட வேலையை நீங்க பாருங்க. எத்தனை மணிக்கு எயாபோட் போகணும், எத்தனை மணிக்கு புறப்படணும் என்ற எல்லாமே எனக்குத் தெரியும். நீங்க எதுக்காக உங்க கடைக்குப் போகாம ஊட்லே நிக்கிறீங்க. நீங்க கடைக்குப் போங்க. என் வேலையை நான் பாக்கேன்"

மகனின் அடாவடித்தனமான பதிலைக் கேட்டு இக்பாலுக்கு வெறுத்துப் போனது.

முத்தலிபுக்கு அன்று ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. அவற்றை முடித்து விட்டு பிற்பகல் மூன்று மணியளவில் தனது இல்லத்துக்குத்திரும்பி உடல் கழுவி மதிய உணவை உண்டான்.

"உன் மகன் எத்தனை மணிக்குப் புறப்படுறானாம்? அவனுக்கிட்டே கேட்டியா?" நெடுநேரமாக மனதினுள் புரண்டுகொண்டிருந்த கேள்வியை மனைவியைப் பார்த்து இக்பால் கேட்டார்.

"அவன் எத்தனை மணிக்கென்றாலும் புறப்படட்டும். நீங்க உங்க வாயைச் வைச்சுக்கொண்டிருங்க. நான் இதை அவனிடம் கேட்கப் போக அவன் தாயென்றும் பார்க்காம என் மேலே பாய்வான். வேணுமா எனக்கு இது?" என்றாள் மர்ழியா எரிச்சலுடன்.

"சரி.சரி. எக்கேடு கெட்டாவது போகட்டும்."

நேரம் ஊர்ந்துகொண்டிருந்தது. அவருக்கு இருப்புக்கொள்ளவில்லை. நேரம் நான்காகி விட்டது. முத்தலிப் தனது உடுப்புகளை இப்போதுதான் சூட்கேஸினுள் அடுக்கிக்கொண்டிருந்தான்.

இக்பாலுக்கு தொடர்ந்தும் தன்னை அடக்கிக்கொண்டிருக்கமுடியாமல்இருந்தது. இனி பொறுத்திருப்பதால்பயனில்லையென நினைத்தார். சரேலென வெடித்துவிட்டார்.

"இந்த வேலைகளையெல்லாம் நேரகாலத்தோடசெய்திருக்கலாமே. இப்போதே நாலுக்கு மேலாகிவிட்டது. எத்தனைக்கு வீட்டிலிருந்தும் புறப்படுறே?" மகனைப் பார்த்து சற்றுக் காரமாகக் கேட்டார்.

"உம்மா! வாப்பாவைக் கொஞ்சம் சும்மா இருக்கச் சொல்லுங்க. கண் தெரியல்லியா, புறப்பட்டுக்கொண்டுதானே இருக்கேன்" முத்தலிப் இரைந்தான்.

இக்பால் விட்டுக்கொடுக்கவில்லை. "எதுக்குக் கேட்டேன்னா ரொம்ப தூரம் பிரயாணம் பண்ணோனும். நேரம் பிந்திவெளிக்கிட்டா வாகனத்தை வேகமாக செலுத்தோனும். வேகமா ஓடினா பொலிஸ் புடிப்பான். வீணா சிரமப்படோணும். அதுக்குத்தான் சொன்னேன். உன் நன்மைக்குத்தான் கேட்டேன்." என்றார் விட்டுக்கொடுக்காமல்.

"நீங்க சொல்ற எல்லாமே எனக்குத் தெரியும். நான் என்ன விரல் சூப்புற பபாவா? நெயினாகுடியிலேயே எக்ஸ்பேட் றைவர் ஒருத்தனைச் சொல்லியிருக்கேன். ராவு எட்டு மணிக்குப் புறப்பட்டாலும் பன்னிரெண்டுக்குள்ளே எயாபோட்டுக்கு கொண்டு போய் விட்டுடுவான். பொலிஸ் புடிச்சா இருக்கவே இருக்கு ஐநூரு ரூபா நோட்டு. நீங்க டென்சன் ஆகாம சும்மா இருங்க." அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே அவனைத் தேடி நண்பன் ஒருவன் வந்தான்.

செய்துகொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு நண்பனை வரவேற்று கதைத்துக்கொண்டிருக்கத் தொடங்கினான்.

நேரம் மீண்டும் ஊர்ந்தது.

ஆறு மணிக்கெல்லாம் வாசலில் வந்துகாத்து நின்ற வாகனத்தில் அரை மணி நேரம் கழித்து முத்தலிப் ஏறினான். அதற்கு முன்னர் அவனை வழியனுப்புவதற்காக வந்த அனைவரிடமும் பேசி விடைபெற்றான். தகப்பனைக்கட்டியணைத்தான். தாயைக் கட்டியணைத்து கண்களில் நீர் வடித்தான். தங்கைகளின் தலைகளை வருடி விட்டான். "நான்போயிட்டு வாரேன்" என்றான்.

"அல்லாட காவலா போயிட்டு வாங்க" என்றாள் மர்ழியா.

"றைவர். என்ட மகன் சொல்றான் என்றதுக்காக வேகமா போகாதே. தூரத்துப் பிரயாணம். மெள்ளமெள்ளப் போ" என்றார் இக்பால்.

வானின் சாரதி சபீக் மெதுவாக வாகனத்தை கிளப்பினான். பிரதான பாதையில் வாகனம் வழுக்கத் தொடங்கியபோது "டைம் என்ன சபீக்?" எனக் கேட்டான் முத்தலிப்.

"ஆறு நாப்பது"

"பன்னிரெண்டு மணிக்கு முன்னாலே எயா போட் போயிடணும். அதுக்கு ஏற்ற மாதிரி வேகமா ஓட்டுங்க."

"வேகமா போகவேணாமென்டு உங்க வாப்பா சொன்னாங்களே."

"அவர் கிடக்கார். நீங்க எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு வேகமா போங்க"

சபீக் அக்ஸிலேட்டரை வலது கால் பெரு விரலால் மேலும் நசித்தான். ஸ்பீடோமீடர் தொண்ணூறுக்கும் நூற்றுக்கும் இடையில் ஊஞ்சலாடியது.

ஓர் அரை மணி நேரம் சென்றிருக்கலாம். நேர் பாதையில் வாகனம் ராஜநடை போட்டுக் கொண்டிருக்கும்போது சபீக் சடுதியாக வேகத்தைக் குறைத்தான்.

"என்ன சபீக்?"

"மாட்டிக்கொண்டோம். போலிஸ்காரன் கை போடுறான். தொலைஞ்சோம்."

"வேலையில்லாதவனுகள்" முத்தலிப் எரிச்சல்பட்டான்.

"அந்த ஐநூறு ரூபா நோட்டைத் தாங்க"

வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரத்தையும் ஐநூறு ரூபாநோட்டையும் கைக்குள் பொத்தியவாறு சபீக் இறங்கினான். முத்தலிப் பின் தொடர்ந்தான்.

"நூறு கிலோமீட்டர் ஸ்பீட்லே வந்திருக்கே. இந்த ஸ்பீட்லேபோறியே ஏதாச்சும் நடந்துடும்னா? லைசன்ஸை எடு." போலிஸ் சார்ஜன் கடுகடுத்தார்.

"சார். எயாபோட்டுக்குப் போறோம் சார். கொஞ்சம் மன்னிச்சு..." என்றான் முத்தலிப் மெதுவாக.

"யு சட் அப்! நீ லைசன்ஸை எடு"

சபீக் அங்குமிங்கும் பார்த்துவிட்டு சாரதி அனுமதிப்பத்திரத்துடன் கைக்குள் பொத்தி வைத்திருந்த ஐநூறுரூபாத் தாளையும் மெதுவாக அவரிடம் கையளித்தான்.

"என்ன லஞ்சம் தாரீயா? கைலே காசை எடு மேன்!" சார்ஜன் கடகடவென சிரித்தார். "லஞ்சம் தந்து செய்த குற்றத்தை மறைக்கலாமென்று பாக்கிறியா?" அடுத்த கணமே "அதுக்கெல்லாம் இந்த பண்டார சார்ஜன் இணங்கமாட்டான். காசை எடு" என உறுமினார்.

"சார். தயவுசெய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க சார்" என்றான் முத்தலிப்.

"எங்கே சொல்லு. ஆனா பொலிஸ்காரங்களை பத்தி மட்டும் தவறா நினைக்காதே."

(31ஆம் பக்கம் பார்க்க)



# வளர்பிறையாக வேண்டும் பிறை எப்.எம்

எம்.எம் வானொலிச் சேவைகளில் புதுமைகளும், புரட்சிகர மாறுதல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அரச வானொலிகளில் மட்டும் பழைமையே பேணப்பட்டு வருகிறது. புதுமைகளைக் கொண்டு வருவதில் அரசாங்கமோ, அரச அதிகாரிகளோ தடை போடுவதாக நம்புவதற்கில்லை. ஊழியர்கள், உயர் அதிகாரிகளின் அசட்டைப் போக்கும் சம்பளத்துக்கு வேலைசெய்யும் மனப்பான்மையுமே இதற்குக் காரணம் என்றே கருதவேண்டியிருக்கிறது.

நாளுக்கு நாள் புதுப்புது நிகழ்ச்சிகளை படைப்பது மட்டும் புதுமையல்ல. அத்தோடு புதியவர்களுக்கும் இடமளித்து புதிய அம்சங்களைப் புகுத்தி நேயர்களை வசீகரமாக்கக்கூடிய வகையில் வானொலி நிகழ்ச்சிகளை வடிவமைப்பது அறிவிப்பாளர்களதும், நிகழ்ச்சி அமைப்பாளர்களினதும் கடமையாகும்.

இவ்வகையில் பார்த்தால் பிறை எப்.எம்.மும் வழமையான அரச வானொலிப் பாணியில்தான் இன்றுவரை மாற்றமின்றி பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அங்கு கடமை புரிபவர்கள் நினைத்தால் மாற்றங்களை நிச்சயம் கொண்டு வரலாம். ஏனெனில், பிறை எப்.எம் அறிவிப்பாளர்கள் ஒன்றும் சளைத்தவர்களல்ல. நிச்சயம் அவர்கள் விடாமுயற்சியுடன் புதுமைபடைப்பார்களானால் நிச்சயம் பிறை எப்.எம்மை என்றென்றும் நேயர்கள் மனதில் நிலைத்து நிற்கச் செய்யலாம். தனியார் வானொலிகளையும் எமது பிராந்திய வானொலி பிறை எப்.எம் விஞ்ச வேண்டும் என்பதற்காகவே இந்த ஆலோசனை

- ஸைனப் கதீஜா



# தமிழோசை சிவபாத சுந்தரத்தின் தமிழ்த் தொண்டு

இலக்கிய அறிஞரும் பத்திரிகையாளரும் ஒளிபரப்பாளருமான சிவபாத சுந்தரத்தின் நூற்றாண்டு நிறைவு கடந்த ஆண்டில் நிகழ்ந்ததை பலரும் அறியார். நாம் இதைக் கண்டு கொள்ளாத அதேசமயம், தமிழ் ஊடகங்களில் அமுதசுரபி ஏடு மட்டுமே அவர் பற்றி எழுதியிருந்தது.

இவர் 1912ம் ஆண்டு ஒகஸ்ட் 27ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ். மத்திய கல்லூரியிலும் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்ற அவர், சட்டப்படிப்பை முடித்தார். ஈழகேசரி ஆசிரியராக சிலகாலம் பணியாற்றிய அவர், ஒலிபரப்புத்துறையில் சேர்ந்து பணியாற்றினார். இவரது திறமையை அறிந்த லண்டன் பி.பி.ஸி, அதன் தமிழ்ப் பிரிவை (தமிழோசை) ஆரம்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்க, தமிழோசையை அவர் ஆரம்பித்து நடத்தினார். விரைவிலேயே அது உலகப் புகழ் பெற்றது. இந்த அனுபவங்களை எல்லாம் சேர்த்து அவர் எழுதிய நூலே, 1954ம் ஆண்டில் வெளியான ஒலிபரப்புக்கலை.

இந்த நூலுக்கு ஆசியுரை எழுதியவர் இராஜாஜி. இவர் நூல்களுக்கு அணிந்துரை, வாழ்த்துரை எழுதுவதில்லை. எப்படியோ அவரிடம் நூலை சேர்ப்பித்து ஆசியுரை ஒன்றை எழுதித் தரும்படி சிவபாதசுந்தரம் வேண்டிக்கொள்ள, புத்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டார் இராஜாஜி.

ஒரு நாள் இராஜாஜி புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க, பக்கங்கள் அவருக்கு பிடித்துப்போனது. முழுப் புத்தகத்தையும் படித்து முடித்து முன்னுரையும் எழுதி விட்டார் இராஜாஜி. அவரது அணிந்துரை நான்கு பக்கங்களை கொண்டிருந்ததோடு, இந்த நூலுக்கு 'ரேடியோ வாத்தியார்' என்றே பெயர் வைத்திருக்கலாம் என்றும் கடைசியில் குறிப்பிட்டிருந்தார்.

காமராஜர், அண்ணாதுரை ஆகியோரின் இறுதி ஊர்வலங்களை நேர்முக வர்ணனை செய்ய சென்னை வானொலி இவரையே அழைத்திருந்தது.

இவர் எழுதிய மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூல் இலங்கை சாகித்திய மண்டல பரிசு பெற்றது. சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்த இவர், 1959ம் ஆண்டு அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டில் அமைப்பாளராக செயற்பட்டார்.

இவர் இலக்கிய பிரமுகர் சிட்டி சுந்தரராஜனின் நெருங்கிய நண்பர். இருவரும் இணைந்து தமிழ் இலக்கியத்துக்கு பல பணிகளை செய்துள்ளனர். இவர்களை தமிழ் உலகம் இலக்கிய இரட்டையர்கள் என்று அழைத்தது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினால் தொடர் உரையாற்றுவதற்கு இவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். பாண்டிச்சேரி மற்றும் சென்னை பல்கலைகழகங்களினால் வருகை தரும் பேராசியர்களாக இவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் சிட்டியும், சிவபாதசுந்தரமும் தமிழுக்கு ஆற்றிய சேவைகளை தமிழுலகம் சரியாகக் கண்டுக்கொள்ளவில்லை என்பது சோகமான உண்மை!

# மஞ்சுளாவுக்கு எம்.ஜி.ஆர் தந்த ரூபா நோட்டுகள்!



எம்.ஜி.ஆருக்கு இடப்பக்கமாக கண்ணாடியுடன் நிற்பவர் தொப்பி அணியாத கல்கண்டு நிறுவுனர் தமிழ்வாணன். வலதில் கதம்பம் கே.வி.எஸ்.மோகன்

எம்.ஜி.ஆரின் 93வது பிறந்தநாள் கடந்த மாதம் 17ம் திகதி தமிழகத்தில் நினைவு கூரப்பட்டது. இலங்கையிலும் நினைவு கூரும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. எந்தத் தூண்டலும் இல்லாமல் மக்களே முன்வந்து அவரது ஜனன தினத்தை நினைவுபடுத்துவது அவர் மறைந்து 25 ஆண்டுகளாகிய பின்னரும் உற்சாகமாக அவர் நினைவு கூறப்படுவதும் எம்.ஜி.ஆர் மந்திரமே தவிர வேறில்லை.

அவர் ஜனன தினத்தை முன்னிட்டு தந்தி டி.வியில் ஒரு மணித்தியால நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பினார்கள். அதற்கு, முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் திருநாவுக்கரசர், ஒரு ஊடகவியலாளர் மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

பாக்கியராஜ் சுவையான விஷய மொன்றை இங்கே பகிர்ந்து கொண்டார்.

எம்.ஜி.ஆர் சுகவீனமுற்று நினைவிழந்த நிலையில் அமெரிக்கா புருகளின் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரைப் பார்ப்பதற்காக பாக்கியராஜ் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது நடிகை மஞ்சுளா அமெரிக்காவில் இருந்தார். எம்.ஜி.ஆர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதை அறிந்த மஞ்சுளா மருத்துவமனைக்கு வந்தார். பாக்கியராஜ் அங்கிருக்கையில் எம்.ஜி.ஆரின் அறைக்கு வந்த மஞ்சுளா, எம்.ஜி.ஆரிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

அந்த சமயத்தில் எம்.ஜி.ஆருக்கு எந்த நினைவும் இல்லை. மஞ்சுளாவை வெறித்து பார்த்தபடி இருந்தார். மஞ்சுளா குனிந்து அவர் காதருகே, நான்தான் மஞ்சுளா... உங்களுடன் ரிக்ஷாக்காரனில் நடித்திருக்கிறேன்... என்னை உங்களுக்கு நன்றாகவே தெரியும் என்றெல்லாம் திரும்பத் திரும்ப சொல்லி நினைவூட்டப் பார்த்தார். எம்.ஜி.ஆருக்கு எதுவுமே புரியவில்லை. ஆனால் திடீரென கீழே குனிந்து தன் இடுப்பில் இருந்து எதையோ இழுத்தெடுத்த எம்.ஜி.ஆர் அதை மஞ்சுளா கைகளில் திணித்தார். அது பணநோட்டுகள்!.

கொடுத்துக் கொடுத்தே பழகிப் போயிருந்த எம்.ஜி.ஆர் மனசுக்கு அது விளங்கவில்லையானாலும் எதிரே நிற்பவர் ஏதோ கேட்க வந்திருக்கிறார், அவருக்கு பணம் கொடுக்கவேண்டும் என்பது மட்டும் தெரிந்திருக்கிறது.

இத்தகவலை பாக்கியராஜ் சொன்ன போது கேட்பதற்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

# சுவர்ணாவில் ஹொபலு அரண



சுவர்ணவாஹினியில் கடந்த ஜனவரி 6ஆம் திகதி முதல் ஞாயிறுதோறும் இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பாகும் புதிய தொலைக்காட்சி நாடகம் 'ஹொபலு அரண'.

45 அங்கங்களைக் கொண்ட இந்தத் தொலைக்காட்சித் தொடரில் ரொஷான் ரவீந்திர, உதித பிரேமரத்ன, தாருக வன்னியாரச்சி, ரெபேக்கா, நிர்மலி, தமயந்தி, பொன்சேகா, லூசியன் புலத்சிங்கள, ஜனக கும்புக்கே ஆகியோர் நடிக்கின்றனர்.

துஷாரி அபயசேகர கதை வசனம் எழுதி இந்த தொலைக்காட்சி தொடரை நெறிப்படுத்தியுள்ளார்.

வெளிநாட்டு நாகரிகங்கள் உள்வாங்கப்பட்ட காரணத்தால் விரைவான கலாசார சீரழிவுக்கு உள்ளாகும் காலி நகரத்துக்கு மிக அண்மையில் வாழும் வசதியான உயர் சமூக அந்தஸ்துள்ள குடும்பம் ஒன்றை மையப்படுத்தி இக்கதை புனையப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர் வருகையால் விசேடமாக கரையோர பகுதிகளுக்கு வந்தமையால் சமூகத்துக்கு விளைந்த தீங்குகளும் நகரங்களிலிருந்த பெரிய வீடுகளில் வீட்டுப்பணி செய்ய கட்டாயப்படுத்தபட்ட அப்பாவி பிள்ளைகள் முகம்கொடுக்கும் துன்பங்களும் இந்த தொலைக்காட்சி நாடகம் வெளிக்கொண்டுவரும் ஏனைய பிரச்சினைகளாகும்.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் உள்ள மோசமான உறவு, பரஸ்பர விளக்கமின்மை என்பவற்றால் விளையும் தயரம் பற்றியும் இவ்வாறான பிள்ளைகள் சமூகத்தின் ஈவிரக்கமற்ற யதார்த்தத்துக்கு முகம் கொடுக்கும் கட்டாயத்துக்கு தள்ளப்படுவது எவ்வாறு என்பதையும் இக்கதை மேலும் விளக்குகிறது.


# கொழும்பில் புதிய செனல் வழங்கும் சேவை நிறுவனம்

கொழும்பில் டி.வி செனல்களை ஒழுங்கமைத்துத் தரும் சேவை நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்தியத் தமிழ் செனல்கள் உட்பட 42 செனல்களை இந்நிலையம் வழங்குகிறது. டிஜிட்டல் விடியோ புரோட்காஸ்ட்டில் டெரஸ்ட்ரியல் என்ற முறையைப் பயன்படுத்தி தற்போது கொழும்பு நகரில் இருந்து மாபோல (வத்தளை) மற்றும் பாணந்துறை வரை சேவை நடத்தி வரும் இந் நிறுவனம், பரந்த அளவில் சேவையாற்ற முனைந்தால் நேயர்களுக்கு அது மகிழ்ச்சியான விஷயமாக இருக்கும்.

இதற்கு டிஷ் அன்டனா தேவையில்லை. சாதாரண விஎச்எ.ஃப் அண்டனாவே போதும். நிறுவனத்தார் தரும் செட் அப் பொக்சை டி.வியுடன் இணைத்து மறுபுறம் அன்டனா கேபிளையும் இணைத்தால் ஒளிபரப்பு ஆரம்பமாகி விடும். இப்புதிய சேவையை படிப்படியாக மேல்மாகாணத்தில் விஸ்தரிக்க இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இச்சேவையை வழங்கும் வகையில் கொழும்பு நகரில் விற்பனை நிலையங்கள் உள்ளன. வாசகர்கள் இந்த இடங்களுக்குச் சென்று மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். பியோ டி.வியுடன் ஒப்பிடும்போது இச் சேவை மேம்பட்டதாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

எனினும், முழுமையாக சேவைக்குள் வந்ததும்தான் சாதக பாதக அம்சங்கள் தெரியவரும்.

# பாட்டியை 'கொலை' செய்த ஜெகஜாலபுரட்டன்!



**அது** அறுபதுகளின் முற்பகுதி. ஒரு நாள் எங்கள் வீட்டின் முன் கார் வந்து நின்றது. அன்றைக்கு நீண்ட தூரம் பயணம் செய்வதாக இருந்தாலும், முக்கிய பயணமாக இருந்தாலும் வாடகைக் கார் அமர்த்துவார்கள் கொஞ்சம் வசதியானவர்கள். பஸ் போக்குவரத்து குறைவாக இருந்த காலம் அது. கொழும்பில் இருந்து களுத்துறைக்கு செல்வதென்றால் ஐந்து ஆறு மணித்தியாலம் பிடிக்கும். கொழும்பில் இருந்து நுவரெலியாவுக்கு பஸ் பிடித்து போவதென்றால் இரவாகி விடும். எனவே கார் பயணம் என்றால் முக்கியப் பயணம் என்று அர்த்தம்.

அப்போது நான் குட்டிப்பெண். ஓடிச்சென்று ஆவலுடன் பார்த்தேன். என் பெரிய மாமா குடும்பத்தினர்தான் வந்திருந்தார்கள். நான் சிரித்தபடி நிற்க அவர்களோ வெறித்த பார்வையுடன் நிறைய பைகளுடன் இறங்கினார்கள். அவர்கள் வீட்டுக்குள் வரும்போதே என் பாட்டி, மாமாவின் அம்மா, எதிர்பட்டு, ''என்ன விசேஷம்டா, குடும்பத்தோட கார் புடிச்சி வந்திருக்கியே!'' என்று கேட்க, வந்திருந்தவர்கள் பேயறைந்தவர்களாகி நின்றனர்.

மாமி, ''அம்மா நீங்க உயிருடன்தான் இருக்கிறீங்களா?'' என்று சொல்லியபடி பாட்டியின் காலைப் பிடித்து வணங்கினார். அத்தை ஓவென அழ ஆரம்பித்து விட்டார். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''என்ன நடந்தது அண்ணா?'' என்று அம்மா குரலெழுப்பிக் கேட்டதுதான் மாமா பேச ஆரம்பித்தார்.

''நேற்று எங்கள் வீட்டுக்கு ஒருவன் வந்தான். நீ (அம்மா) அவசரமாக அனுப்பி வைத்ததாக எங்களிடம் சொன்னான். முக்கியமான ஒரு விஷயம் சொல்ல வேண்டும். ஒருவரும் கவலைப்படக்கூடாது என்றெல்லாம் ஆலாபனை செய்து விட்டு கடைசியாக அம்மா தவறிப்போனாங்க (பாட்டி)... நாளன்றைக்கு அடக்கமாம்... சேதி சொல்ல என்னை அனுப்பி வைச்சாங்க என்று சொன்னான். நாங்க அதை நம்பிவிட்டோம். அழுது அரற்றிய பின்னர் விவரங்கள் கேட்டோம்'' என்று மாமா சொன்னார்.

''கண்ட நாயெல்லாம் வந்து சொன்னதும் நம்பி விடுவாயா? உனக்கு புத்தி இல்லையா?'' என்று பாட்டி கேட்டாள்.

''இந்த வீடு இருக்கும் இடம். தங்கச்சி (அம்மா) உருவ அமைப்பு, குடும்ப விவரங்கள் எல்லாமே சரியாகத்தான் சொன்னான். அதனால்தான் நானும் நம்பினேன். இரவு வீட்டில் தங்கினான். மெனக்கெட்டு இவ்வளவு தூரம் (களுத்துறை- பயாகலை) வந்ததை நினைத்து அரை போத்தல் சாராயம் வாங்கி, கோழி அடித்து இரவு சாப்பாடு கொடுத்தேன். காலையிலேயே புறப்பட்டு விட்டான். கையில் பத்து ரூபா காசும் செலவுக்குக் கொடுத்துவிட்டு இப்போ அரக்க பரக்க வந்து சேர்ந்தோம்,'' என்று கூறி முடித்தார் மாமா.

''அது அந்த ஜெகஜால புரட்டனாகத்தான் இருக்கும். அவன் வேலைதான் இது!'' என்றார் அம்மா.

அக்காலத்தில் ஒரு மனிதர் அடிக்கடி வீட்டுக்கு வருவார். வந்து போவது மூலமே அறிமுகமான மனிதரே தவிர வேறு உறவு கிடையாது. அவர் அம்மா, பாட்டியுடன் கதைத்து விட்டு டீ குடித்து செல்வார். இதன் மூலம் எங்கள் குடும்பத்தைப் பற்றிய விவரங்கள் அவருக்குத் தெரியும். களுத்துறைக்கு போனபோது தங்குவதற்கும் சாப்பாட்டுக்கும் வழி பார்த்துக்கொள்வதற்காக மாமா வீட்டைத் தேடிப் பிடித்து பாட்டியைப் போட்டுத் தள்ளியிருக்கிறார் என்பது புரிந்தது.

அதன் பின்னர் என்ன, வீட்டில் கோழி அடித்து விருந்துதான்!

அந்த ஜெகஜாலபுரட்டன் அதன் பின்னர் வீட்டுப்பக்கம் தலை காட்டவில்லை. அம்மாவும் பாட்டியும் தீட்டி வைத்திருந்த கத்தி மொட்டையானதுதான் மிச்சம்.

தவம்

திருமதி. கோதை நாயகி, ஹட்டன்



# ஈழவாணியின் 'அம்மா வருவா' குறும்படம்



**ப**டிக்க வேண்டிய வயதில் படிப்பு, விளையாட்டு, தோழியர், பாடசாலை மட்டுமன்றி தனது அம்மாவையும் இழக்கிறாள் அரசி.

அருகில் அம்மா இல்லையென்றால் எங்கள் வீட்டு சிறுவர்கள் எப்படித் தவித்துப் போவார்கள்! அம்மாவின் அன்பையும் பாசத்தையும் அரவணைப்பையும் அனுபவிக்க வேண்டிய வயதில் இழந்து தவிக்கிறாள் அரசி. இந்த நிலையில் அரசியை தத்தெடுத்து வளர்க்கிறாள் ஒரு மேல் வர்க்க குடும்பப் பெண். அந்த பெண்ணினால் அரசி அனுபவிக்கும் கொடுமைகள் மனித உணர்வுகளால் மன்னிக்கப்பட முடியாதவை.

அரசியின் வேதனைகளை வலிகளை காட்டுகிறது 'அம்மா வருவா' என்ற 16 நிமிட குறும்படம்.

அரசி வசிக்கும் அதே வீட்டில்தான் சுதாவும் வசிக்கிறாள். விளையாட்டும் சந்தோஷமும் என்று வாழ்கிறாள் சுதா. வீடு கூட்டுவதும் துணி துவைப்பதுமாக கழிகிறது அரசியின் வாழ்க்கை. ஒரே வீட்டில் இரண்டு கதைகள். இரண்டுக்கும் இடையில் பல வேறுபாடுகள்.

ஈழப்போரின் இறுதியில் தனது அம்மாவுடன் முகாமில் தங்கியிருக்கும் அரசிக்கு ஏற்படும் அனுபவங்களை கூறுகிறது 'அம்மா வருவா'. இலங்கையை பிறப்புத் தளமாக கொண்ட இலக்கியப் படைப்பாளியான ஈழவாணியின் படைப்புத்தளமாகியிருக்கிறது தமிழ்நாடு. எத்தனையோ சம்பவங்கள்'இருக்கும்போது ஒரு சிறுமியின் ஊடாக தமிழ்ப் பெண்கள் பற்றி குறிப்பிடக் காரணம் என்ன? என்று ஈழவாணியிடம் கேள்வி எழுப்பினோம்.

"குழந்தைகள், சிறுவர்கள், நாட்டின் மிகப்பெரிய சொத்து. யுத்தத்தில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பெற்றோரை, உறவுகளை இழந்து அனாதைகளாகியிருக்கிறார்கள். உடல் உறுப்புகள் மற்றும் கண்பார்வை இழந்து ஊனமுற்றிருக்கிறார்கள். இவர்களுக்காக இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இல்லங்களில இடம் கிடைக்காதவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

இல்லங்களில் தத்தெடுக்கப்பட்ட மற்றும் பொறுப்பேற்கப்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான செயற்பாடுகள் நியாயமாக உள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பொறுப்பெடுக்கப்பட்டவர்களாளேயே சிறுவர்கள் கொடுமைப்படுத்தப்படுவதும், சூறையாடப்படுவதும் மிகவும் கொடூரமான விடயம்.

அதிலும் பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரை வேலியே பயிரை மேயும் செயல்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறு பாதிக்கப்படும் சிலர் மனரீதியாக பாதிக்கப்பட்டு பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதையும் இவர்களில் ஒரு சிலர் பைத்தியமாக வீதிகளில் அலைவதையும் காண முடிகிறது. அழிக்கப்பட்ட மற்றும் அழிந்து போனவை போகட்டும். மிஞ்சி மீதமானவற்றையாவது பேணிப் பாதுகாக்கவேண்டியது எமது கடமை. இதன் பாதிப்பிலேயே பெண் குழந்தைகளை வைத்து 'அம்மா வருவா' குறும்படத்தை இயக்கியிருக்கிறேன்" என்கிறார் ஈழவாணி.

முப்பது வருட கால கோர யுத்தத்தின் விளைவுகள் யுத்தம் முடிந்த பின்னரும் ஓயவில்லை. அடுத்த பரம்பரையிலும் அவை தொடர்கின்றன. அந்த அவலத்தை காட்டுகிறது ஈழவாணியின் 'அம்மா வருவா'. சில மாதங்களுக்கு முன் சென்னையில் நாவலூர் என்ற கிராமத்தில் 'அம்மா வருவா' குறும்படத்தின் படப்பிடிப்பு நடந்தது. இப்போது அனைத்து வேலைகளும் முடிந்து ரசிகர்களின் பார்வைக்காக தயாராக உள்ளது.

ராம்ஜி

**என்னை புரட்டிப் போட்ட மனிதர்**

# "அந்த தேவமாதாவே என்னை வாரி அணைத்த மாதிரி உணர்ந்தேன்"

## புறக்கோட்டை வர்த்தகர் சங்கத் தலைவரும் வர்த்தகருமான சுந்தரம் பழனியாண்டி



எனது சொந்த ஊர் பண்டாரவளை கிரேக் தோட்டம். நான் மிக ஏழ்மையான பின்புலத்தில் இருந்து வந்தவன். நான் முதல் தடவையாக பாடசாலை சென்றபோது எனக்கு வயது ஒன்பது. அதுவும் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள்தான் பாடசாலை சென்றேன். அப்புறம் நான் வளர்ந்தது, உயர்ந்தது, உச்சங்களை எட்டிப்பிடித்தது எல்லாம் என் சொந்த முயற்சியாலும் கடின உழைப்பாலும்தான். இதைச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது.

என் அப்பாவும் அம்மாவும் தோட்டத் தொழிலாளர்கள். குழந்தைகளை வீட்டில் இருந்து பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு அவர்கள் மலைக்கு போய் விடுவார்கள். எந்த வேலையானாலும் அதை நிறைவாக செய்து முடிப்பது என் பிறவிக்குணம். நான் உயர்ந்ததற்கு அதுவும் காரணம்.

எனக்கு படிக்க அனுமதி இல்லை, வீட்டிலேயே இரு என்பார்கள். எனக்கோ படிக்க கொள்ளை ஆசை. காலையில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பேன். எனக்கு ஒன்பது வயதானபோது, நானே பண்டாரவளை நகருக்குப் போய் பாடசாலையில் சேரவேண்டும் என்று தீர்மானம் எடுத்தேன்.

ஒரு நாள் காலையில எழுந்து அணிந்திருந்த அழுக்கு ஷர்ட், அரைக் களிசனோடு பள்ளி செல்லும் மாணவர்களோடு சேர்ந்து வீட்டுக்குச் சொல்லாமல் பள்ளியில் சேர டவுனுக்குப் போனேன். மாணவர்கள் சென். மேரிஸ் பாடசாலைக்கு சென்றார்கள். ஒரு வகுப்பறையில் அவர்கள் நுழைய நானும் அவர்களோடு நுழைந்தேன். அது மகேஸ்வரி டீச்சரின் வகுப்பு. வித்தியாசமான சிறுவனைக் கண்டதும் அழைத்து விசாரித்தார். பாடசாலையில் சேர வந்தேன் என்று சொன்னதும் அனைவரும் சிரித்துவிட்டனர். ''இப்படி வந்தால் சேர்த்துக்கொள்ள மாட்டோம். பெற்றோருடன் வரவேணும்; போர்ம் எல்லாம் நிறைக்கவேணும்" என்று சொல்லியும் நான் கேளாமல் பெஞ்சில் அமர்ந்து கொண்டதும், அவர் கையைப் பிடித்து தரதரவென இழுத்து வெளியே தள்ளி கதவை சாத்திவிட்டார்.

அழுதபடி வெளியே வந்த நான் அருகே இருந்த படியில் அமர்ந்து கொண்டேன். அடுத்ததாக என்ன செய்வது என்பது தெரியாமல் ஒவென அழ, கண்களில் இருந்தும் மூக்கிலிருந்து அருவியாகக் கொட்டத் தொடங்கியது. பைப்பில் முகம் கழுவி பசி தீருமட்டும் தண்ணீர் குடித்து விட்டு மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டேன்.

அழுது கொண்டிருந்த போது டக் டக் என ஒலி எழுப்பியபடி யாரோ வரும் சத்தம் கேட்டது. வந்தவர் என் பின்னால் நின்றார். என்னை வாரி அணைத்துத் தூக்கினார். பால்போல வெண்மையான கரங்கள். அப்படியே அண்ணாந்து பார்த்தேன். ஒரு வெள்ளைக்கார பெண்மணி என்னை அணைத்தபடி Don't cry my child என்று கூறினார். அவருடைய தோற்றம், சாட்சாத் அந்த தேவமாதாவே நேரில் வந்து காட்சி கொடுத்த மாதிரி இருந்தது. அபயம் என்றால் என்ன என்பதை அன்றுதான் முதல் தடவையாக உணர்ந்தேன்.

அவர் என் கையைப் பிடித்து தன் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். அவர்தான் மதர் சுபீரியர் என்பது பின்னர் தெரிந்தது. முதல் வேலையாக மேரி என்ற தன் உதவியாளரை அழைத்து விசாரிக்கச் சொன்னார். என் விருப்பத்தையும் வீட்டு நிலையையும் சொன்னேன். மேரி மொழி பெயர்த்துச் சொன்னார். அடுத்ததாக டீயும் பனிசும் வந்தது. பனிசை இரண்டாக டீயில் தோய்த்து ஒரே தடவையில் மென்று விழுங்கிய என் அசுரப் பசியைப் பார்த்து மதருக்கு சிரிப்பு வந்து விட்டது.

மதர் மேரியிடம் நூறு ரூபாவைக் கொடுத்து இரண்டு செட் யுனிபோர்ம், புத்தகம் கொப்பிகள், சப்பாத்து வாங்கித் தந்து வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படிச் சொன்னார்.

அடி வாங்க ரெடியாகத்தான் மாலையில் வீடு சென்றேன். ஆனால் காணாமல் போன பையன் வந்து விட்டான் என்ற சந்தோஷத்தில் அடி விழவில்லை. நான் வாங்கி வந்த பொருட்களைக் காட்டி என் பாடசாலை ஆசையை சென்னேன். மறுநாள் பாடசாலைக்குச் சென்றேன்.

அதன் பின்னர் நான் மதர் சுப்பிரியரின் செல்லப் பிள்ளையானதோடு, மகேஸ்வரி டீச்சர், பொன்மணி டீச்சர் ஆகியோரின் விருப்ப மாணவனுமானேன்.

கிரேக் தோட்டத்தில் இருந்து தினமும் பண்டாரவளைக்கு நடந்து வந்து போவது சிரமமாக இருக்கவே ஒரு கடையில் வேலை செய்தபடி படிக்கலாம் என்று நினைத்தேன். நான் காலையில் பாடசாலை சென்று மாலையில் கடையில் வேலை செய்ய என்னை அனுமதித்தவர்தான் யமுனா ஸ்டோர்ஸ் சொக்கலிங்கம். பாடசாலை முடிந்ததும் உடை மாற்றிக்கொண்டு பலசரக்குக் கடை வேலையில் இரவு பத்து மணி வரை வேலை செய்வேன்.

தேவமாதா மாதிரி எனக்கு ஒரு இக்கட்டான சூழலில் அபயக்கரம் நீட்டி படிப்பதற்கு வாய்ப்பு அளித்த மதர் சுபீரியரையும் தங்கிப் படிக்க உதவிய சொக்கலிங்கம் முதலாளியையும் நான் என் வாழ்க்கையில் புரட்டிப் போட்ட, திசை திருப்பிய மறக்க முடியாத மனிதர்களாக கருதுகிறேன். இவர்கள் இருவரும் என் வாழ்க்கையில் குறுக்கிடாவிட்டால் இன்றைக்கும் ஒரு தோட்டத் தொழிலாளியாகவே நான் இருந்திருக்கலாம்.

## பெப்ரவரி மாத பலாபலன்கள்

01-02-2013 தொடக்கம் 28-02-2013 வரை

சோதிடமாமணி நவா

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்த மேட இராசியினருக்கு பலவித நன்மைகள் வந்து சேரும். செய்தொழில் விருத்தி பணவரவு, காரியங்களில் அனுகூலம், பிரயாணங்களில் வெற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலை, உறவினர்களால் உதவிகள் கிட்டும். உத்தியோகஸ்த்தர்கள் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் கடமை புரிவர் முதலீட்டாளர்களுக்கு, முதலீடுகளில் இருந்து வந்த மனக்குறைகள் நீங்கும். எதையும் திட்டமிட்டுச் செய்தல் நன்மை தரும். அதிர்ஷ்டநாள் புதன் அதிர்ஷ்ட திகதிகள் 09.27

### இடபம்

கார்த்திகை பின்முக்கால், ரோகிணி மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்த இடப இராசியினர் சிறிது மனக்குழப்பங்கள் அடைந்து தெளிவு பெறுவர். செய்தொழில்களில் மந்தம், பணவரவுகள் தாமதம், எதிர்பார்த்த கருமங்களில் சிறு தடைகள் ஏற்படல், வீண் செலவு, குடும்பத்தில் மனக்குழப்பங்கள் தோன்றி மறையும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் கடும் உழைப்புக்கு ஆளாவர். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து கொள்ளுதல் நன்மை தரும். அதிர்ஷ்டநாள் வியாழன், அதிர்ஷ்ட திகதி 10, 23

### மிதுனம்

மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்த மிதுன இராசியினர் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்வது நல்லது. செய்தொழில்களில் குழப்ப நிலை பணவிரயம், காரியங்களில் வீண் தடைகள், மறைமுக எதிர்ப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சியுள்ள தன்மை, உத்தியோ கஸ்தர்கள், மாணவர்கள், கடமைகளில் மந்தநிலை, முதலீட்டாளர்கள், முதலீடுகளால் வீண் கவலை கொள்ளல் ஏற்படும். அதிர்ஷ்ட நாள் வெள்ளி, அதிர்ஷ்ட திகதிகள் 6, 24

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்த கர்க்கடக இராசியி-னருக்கு மன நிம்மதியை தரும். செய்தொழில்கள் சீராக நடந்திடும். பணவரவுகள் தாமதமாகி கிடைக்கும். புதிய முயற்சிகளால் அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் உற்சாகத்துடன் கடமை புரிவர். முதலீட்டாளர்களுக்கு எதிர்பார்த்த முதலீடுகளால் நன்மையுண்டாகும். அதிஷ்டநாள் திங்கள், அதிஷ்ட திகதிகள் 12, 21

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்த சிங்க இராசியினருக்கு சிக்கல்களை ஏற்படுத்தாது. செய்தொழில்களில் மன நிறைவுண்டாகும். பணக்கஷ்டங்கள் தீரும். புதிய முயற்சிகளை பின் தள்ளி வைப்பது நல்லது. குடும்பத்தில் எதிர்பார்த்த கருமங்கள் நிறைவுறும். மகிழ்ச்சி நிலை தோன்றும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கடமைகளில் உற்சாகம் ஏற்படும். முதலீட்டாளர்கள் கடும் உழைப்புக்கு ஆளாகுவர். பணமுடைகளும் ஏற்படும். அதிர்ஷ்டநாள் வியாழன். அதிர்ஷ்ட திகதிகள் 09, 18

### கன்னி

உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்த கன்னி இராசியினர் சிறிது கவலையுடன் கருமமாற்ற நேரிடும். செய்தொழில்கள் சீராக அமையாது. பணவிரயமும், பணக்கஷ்டமும் ஏற்படும். புதிய முயற்சிகள் பலனளிக்காது போகும். குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற தன்மை நிலவும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் வீண் தொல்லைகளுக்கு ஆளாகுவர். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து நடப்பது நன்மை அளிக்கும். அதிஷ்டநாள் புதன், அதிஷ்ட திகதிகள் 03, 21

### துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்த துலாம் இராசியினருக்கு மனக்கஷ்டங்கள் குறைந்திடும். செய்தொழில்கள் முன்னேற்றம், பணவரவு, தடைப்பட்டிருந்த கருமம் நிறைவேறல், எதிர்பாரா செலவு, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலை, புதிய கருமங்க் நிறைவேறல், உத்தியோகஸ்தர்கள், மாணவர்களின் மனக்கஷ்டங்கள் நீங்கும். முதலீட்டாளர்கள், முதலீடுகளால் நற்பலன் பெறுவர். புதிய முதலீடுகளையும் தொடங்குவர். அதிர்ஷ்ட நாள் வெள்ளி, அதிர்ஷ்ட திகதிகள் 15, 24

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்த விருட்சிக இராசியி-னருக்கு மனமகிழ்ச்சி தரும். செய்தொழில்கள் சீராக நடந்தேறும். எதிர்பார்த்த பணவரவுகள் வந்து சேரும். புதிய முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், தமது கருமங்களை திட்டமிட்டுச் செய்தால் வெற்றிகாண்பர். முதலீட்டாளர்கள் பாரிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்வது நல்லது. அதிர்ஷ்ட நாள் செவ்வாய், அதிர்ஷ்ட திகதிகள் 04, 22

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்த தனு இராசியினருக்கு மனக்குழப்பம் தராது. செய்தொழில்கள் சிறிது கஷ்டங்களை தந்து நன்னிலை பெறும். பணவரவு, காரியங்களில் வெற்றி, புதிய முயற்சிகள் யாவும் பலனளிக்கும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக்கஷ்டங்கள் மறையும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், மனக்கவலையின்றி கடமை புரிவர். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து அடக்கமுடன் செயற்படுவது நன்மைதரும். அதிஷ்ட நாள் வியாழன், அதிர்ஷ்ட திகதிகள் 05, 18

### மகரம்

உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்த மகர இராசியினருக்கு மன மகிழ்ச்சி குறைந்து காணப்படும். செய்தொழில்கள் சீராக அமையாது. பணவிரயம் தரும் புதிய முயற்சிக-ளில் தடைகள், மனக்குழப்பங்கள் ஏற்படும். குடும்பத்தில் வீண் மனகஷ்டங்கள் ஏற்பட்டு மறையும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், மனச்சஞ்சலங்களுக்கு ஆளாவர். முதலீட்டாளர்கள் திட்டமிட்டுக் கருமமாற்றாவிடில் கஷ்டங்களை எதிர்கொள்ளநேரிடும். அதிர்ஷ்ட நாள் புதன், அதிர்ஷ்ட திகதிகள் 14, 23

### கும்பம்

அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்த கும்ப இராசியினருக்கு கூடிய கவலைகளை தராது. செய்தொழில்கள் சீராக அமையும். எதிர்பார்த்த பணவரவுகள் வந்து சேரும். புதிய முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மனக்கஷ்டங்கள் குறைவடையும். உத்தியோகஸ் தர்கள், மாணவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்வது நன்மை தரும். முதலீட்டாளர்கள் தமது கண்காணிப்பில் முதலீ டுகளை வைத்துக் கொள்வது நன்மை தரும். அதிஷ்ட நாள் வெள்ளி, அதிஷ்ட திகதி 7, 25

### மீனம்

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்களில் பிறந்த மீன இராசியினருக்கு மிகவும் அவதானத்துடன் நடக்கவேண்டிய காலம். செய்தொழில்களில் பங்கம் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைக்காது போகும். புதிய முயற்சிகளில் வீண் தடைகள் உண்டாகும். குடும்பத்தில் மனக்குழப்பங்கள் ஏற்பட்டு மறையும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் வீண் குறைகள் கேட்க நேரிடும். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளால் கவலையடைய நேரிடும். அதிர்ஷ்டநாள் திங்கள். அதிர்ஷ்ட திகதிகள் 10, 19

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK) மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்*

**தாய்ப்பால் குழந்தைகளுக்கு இன்றியமையாதது என்றும் அதற்கு ஈடில்லை என்றும் கூறப்படுவதை நாம் அறிவோம். எனினும் வளர்ந்தோரும் நோய்க்கு மருந்தாகவும், எயிட்ஸ் நிவாரணியாகவும், காசநோய், உடல் பலவீனம், பால்வினை நோய்கள் ஆகியவற்றுக்கு பரிகாரமாகவும் தாய்ப்பாலை நேரடியாக அருந்துகிறார்கள் என்று சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சஞ்சிகையில் படித்து அதிர்ச்சி அடைந்தேன். இதற்கென தாய்மார்களிடம் விலைபேசி அருந்துவதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இப்படி ஒரு சக்தி தாய்பாலுக்கு உண்மையாகவே இருக்கிறதா? ஏனெனில் நம்புவதற்கு கடினமாக இருக்கிறது.**

# தாய்ப்பாலை வளர்ந்தோர் அருந்துவது வீரியத்தை அதிகரிக்குமா?

உங்கள் கேள்வியை படிக்கக் கவலையாக இருக்கிறது. காண்டா மிருகக் கொம்பில் பாலியல் வீரியத்தை அளிக்கும் சக்தி இருக்கிறது என்றும் இக்கொம்பை ஒரு கோப்பையாக செய்து அதில் பானங்களை அருந்தி வந்தால் கிழவனும் வாலிப முறுக்கோடு செயல்பட ஆரம்பித்து விடுவான் என்ற தூரகிழக்கு நாடுகளில் நிலவும் ஒரு மூட நம்பிக்கையே காண்டா மிருகங்கள் வேட்டையாடப்படுவதற்கு பிரதான காரணமாம். உணவு, மருத்துவம் போன்ற துறைகளில் இவ்வாறான மூட நம்பிக்கைகள் நிலவுவதால் பல அப்பாவி உயிரினங்கள் பெருமளவில் அழிநது வருகின்றன. சிசுவுக்கு முழுமையாக கிடைக்கவேண்டிய தாய்ப்பாலை இளமையும், வாலிப முறுக்கும் திரும்ப வேண்டும் என்பதற்காக கணவர்மாரும் (உண்மையில் இது ஒரு திருட்டு) வக்கிரம் பிடித்தவர்களும் பருகுவது ஒரு இழிவானதும், கொடூரமானதுமான செயலே தவிர, இதனால் அவர்கள் அடையும் பலன் எதுவுமே கிடையாது.

பிறந்த சிசுவின் சமிபாட்டுத் தொகுதி, ஈரல் மற்றும் அவயங்கள் முறையாக இயங்குவதற்கு காலம் எடுக்கும் என்பதால் அச்சிசுவின் ஜீரண சக்திக்கு ஏற்றதான, குழந்தைகளுக்குத் தேவையான சக்தியை அளிக்கும் வகையில் இயற்கை தந்துள்ள அமிர்தமே தாய்ப்பால். சிசுவுக்கு இது ஒரு பூரணமான, போஷாக்கான உணவு. தனது குழந்தைக்கு ஒரு தாய் பாலை ஊட்டும்போது அவள போஷனையை மட்டும் ஊட்டவில்லை. இன்னும் பலவற்றையும் ஊட்டுகின்றாள். இதனால் தான் உலகெங்கும் ஒவ்வொரு தாய்மாரும் தாய்ப்பாலை மட்டுமே ஊட்டவேண்டும் என்பதை வலியுறுத்தி சொல்கிறார்கள்.

ஒரு சிசு பிறக்கும்போது சுமார் 6 அல்லது 7 இறாத்தல் எடைகொண்டதாக இருக்கும். பால் உண்பது, கை, கால்களை அசைப்பது, நித்திரை செய்வது ஆகிய மூன்று காரியங்களையே சிசு செய்யும். இவற்றுக்கும் மலசலம் கழிப்பதற்குமே சக்தி தேவை. இதற்கான சக்தியை தாய்பால் அளிக்கிறது. புட்டிப்பாலோடு ஒப்பிட்டால் தாய்பாலில் சர்க்கரை அளவு குறைவு. இதனால்தான் பிறந்த சிசுவுக்கு முதலிலேயே புட்டிப்பாலைக் கொடுத்து பழக்கி விட்டால் பின்னர் அது தாய்பாலை விரும்பாத நிலை தோன்றிவிடுகிறது.

தாய்பாலுக்கு ஒரு விசேஷம் இருக்கிறது. தாய்ப்பாலில் அடங்கியிருக்கும் உயிர்ச்சத்துககள், கொழுப்பு, புரதம், மாப்பொருள் என்பனவற்றின் அளவு எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குழந்தைக்கு எந்த சமயத்தில் என்னென்ன விகிதத்தில் இவை தேவைப்படுமோ அந்தந்த விகிதத்தில் இச்சத்துக்கள் தாய்ப்பாலில் கூடுவதும் குறைவதுமாக நவீன ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தாயின் முலைக் காம்பில் இருந்து பீறிடும் முதல் சொட்டு சீம்பால் சிசுவுக்கான முதல் நோய் தடுப்பு மருந்தாக அமைகிறது. தாய்ப்பால் பருகும் சிசுவுக்கு தனியாக நீர் பருக்கத் தேவையில்லை. தேவையான நீர் பாலிலேயே இருக்கிறது. நுண்ணுயிர் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியும் தாய்ப்பாலுக்கு உண்டு. கண்களில் கட்டி மற்றும் சிறு வருத்தங்கள் ஏற்படும்போது இரண்டு சொட்டு முலைப்பாலை கண்களில் விடுவார்கள். முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டதும் பிறப்பால் எதிர்ப்பு சக்தியும் கொண்ட ஒரு திரவமாக தாய்ப்பாலை பாட்டிமார் அறிந்து வைத்திருந்தனர். பாலை விட்டதும் வருத்தங்கள் மறைந்து விடும். சிறு காயங்களுக்கும் தாய்ப்பாலை தடவுவதுண்டு.

இது எப்படி என்றால், தாய்ப்பாலுக்கும் உளவியலுக்கும் இடையிலான சம்பந்தத்தை இனி பார்ப்போம். தாயார் கோபமாகவும் காச்மூச்சென சத்தம் போட்டுக்கொண்டும் இருக்கும்போது சிசுவுக்கு பாலூட்ட கூடாது. பாலை உறிஞ்சிக் குடிக்கும்போது சிசு தன் தாயாரின் முகத்தையும் முக்கியமாகக் கண்களையும் உற்றுப்பார்க்கிறது. கவனிக்கிறது. தாயும் மிகுந்த பரிவுடன் தடவிக்கொடுத்தபடியே சிசுவின் கண்களை பார்க்கவேண்டும். இருவருக்கும் இடையிலான பாசப்பிணைப்பை இது ஏற்படுத்துகிறது என்பதை மறக்கவேண்டாம்.

தாய்ப்பால் ஊட்டும்போது சிசுவை அணைத்தபடி அதன் உடல் தாயின் வயிற்றோடு ஒட்டியதாக வைத்திருக்கவேண்டும். குழந்தை தனக்கு கிடைக்கும் மிகப்பெரும் 'குஷன் சொகுசு'சாக இதைக் கருதுகிறது. தாய்மீது மிகுந்த பற்றை எற்படுத்துகிறது. உறுதியான உள விருத்திக்கும் தாய்-சேய் உறவு பாலத்துக்கும் உதவுகிறது. தாய்க்கு இருக்கக்கூடிய விரக்தி, மனஅழுத்தம், அச்ச உணர்வு என்பன இதனால் குறைகிறது என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இன்னொரு முக்கிய விஷயத்தைத் தாய்மார் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு சிசு சுகவீனமுற்றிருக்கும் போது அதன் அருகே தாயார் எப்போதும் இருக்கவேண்டும். சிசுவுக்கு அருகே இருந்து கவனித்துக்கொள்ளும்போது நோய் விரைவில் குணமடைகிறது என்பதும் கண்டறியபட்டுள்ளது. மேலும் தாய்ப்பால் ஊட்டும் தாய்மாரின் பொலிவு அதிகரிக்கிறது என்பதே உண்மை. மார்புப் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பும் குறைவு. பாலூட்டுவதால் எந்த பக்க விளைவும் எக்காரணம் கொண்டும் ஏற்படுவதில்லை.

தாய்ப்பால் மற்றும் தாய்ப்பால் ஊட்டுவதில் உள்ள மகிமையையும் அவற்றின் சாதகமான அம்சங்களையும் பார்த்தோம். இப்பால் முற்று முழுதாக சிசுக்களுக்கென இயற்கையாக வடிவமைக்கப்பட்டுள்ளதே தவிர பெரியோர்க்கல்ல. சிசுக்களுக்கு மந்திரமாக செயல்படும் தாய்ப்பால் எந்த வகையிலும் பிரயோசனம் அற்றது. பெரியவர்களின் தீரா நோய்கள், உடல் பலவீனங்களைக் குணப்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் என்ற நம்பிக்கையும், வாலிப முறுக்கை திரும்பப் பெறலாம் என்ற எதிர்ப்பார்ப்பும் முற்றிலும் தவறானது. ஆதாரமற்றது. விலங்குகள் கூட குட்டிகளுக்கான மடிப்பாலை பருகுவதில்லை. தாய்ப்பாலில் அடங்கி இருக்கும் உயிர்ச்சத்துக்களும் ஏனைய சத்துப் பொருட்களும் எந்த வகையிலும் வளர்ந்தோரின் உடம்புக்கு உதவாது.

இன்னொரு விஷயம். ஒரு பெண்ணின் முலைக்காம்புகளை உறிஞ்சி ஒரு மனிதன் பால் அருந்தும்போது அப்பெண்ணுக்கு எயிட்ஸ் நோய் இருக்குமானால் அம்மனிதனை தொற்றிக் கொள்ள முடியும். அம்மனிதனிடமிருந்தும் நோய்கள் அவளை பற்றிப் பீடிக்கக்கூடும். சிசுக்களுக்கான உணவை திருட்டுத்தனமாக எடுத்துக்கொள்ளும் அளவுக்கு மனிதர்கள் தரம் தாழ்ந்து போயிருப்பதை நினைக்கும் போது உடல் கூசுகிறது அல்லவா!

*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
***எஸ். எப். எல். அக்பர்***
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயாளரால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். இது எமது தேவைக்காக,*

**வானவில் மருத்துவம்,**
**த.பெ. எண். 1218**
**கொழும்பு.**
**e-mail: vannavaanavil@gmail.com**

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 27

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | 4 | 5 | 6 | ■ | ■ |
| 7 | | ■ | 8 | 9 | | | | | ■ |
| 10 | | | | | 11 | 12 | | 13 | 14 |
| 15 | | | | | | | ■ | | |
| 16 | | | | | 17 | | | | |
| | ■ | ■ | 18 | 19 | | ■ | ■ | ■ | |
| 20 | | 21 | | | ■ | 22 | | | |
| 23 | | | | | ■ | | | ■ | ■ |
| | ■ | | ■ | 24 | | | | | ■ |
| ■ | 25 | | | | 26 | | | ■ | ■ |

### இடமிருந்து வலம்

1. கோட்டேயில் இருந்து ஆட்சி செய்த இலங்கை மன்னன் (8)
7. இதை வாய்விட்டு செய்தால் நோய் விட்டு போகும் (2)
8. இரவுக்கு எதிர் (3)
9. இதை கட்டிக்கொண்டு ஓடிப்போவோமா? (5)
10. அண்மையில் வெளிவந்து நல்ல பெயரை வாங்கிய தமிழ்படம் (5)
12. ஒரு வகை அரிசி (3)
15. இது மனிதரில் இயற்கையாகவே அமைந்த குணம்.
16. நரிக்கு இது இருக்கிறது (5)
17. பெண்கள் இதை விரும்புவார்கள் (4)
18. பழைய படங்களின் முடிவில் இதை போடுவார்கள் (3)
20. தண்ணீரில் மிதக்கும் (4)
22. ஜாக்கிரதை (4)
23. கதாநாயகனுக்கு எதிரி (4)
24. ஆயுர்வேத மருந்து சாப்பிட்டால் இது இருக்கவேண்டும் (5)
25. கசக்கும் காய்கறி
26. பழுத்தால் இனிக்கும் (3)

### மேலிருந்து கீழ்

1. இது வந்தால் பத்தும் பறந்து போகும் (2)
2. தாலாட்டு (3)
3. வகை (3)
4. மன்னர்கள் விரும்பும் விளையாட்டு (6)
5. கல்யாண விருந்தில் கட்டாயம் இருக்கும் (4)
6. இது இருந்தால்தான் பெண்ணுக்கு மதிப்பு (3)
8. எதை வாங்கவும் இது வேண்டும் (3)
10. யுத்தம் செய்ய இது வேண்டும் (4)
11. எவ்வளவு சமாதானம் பேசினாலும் இது நடந்து கொண்டுதான் இருக்கிறது (4)
13. அம்பு (3)
14. அளவோடு செலவு செய்தல் (5)
19. தலைமுறை (5)
20. கவிஞர்கள் எழுதுவார்கள் (3)
22. வெட்டும் (3)
23. வித்து (2)

*சரியான விடைகளை எழுதி*
*20. 02. 2013க்கு முன்*

குறுக்கெழுத்துப் போட்டி - 27
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 26க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**




**மனைவி:** *பக்கத்து வீட்டுல பெரிய சண்டை... நீங்க ஒரு தடவை போய் என்னன்னு பார்க்க கூடாதா?*

**கணவன்:** *நான் ஒரு தடவை போனதால வந்த சண்டை தாண்டி அது.*




# புலம்பெயர் நாடுகளில் ஆசியப் பெற்றோரும் குழந்தை வளர்ப்பும்



'ஒரு யாழ்ப்பாணத்து ஆசிரியரை ஓவியமாகத் தீட்டுங்கள்' என்று எந்த மாணவனிடம் கேட்டாலும் அவன் வரையும் ஓவியம் கையில் கம்புடன் தான் இருக்கும். 'அடியாத மாடு படியாது' என்று சிறிய வயதில் இருந்தே இலங்கை மாணவர்கள் பழக்கப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

தங்களின் நீண்டகால பழக்கத்தை மாற்றவேண்டும் என்ற பெரும் மன அழுத்தத்தில் இங்கு வெளிநாடுகளில் இந்திய, இலங்கை பாகிஸ்தானிய, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் பெற்றோர்கள் இருக்கிறார்கள். அதிலும் ஆணாதிக்க சமூகத்தில் இருந்து வந்த தந்தைமார் பெரும் சங்கடப்படுகின்றனர்.

இலங்கை,இந்தியா மற்றும் அதனை அண்டிய நாடுகளில் இருந்து அகதிகளாக அல்லது பொருளாதார காரணங்களுக்காக வந்தவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களையும் சேர்த்தே கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் பிள்ளைகளை அடித்து திருத்துதல் என்ற ஒன்றும் அடங்குகின்றது. அது கிராமம் நகரம் என்றில்லாமல் அங்கிருந்து வந்த எல்லா பெற்றோரிடமும் இருக்கும் பழக்கமாகும்.

வெள்ளைக் கார பெற்றோருக்கு கோபம் வந்தால் அவர்கள் அடிக்காமல் உடலில் காயம் வராமல் பிள்ளைகளை தண்டிப்பார்கள். அவர்கள் வீட்டில் 'பணிஸ்மன்ட் மூலை' என்றொரு இடம் இருக்கும். அந்த இடத்தில் உட்கார வைத்து விடுவார்கள்.

ஆனால் எமது பெற்றோரிடம் அந்தளவுக்கு பொறுமை இல்லை. திடீரென்று பிள்ளையை கை நீட்டி அடித்து விடுவார்கள்.

தங்கள் பிள்ளைகள் குழப்படி செய்தால் அவர்களை அடித்து திருத்தி விடுதல் என்ற மனோபாவத்தில் இருந்து அவர்கள் முற்று முழுதாக விடுபட வேண்டும். என்ற கட்டாயம் இப்பொழுது வந்து இருக்கிறது. அப்படி இல்லாவிடில் அவர்கள் ஐரோப்பிய சட்டத்தின் பிரகாரம் சிறுவர்களை துன்புறுத்தியதற்காக தண்டிக்கப்படுவார்கள்.


சந்திரசேகரன் - அனுபமா தம்பதியினர்

நோர்வேயின் வதிவுரிமை கொண்ட இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த சந்திரசேகர் மற்றும் அவரது மனைவி அனுபமா சந்திரசேகர் தம்பதியினர் தற்போது நோர்வேயில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். இது பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

சந்திரசேகரின் ஏழு வயது மகனான சாய்ராம் மனநல குறைபாடு தொடர்பில் இந்தியாவில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையிலேயே பெற்றோர் நோர்வேக்கு அழைக்கப்பட்டு ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றத்தினால் இந்த சிறைத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தந்தையான சந்திரசேகருக்கு 18 மாதங்களும் தாய் அனுபமாவுக்கு 15 மாதங்களும் சிறைத் தண்டனையாக விதிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் வதியும் மேற்படி தம்பதியினரின் மகனான சாய்ராம் தன்னை பெற்றோர் துன்புறுத்துவதாக தான் கற்கும் பாடசாலையில் புகார் கொடுத்ததையடுத்து குறித்த பெற்றோரிடமிருந்து சாய்ராமை நோர்வே சிறுவர் காப்பகம் பொறுப்பெடுத்தது. இதன்பின்னர் உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்ட சாய்ராம் பெற்றோரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து சாய்ராமும் அவனது இரண்டு வயது சகோதரரான அபிராமும் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்நிலையில் சந்திரசேகர் மற்றும் அவரது மனைவி அனுபமா ஆகியோருக்கு எதிராக நோர்வே சிறுவர் காப்பகத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருந்ததை அடுத்து மேற்படி தம்பதியர் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி இந்தியாவிலிருந்து நோர்வேக்கு வந்தடைந்தனர்.



இவ்வாறு சென்ற தம்பதியினர் நவம்பர் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டு டிசம்பர் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்தே சாய்ராமை பெற்றோர் கொடுமைப் படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு தந்தைக்கு 18 மாத சிறைத் தண்டனையும் தாயாருக்கு 15 மாத சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் தாங்கள் எந்தத் தவறுமே செய்யவில்லை என்று வாதிடுகின்ற குழந்தைகளின் பெற்றோர், கலாசார ரீதியான வேறுபாடுகளே இந்தப்பிரச்சனைக்கு காரணம் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

குழந்தைகளுக்கு கைகளால் உணவூட்டுவதும், குழந்தைகளை பெற்றோருடனேயே படுக்கவைப்பதும், குழந்தைகள் அழும்வேளைகளில் தாய்ப்பால் கொடுப்பதும் இந்திய பின்புலங்களில் வளரும் குடும்பங்களில் நிலவும் வழக்கம் என்பதை நோர்வே குழந்தைகள் நலன்சார் அதிகாரிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பது இந்தியப் பெற்றோரின் வாதம்.

ஆனால், குழந்தைகள் பராமரிப்பில் இந்தப் பெற்றோர் உரிய கவனம் செலுத்தவில்லை என்றும் பராமரிப்பை தாங்கள் பொறுப்பேற்க நியாயமான காரணங்கள் இருந்தன என்றும் நார்வே ஸ்டேவேஞ்சர் நகரிலுள்ள சிறார் பாதுகாப்பு பணியகத்தின் தலைவர் கன்னர் டொரேஸன் சொல்கிறார்.

''இங்கு பிரஜைகளாக இருக்கும் வெளிநாட்டவர்கள் ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் சட்டங்களை மதித்து நடக்கவேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக் கிடையிலான புரிந்துணர்வு முக்கியம். அதற்காக ஆசிய பெற்றோர்களுக்காக சட்டங்களை மாற்ற முடியாது. எல்லோருக்கும் ஒரே சட்டம்தான் இங்கு அமுல் படுத்தப்படும்.'' என்கிறார் நீண்டகாலமாக இங்கு லண்டனில் தமிழாசிரியராக இருக்கும் சிவச்சந்திரன்.

இங்கு வெளி நாடுகளில் வாழுகின்ற வாழ்க்கை முறைக்கும் நமது இந்திய வாழ்க்கை முறைக்கும் இடையில் பாரிய பிரச்சினை வருகிறது. வெளிநாடுகளில் விவாகரத்து அல்லது பிரிந்து போதல் மிகவும் இலகுவாக இருப்பதனால் அவ்வாறு பிரியும் வெள்ளைக்கார தம்பதிகளின் பிள்ளைகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். லிவ் இன் டுகெதராக சேர்ந்து வாழும் வெள்ளைக்காரர்கள் தாம் விரும்பினால் பிள்ளைகளை பெற்றெடுத்து வளர்க்கிறார்கள். ஆனால் பிரியும் பொழுது பிள்ளைகள் யாரோடு இருப்பது என்ற பிரச்சினை வருகிறது. அந்த தம்பதிகளில் ஆண் வேறு ஒருவருடன் திருமணம் முடித்தாலோ அல்லது லிவ் இன் டு கெதராக வாழ்ந்தாலோ அல்லது பெண் இப்படி செய்தாலோ பிள்ளைகள் அவர்களிடம் இருக்கும்பொழுது அதிகமாக துன்புறுத்தப்படலாம் அல்லது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்பதற்காகவே இங்கு ஐரோப்பிய நாடுகளில் பிள்ளைகள், குழந்தைகள் தொடர்பான கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. இது ஆசிய பெற்றோருக்கு அன்னியமான விடயங்களாக இருக்கின்றன. அது மட்டுமல்ல; இந்த சட்டங்கள் அவர்களுக்கு புரிவதில்லை.

அம்மாவும் அப்பாவும் பிள்ளையை வெறுத்தால் அந்தப் பிள்ளையை கவுன்ஸில் பொறுப்பெடுத்து வளர்ப்புப் பெற்றோரை தேடி பிடித்து வளர்க்கக் கொடுக்கும்.

இப்படி லட்சக்கணக்கான பிள்ளைகள் வளர்ப்பு பெற்றோரிடம் வளருகிறார்கள். இப்பொழுது லண்டன் பூராகவும் 'வளர்ப்பு பெற்றொர் தேவை' என்ற விளம்பரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன.

வளர்ப்பு பெற்றோரை தெரிவு செய்வதென்பது பெரிய வேலை. கவுன்ஸில் ஒரு பிள்ளையை வளர்க்க மாதம் 250 பவுண்டுகள் வரை கொடுக்கின்றது. ஆனால் கவுன்ஸிலுக்கு கவுன்ஸில் தொகை மாறுபடும்.







எந்த புண்ணியவான் இதைக் கண்டு பிடித்தானோ தெரியவில்லை. ஆனால் முன்னணி நடிகையோ அல்லது அறிமுக நடிகையோ மழையால் நனைவதாகவோ அல்லது அங்கம் தேய்த்து குளிப்பதாகவோ காட்சி வைத்தால் நிச்சயம் அந்தப் படம் வெற்றி பெறும் என திரையுலகினர் நம்ப ஆரம்பித்து விட்டார்கள். ஏனெனில் மூட நம்பிக்கைகளுக்கு பேர் போன இடம்தான் புதுமையும் புரட்சியும் பற்றி தம்பட்டம் அடிக்கும் இந்த திரையுலகம், இதற்காகவே ரூம் போட்டு காட்சிகளை அல்லது பாடல்களை யோசிக்கவும் செய்கிறார்கள்.

இதுபோன்ற காட்சிகளை எடுப்பதற்கொன்றே தனித் துறை இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி விட்டால் மூன்று அல்லது நான்கு லொரிகளில் தண்ணீரும் ஹோஸ் பைப்புடனும் ஆஜாராகி விடுவார்கள். ஹோஸ் பைப்பின் முனையில் ஷவரில் வருவது போல் தண்ணீர் பீய்ச்சி அடிப்பதற்கான ஷவர் இருக்கும். அதன் வழியாக நீரை பீய்ச்சி அடிப்பார்கள். இது மாதியான தருணங்களில் அதிக டேக் போக முடியாது. தண்ணீரை விரயம் செய்ய முடியாது. எனவே முன்கூட்டியே சம்பந்தப்பட்ட நடிகை, நடிகரிடம் எப்படி, எந்த போஸில் என்ன செய்யவேண்டும் என்பதை சொல்லிவிடுவார்கள்.

வளரும் அல்லது அறிமுக நடிகை என்றால் சாதாரண லொரி தண்ணீரே போதுமானது. ஆனால், முன்னணியில் இருக்கும் டொப் ஹீரோயின் என்றால், சுத்தமான, சுகாதாரமான தண்ணீர் வேண்டும். இதற்காக தயாரிப்பாளர் பல ஆயிரங்கள் செலவு செய்து கேன் கேன் ஆக நீரை வாங்குவார். தவிர மழைக் காட்சியில் நடிப்பதற்கென தனியாக ஒரு தொகையையும் நட்சத்திரங்களுக்கு தர வேண்டும். அப்போதுதான் முன்னணி நடிகைகள் சம்மதிப்பார்களாம்.

# படம் வெற்றிபெற நடிகைகள் குளிக்க வேண்டுமாம்!





# சமந்தா சொன்ன ரகசியம்

'கோலிவூட்டில் நடித்து கோழி பிடிக்க முடியாதவர், டோலிவுட்டில் நடித்து ராக்கெட்டையே பிடித்தாராம்'' என்ற கதையாக, இங்கு 'மாஸ்கோவின் காவிரி'யில் மிதந்து, 'பாணா காத்தாடி'யைப் பறக்க விட்ட சமந்தா, ஆந்திராவில் இன்று 'நம்பர் வன்'னில் ஒருவர்!

**தமிழில் ஏன் இந்த இடைவெளி?**

இடைவெளி என்று சொல்ல முடியாது. தமிழில் மூன்று படங்கள் ரிலீசான பிறகும் நல்ல வாய்ப்பு வரவில்லை. என்ன காரணம் என்று இதுவரை தெரியவில்லை. அப்போது தெலுங்கு வாய்ப்பு வந்தது. 'விண்ணைத் தாண்டி வருவாயா' தெலுங்கில் வெளியானது. பிறகு 'பிருந்தாவனம்', 'தூக்குடு', 'ஈகா' (நான் ஈ) படங்கள் வந்தன. எனது நடிப்பில் தொடர்ந்து நான்கு படங்கள் சூப்பர் டூப்பர் ஹிட்டானதால், ராசியான நடிகையானேன்! ஆந்திர மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனால், தமிழில் தொடர்ந்து நடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. மற்றபடி, கோலிவுட்டை நான் மறக்கவில்லை.

**அழகும், இளமையும் பூத்துக் குலுங்குகிறது. யாராவது காதல் வலை வீசியதுண்டா?**

அப்பாடா... இவ்வளவு நேரம் சுற்றி வளைத்து பேசியது இதற்குத்தானா? எனக்கு ஒரு பெர்சனல் ஆசை இருக்கிறது. இதுவரை யாரிடமும் நான் பகிர்ந்து கொள்ளாத விஷயத்தை உங்களுக்கு சொல்கிறேன். இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் கழித்து, திருமணம் செய்துகொண்டு நிறைய குழந்தைகள் பெற்றுக்கொள்ள ஆசை. இப்போது சினிமாவில் ரொம்ப பிஸியாக இருப்பதால், திருமணம் குறித்து ஒரு நிமிடம் கூட யோசித்தது இல்லை. ஆனால், கண்டிப்பாக என் திருமணம், காதல் திருமணமாகத்தான் இருக்கும். உடனே, அந்த காதலன் யார் என்று கேட்காதீர்கள். ஒரே பேட்டியில் எல்லா விஷயத்தையும் சொல்லிவிடக் கூடாது. அது 'ஹீரோயின் தர்மம்' கிடையாது! என்று கூறி முடித்தார் சமந்தா.



# லூசு ரெஜினா

கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தின் மூலம் தமிழில் நடிக்கும் ரெஜினா, கண்டநாள்... அழகிய அசுரா... கன்னட சிவா மனசில சக்தி, இப்போது தெலுங்கில் ரொட்டின் லவ் ஸ்டோரி படத்திலும் நடித்து வருகிறார். சிவ கார்த்திகேயன் ஜோடியாக கேடிபில்லா கில்லாடி ரங்காவில் கலக்குகிறார். ரெஜினா உளவியலில் பட்டம் வாங்கியவர். படத்திலே மட்டும் லூஸா வருகிறாராம்.

# வரவிருக்கும்



திருமதி தமிழ்
ராஜகுமாரன் - தேவயாணி



6
ஷாம் - பூனம் கவுர்



ஒருவர் மீது இருவர் சாய்ந்து
லதுபரன் - ஸ்வாதி



உ
தம்பி ராமையா



# கவர்ச்சி நகைச்சுவையாக வரும் ஈகோ

'கந்தகோட்டை' படத்தை இயக்கிய சக்திவேல் இயக்கும் படம் 'ஈஸ்வர், கோமதி' சுருக்கமாக 'ஈகோ'.

''எனக்கு கவர்ச்சி கலந்த நகைச்சுவை பிடிக்கும். அந்த வகையில் இது முழுமையான காதல் கலந்த நகைச்சுவை படமாக இருக்கும். இதில் நடித்துள்ள அனைவருக்கும் இதுதான் முதல் படம். முகம் தெரியாத இரண்டு பேர் காதல் வயப்படுகிறார்கள். ஆனால், இவர்கள் காதலுக்கு பிரச்சினை வருகிறது. அந்த பிரச்சினையை நகைச்சுவை பின்னணியில் சொல்லியுள்ளேன் என்று கோடி காட்டுகிறார் இயக்குநர்.

''இதில் ஈஸ்வர் கேரக்டருக்கு, அடுத்த வீட்டு பையன் போல சாயல் கொண்ட புதுமுகம் தேவைப்பட்டது. அந்த வகையில் ஈஸ்வர் கேரக்டருக்கு வேலு பொருத்தமாக இருந்தார். நாயகியின் முரட்டு குடும்பத்தில் சிக்கி தவிக்கும் கேரக்டரில் வேலு வெளுத்து வாங்கியிருக்கிறார்.

நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள இதில் தமிழ் பேசத் தெரிந்த நாயகி நடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தோம். நீண்ட தேடலுக்கு பிறகு அணஸ்வராவின் புகைப்படம் எங்களுக்கு கிடைத்தது. தாய்மொழி மலையாளமாக இருந்தாலும் சென்னையில் பிறந்து வளர்ந்தவர். கோமதி கேரக்டரில் வாழ்ந்திருக்கிறார்.

கதையை நகைச்சுவையுடன் நகர்த்தி செல்வதில் பாலசரவணனுக்கு முக்கிய பங்கு இருக்கும். குட்டி சந்தானம் எனுமளவுக்கு மனுஷன் பின்னியிருக்கிறார். படத்தின் பெரும் பகுதியை பொள்ளாச்சியில் உள்ள ஒரு புதிய வீட்டில் படமாக்கினோம்,"'' என்கிறார் சக்திவேல்



# கற்பனைப் பெண்ணை நேரில் பார்த்தால்...



தெலுங்கில் வெற்றிப்பெற்ற 'தக்கரா தூரங்கா படத்தை தமிழில் 'பூவோடும் புயலோடும்' என்ற பெயரில் தயாரிக்கிறார்கள். விளம்பர கம்பெனியில் டிசைனராக வேலை செய்யும் நாயகன் கற்பனையாக ஒரு பெண் உருவத்தை வடிவமைக்கிறார். ஒரு கட்டத்தில், தான் வரைந்த கற்பனை பெண்ணையே நேரில் சந்திக்கிறார். அந்த சந்திப்பு காதலாக மலரும்போது, இருவரும் தீவிரவாதிகளால் கடத்தப்படுகிறார்கள். தீவிரவாதிகளிடமிருந்து காதலர்கள் எப்படி தப்பிக்கிறார்கள் என்பதை பரபரப்பான ஆக்ஷன் பின்னணியில் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் படம் வேதிகாவுக்கு இரண்டாவது இன்னிங்க்ஸ் என்று சொல்லலாம். அந்தளவுக்கு அவருடைய கேரக்டர் செம ரகளையாக இருக்கும். நிருபராக நடிக்கும் சிந்துதுலானி, துணிச்சலான கேரக்டரில் ரிஸ்க் எடுத்திருக்கிறார். தன்' முகபாவத்தால் சிரிக்க வைக்கும் பிரம்மானந்தம், இதிலும் பட்டையை கிளப்பியிருக்கிறார் என்கிறார் இயக்குநர் ரவிச்சாலி.



# மச்ச நடிகை ஹன்ஸிகா

தமிழ், தெலுங்கின் இன்றைய சூடான கேக் ஹன்ஷிகாதான். அவருக்கு ஜோடியாக நடிக்க சில இளம் நாயகர்கள் தவம் கிடக்கிறார்களாம். தமிழில் இருந்து தெலுங்குக்கு எளிதில் செல்ல ஹன்சிகாவை படத்தில் ஒப்பந்தம் செய்தால் போதும் என்று நினைக்கிறார்கள். இதனால், அம்மணியின் கால்ஷீட்டை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று, அவரது செல்போனுக்கு தொடர்ந்து எஸ். எம். எஸ் அனுப்புகிறார்களாம். புத்திசாலியான ஹன்ஸ், ''கொஞ்சம் பொறுமையா இருங்க. ஏற்கனவே ஒப்பந்தமான படங்களை முடிச்சிட்டு வர்றேன். அதுக்கு பிறகு கால்ஷீட் இருந்தா, கண்டிப்பா உங்க ஜோடியா நடிக்கிறேன்," என்று சொல்லி எஸ்கேப் ஆகிறாராம். பிழைக்கத் தெரிந்தவர்!



# திரைப்படங்கள்

ஒன்பதுல குரு
வினய் - லட்சுமிராய்

காதலைத் தவிர வேறொன்றும் இல்லை
யுவன் - சரண்யா மோகன்

# கவி முற்றம்



## அன்பு

நாணிக் கொண்ட
பொழுதுகளில் எல்லாம்
புன்னகைப் பூக்கள்
அர்ச்சனையான
நட்பின் ஒத்திகை
நிமிடங்களிலே அரங்கேற்றிய
விடியலில் கண்ணீர்
செல்கள் வீசாமல்
புன்னகை மலர்களையே
பரிசாக்கி விடு...

- ஜெ. முஹம்மட் ஜெஸீர்
பொத்துவில் - 27

## உயிருள்ளவரை...



கண்ட பார்வை மறைந்தாலும்
கொண்ட அன்பு மாறுவதில்லை.
ஒரு முறை தோன்றிய அன்பு
மறுஜென்மத்திலும் மாறக்கூடாது
பிரிவு என்பது யதார்த்தம்
புரிந்து நடந்து கொண்டால்
விதியின் சவால்களையும்
மதியால் மாற்றிடலாம்
நீ மனம் மாறினாலும் என்றும்
உன் மீதுள்ள என் அன்பு
உயிருள்ளவரை...

- என். சுகன்யா
விஸ்வமடு

## ஒரு தலைக் காதல்



இருவிழி கண்ட காதல்
உன் இருவிழி
சேராது தவிக்கின்றது!...
என்காதல்
ஒருதலைக் காதலானதால்

இன்று காதலெனும் பாதையில்
தனிமரமாய் நடக்கின்றேன்
உன்னோடு திருமணம்
என்ற முடிவைத் தேடி- என்
ஒரு தலைக் காதலுடன்.

- சா. டினேஷ் கிறிஸ்ரி
பறம்பாங்கண்டல், மன்னார்



## சாகட்டும் சாதியம்

சாதியம்
செத்துப்போனதாக
சாத்தான் சொன்னதை
சத்தியமென நம்பினோம்
நீரு பூத்த நெருப்பாய்
கூறுபோடும் குறியில்
குளிர்காய்கிறதாம் சாதியம்

செத்துப்போனது
சாதியம் அல்ல
மனிதம் என்பதை
மனதில் படும்படி
பால கணிதமாய்
பாடஞ்சொல்ல
இங்கு யாருமில்லை.

இருக்கவேண்டியவர்கள்
அறுக்கவேண்டியதை
இறுக்கமாக்கியது
மடமை
பொறுக்க முடியாது
மனிதம்
புதைக்குழியில் புலம்புவது
கொடுமை

சாதியம்
ஊவாவில் ஊதிப்
பெருகுவதைப்
பாதிப்பேர்
பக்குவமாய் சொல்லிவிட
சேதி தெரிந்த பின்னும்
பீதி கலந்தனை
நீதியாய் நீ கழிக்க
நினைக்காததும் ஏனோ!

இனம்
தனித்தனித் தீவானால்
இனியேது உனக்கு
கூட்டு விலாசம்
பிரிந்து போனாலும்
பிளந்து போனாலும்
இழந்து போவது உன்னைத்தான்

நீ இல்லாத இடத்தில்
சாதியம்
சாவுக்கொடி பிடிப்பதை
சாதனை என்றால்
சா'தீ'யை சாத்திக் கொள்!
சாத்தானாவது
சந்தோஷிக்கட்டும்!

- பன். பாலா



## நிலாக்காட்சி

அந்தி மாலைப் பொழுதில்
கருமை மிகு விண்ணில்
கதை சொல்ல வருவாள் ஔவை
வெண்ணிலவில் ஏறி

வானத்தில் மின்னும் நட்சத்திரங்களின்
ராஜாவாய் எமக்களிப்பான் தோற்றாம்- வெண்ணிலவு
மேலே வெண்ணிலவு ஒளிர
புவி ஒளிரும் அலுமினியத் தகடாய்

நிலாக் காட்சி காணும் எம் மனதில்
அதனுடன் விளையாட ஆசை தோன்றும்!
ஆனாலும் நாமொன்றும் நீல் ஆம்ஸ்ட்ரோங்
இல்லையே
நிலவில் கால் பதித்து விளையாட

- மகேந்திரன் குலராஜ்
பண்ணாகம், சுழிபுரம்



## காலைப் பொழுது

இரவின் தவம் கலைந்தது
பறவைகளின் விழிப்பில்
வைகரை இருளில்
கீழ்வானில் சூரியனின்
உதய ரேகைகள்
மின்னி எழுந்தன.
மாவீரனின் வாளாய்
காதில் விழுந்து
இதயத்தை தொட்டது
வாசல் தெளிப்பில்
கைவளை ஓசை
சாணிப் பந்தலில்
வாசலில் பூத்த
பூசணிப் பூவில்
வண்டுகள் ரீங்காரம்!


- கல்லொளுவை பாரிஸ்



## உறவு

தாயின் உறவு
தொப்புள் கொடி போல
தந்தையின் உறவு
ஆல் வேர் போல
சகோதர பாசம்
நம் அறிவு போல
பள்ளி நட்பு
கல்வெட்டு போல
என் உறவு
ஆழ் கடல்போல
என்றும் ஆழமானது.

- த.சசி
திருநாவற்குளம்
வவுனியா



## பள்ளி வாழ்வு

பாடசாலை எனும் பூந்தோட்டத்தில்
பூத்திட்டோம் உயர்வடைய
பூக்கள் எனும் பெயர் சூட்டினோம்
நம் நட்பினால்

பசுமையான நாட்கள்- நம்
பள்ளி வாழ்வில்- பிரிந்த பின்
பாலைவன ரோஜாக்களைப்போல்
நீரின்றி வாடுகிறோம்.

நட்பின் முத்திரையை ஒட்டி
வெறும் காகிதமாய் அனுப்பாமல்
பாலைவன ரோஜாக்களையும்
பனித்துளி ரோஜாவாக மாற்றலாம்
நம் பள்ளி வாழ்வில்

நட்பின் கற்பை மனதில் காப்போம்.

- எம்.எஸ்.எப். சாஜிதா
அடுலுகம, பண்டாரகம

## வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com

## பெண்ணே!

நான்
சுவாசிக்கும் நேரமெல்லாம்
உன் முகமே ஞாபகம்
காற்றலைகள் எல்லாம்
உன் நினைவினை
காலமெல்லாம் கூறிடும்.
இன்று அன்பால்
என் நெஞ்சமதில்
நிலைத்தாயே
கவியின் வடிவில்
தெரிந்தாயே
காதல் தந்ததால்
இன்று அந்த வானைவிட
உயர்ந்தாயே
என் காதல் பெண்ணே!



ச. டினேஸ் கிறிஸ்ரி
பறப்பாங்கண்டல்
மன்னார்.

எனக்கு இப்போது ஐம்பத்து மூன்று வயதாகிறது. இரண்டு பெண் பிள்ளைகள், ஒரு பையன். பையன் கிரிஜன் லண்டனில் பொறியியலாளராக இருக்கிறான். பெண்கள் இருவரும் பல்கலைக்கழக மாணவியர். என் கணவர் வங்கி மனேஜர். இறந்து இரண்டு வருடங்களாகிறது.

கணவர் இருக்குமட்டும் எனது வேலை மூன்று வேளையும் சமையல் செய்வதோடு துவைத்தல், வீடு துப்புரவாக்குதல், கடைகண்ணி போய் வருதல் போன்றவை தாம். அதற்காக நான் சிறிதும் கவலைப்பட்டது கிடையாது எனது கணவர், எனது பிள்ளைகள் என்று சின்ன வட்டத்துக்குள் வாழ்ந்தவள். பிள்ளைகள் வளர்ந்தது, படித்தது, இன்று பெயர் சொல்லுமளவிற்கு வாழ்வது எல்லாம் என் கணவரின் முயற்சியில் தான். அவரது கடின உழைப்பு, அன்பான கண்டிப்பு என் பிள்ளைகளை சமுகத்தில் அந்தஸ்த்தோடு வாழ வைத்திருக்கிறது என்பதால் அவர்களுக்கு சேவை செய்வதை பெரும் பேறாக கருதி வாழ்ந்திருக்கிறேன்.

# கணவரின் கைபேசி

பிரதீப்

திடீரென்று மாரடைப்பால் இரண்டு வருடங்களுக்கு முன் அவர் இறக்க, நான் தனியாக விடப்பட்டதாக முதல் தடவையாக உணர்ந்தேன். எனினும் என் பிள்ளைகளுக்காக வாழ்க்கையை தொடரத் தயாரானேன்.

பிள்ளைகளும் தந்தையின் பிரிவைத் தொடர்ந்து முழுப்பாசத்தையும் என் மேல் கொட்டினார்கள். லண்டனில் இருக்கும் மகன் அப்பாவின் கைபேசியை நானே உபயோகிக்க வேண்டும் என்று சொன்னான். இது நாள் வரையில் என் கணவர் பிள்ளைகளுடன் பேசிவிட்டு கைபேசியை என்னிடம் நீட்டுவார். வாங்கி ஆசைதீர பிள்ளைகளுடன் கதைத்து விட்டு அவரிடமே கொடுத்து விடுவேன். அவருடைய சேட் பொக்கட்டுக்குள் எப்போதும் சிணுங்கியபடி பத்திரமாக கைபேசி இருக்கும். அவர் போனை எடுக்கும் போதும் வைக்கும் போதும் காட்டும் கரிசனை மகன் மீது வைத்திருக்கும் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவதாக இருக்கும். இதை பலமுறை நான் இரசித்திருக்கிறேன். இவ்வாறு கணவரிடம் தவழ்ந்த இந்த கைபேசி என் கைபாவனைக்கு வந்ததும் நான் அதை இன்னொரு கடவுளாக பாவித்து சாமித் தட்டில் தான் வைத்தேன்!

விடுமுறைக்கு மகள் இருவரும் வீடு வந்த போது கைபேசியை இயக்குவது எப்படி, கதைத்த பின் அணைத்து வைப்பது எப்படி என்பதை சொல்லித் தந்தார்கள். உண்மையில் எனக்கும் அந்த இரு பட்டன்களை தவிர வேறு எதுவும் தேவைப்படவும் இல்லை.

அந்த கைபேசி 'ரிங் ரிங்' என்று சத்தம் போடுகையில் பேராந்தமாய் ஒன் பண்ணி வேண்டிய மட்டும் என் மூன்று பிள்ளைகளுடன் கதைத்து விட்டு கட் பண்ணி மீண்டும் சாமித் தட்டிலேயே வைத்து விடுவேன். விடுமுறைக்கு மகள்கள் இருவரும் வீடு வரும்போது மகன் மட்டும் கைபேசியில் கதைப்பான். அப்போது பெரும்பாலும் மூத்தவள் தான் ஒன் பண்ணி கதைத்து விட்டுத் தருவாள். அவளுக்கு அண்ணனிடம் தனிப் பாசம்!

இப்படியே நானும் கைப்பேசியுமாக வாழ்க்கை போய்க் கொண்டிருக்க, ஒருநாள் மதியம் சமையல் வேலை முடித்த பின்னர் பிள்ளைகள் ஒருவரும் எனக்கு காலையில் இருந்து போன் எடுக்கவில்லையே என்பதால் சாமித் தட்டிற்கு முன்னால் தவம் இருக்கத் தொடங்கினேன். எனக்கு ஒன் மற்றும் கட் பட்டன்களைத் தவிர வேறு எதுவும் தெரியாததால் கை பேசியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்னே. மாலை ஐந்து மணியையும் தாண்டியிருந்தது. மூத்தவள் பகல் உணவு வேளையில் கதைப்பாள். இளையவள் 1.30 போல கதைப்பாள், மகன் மாலை 4.00 மணியளவில் கதைப்பான். யாரும் எடுக்காததால் கைபேசியை எடுத்தேன். சுற்றி சுற்றிப் பார்த்தேன் 01-9 வரை இலக்கங்கள் இருந்தன. ஆங்கில எழுத்துக்கள், அடையாளங்கள், அட இன்று தான் மொபைல் போனில் இத்தனை விஷயங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தேன்.



தவம்

சரி டயல் பண்ணிப் பார்ப்போம் என்று எல்லா பட்டன்களையும் ரொம்ப நேரமாகத் தட்டினேன். கடைசியில் தோற்றுப் போய் 'கட்' பட்டனை தட்டி விட்டு மீண்டும் சாமித்தட்டிலேயேயே வைத்தேன். நான் போனை வைக்கவும் அது ரிங் ஆகவும் சரியாக இருந்தது. மிகுந்த சந்தோஷத்துடன் அவசரமாக எடுத்து 'ஹலோ' என்றேன். மறுமுனையில் ஒரு தடிப்பான ஆண்குரல் ''சதாசிவம் நீயா பேசுகிறாய்?'' என்றது. மரணித்துப் போன என் கணவர் பெயர் சொல்லி அழைக்கும் குரல் எனது மகனுடையது அல்ல. கலவரத்துடன் நான் ''சதாசிவத்தின் மனைவி பேசுறன். நீங்க யாரு?'' என்றேன்.

''அட மிஸிஸ் சதாசிவமா பேசுறது? மிஸ்டர் சதாசிவம் என் நெருங்கிய நண்பர். அவர் வெகு காலமாக என்னுடன் தொடர்பில் இல்லை. நான் வெளியூர் சென்றிருந்தேன் போன வருடம்தான் இங்கு வந்தேன்'' என்று ஆரம்பித்தவர் தன் முழு பயோ டேட்டாவையும் ஒப்புவித்தார். நான் அழுத்திய பட்டன்களில் அவருக்கு மிஸ்கோல் போயிருக்கிறதாம், விபரித்தார். நானும் கணவர் இறந்த விடயம் தெரிவித்து, பிள்ளைகளின் விபரமும் தெரிவித்து வைத்து விட்டேன். நான் அவரை என் கணவருடன் ஒரு நாளும் பார்த்தது கிடையாது. அதை விட வீட்டில் பெண் பிள்ளைகள் இருந்ததால் வேறு ஆடவர்கள் வீட்டிற்குள் நுழைந்தது குறைவு.

இப்படியாக நாட்கள் கழிய, அந்த நபரும் இருந்திருந்து எனது கைபேசிக்கு எடுப்பது வழமையானது. தனிமை காரணமாக ஓய்வான நேரங்களில் நானும் கதைக்கப் பழகினேன். இப்போதெல்லாம் என் பிள்ளைகளின் அழைப்பை விட எனக்கு அந்த நபரின் அழைப்பே பெரிய எதிர்பார்ப்பாகிப் போனது. நான் மாறிவிட்டேன். நினைக்கையிலே ஒரு பயம் கலந்த பூரிப்பு எனக்குள். இந்த வயதில்... என்னையே நம்ப முடியவில்லை. ஒரு ஆணின் அழைப்புக்காக ஏங்கும் அளவிற்கு மாறிவிட்டேன். இந்த கைபேசி இப்போது சாத்தானாக தெரிந்தாலும் பழக்கத்தை நிறுத்தவும் முடியவில்லை.

இப்படி இருக்கையில் என் மகள்கள் இருவரும் ஒரு விடுமுறையில் வீடு வந்திருந்தார்கள். அன்று மாலை 6 மணியிருக்கும் கைபேசி ரிங் ஆனது. சமையலறையில் இருந்த எனக்கு பொறி தட்டியது. இது அவர்தான். இரண்டு நிமிடத்துக்குள் கைபேசியை எடுக்கப் பறந்தேன். அதற்குள் மூத்தவள் கைபேசியில் கதைக்கத் தொடங்கியிருந்தாள். அவளது குரலும் என் குரலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரித்தான் இருக்கும். மூத்தவள் நெடுநேரமாகக் கதைத்தாள். எனக்கும், இளைய மகளுக்கும் இடையே நின்று பேசிக் கொண்டிருந்தாள். என் நெஞ்சு பலமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. ஆத்திரத்துடன் அழைப்பை துண்டித்து விட்டு என்னிடம் வந்தவள்,

''அம்மா இனி இந்த நம்பரை பாவிக்கத் தேவையில்லை. வேறு இலக்கம் தருகிறேன்'' என்றாள். நானும் அமைதியாக தலையாட்டினேன். என் கணவரின் கண்டிப்பான முகம் அவளில் மின்னி மறைந்தது.

இப்போதெல்லாம் அவர்- அந்த மர்மநபர் என் கணவரின் நண்பர், எனக்கு அழைப்பு எடுப்பதில்லை. நானும் திருந்தி விட்டிருந்தேன். என் கணவருக்கு நான் துரோகம் செய்ததாக வருந்தி என் செயலுக்காக வெட்கப்படுகிறேன். எனக்கு தாலி கட்டிய கணவன் உயிருடன் இருக்கும்போது மட்டும் பத்தினியாய் நான் வாழ்ந்தது பெரிதல்ல. அவர் என்னுடன் இல்லாதபோது துரோகம் புரியத் தயாரானேனே, அது தான் தவறு. என் கணவர் ரூபத்தில் என் மகள் இதைப் புரிய வைத்து விட்டாள். என் கணவர் உத்தமர். பிள்ளைகளை மேன் மக்களாய் வளர்த்திருந்திருக் கின்றார். அவருடைய படத்தின் முன் நின்று அமைதியாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே மதிய சமையலில் மூழ்கினேன்.

உங்கள் எல்லோருக்கும் நான் சொல்வது, எந்த வயதிலும் தடுமாறலாம் - ஆனால் தன்னிலை மறக்காதீங்க என்பதைத்தான். என்னையே இந்த கைபேசி கலங்கடித்தால் இன்றைய இளைய சமுதாயத்தை எப்படி எல்லாம் ஆட்டிப் படைத்திருக்கிறதோ!




தத்துவப் பித்தன்

## அவர்கள் அப்படித்தான்!



### பாவம் மாமி

நான் அப்போது நாவலப்பிட்டியில் என் அத்தை வீட்டில் தங்கி படித்துக்கொண்டிருந்தேன். அத்தை நல்ல மாதிரி. மாமா நகைக்கடையில் வேலை. எங்கள் வீட்டைச் சுற்றி ஒரு பத்து பதினைந்து தமிழ்க் குடும்பங்கள் வசித்து வந்தன. அவர்கள் எல்லோருக்கும் அத்தையை நன்கு பிடிக்கும். அடிக்கடி வந்து ஊர் வம்பு முதல் திரைப்படம் வரை பேசிவிட்டு போவார்கள். எங்கள் வீட்டுக்கு ஆறு படிகள் ஏறித்தான் உள்ளே போகவேண்டும். மாலையானால் அத்தையின் நண்பிகள் இந்தப் படிகளில் வந்து அமர்ந்து கொண்டு அரட்டை அடிப்பார்கள். அத்தை தேனீர் சப்ளை செய்வார். பெண்கள் சில சமயம் கடலை, முறுக்கு என வீட்டில் செய்ததை எடுத்துவர நன்றாகவே கச்சேரி களைக்கட்டும்.

நான் வீட்டில் இருக்கும்போது இதைத் தள்ளி நின்று வேடிக்கைப் பார்த்திருக்கிறேன். கச்சேரிக்கு வரும் ஒரு மாமி மூன்றாம் வீட்டில் இருப்பவர். எதற்கெடுத்தாலும் 'பாவம் இல்லியா' என்று முத்தாய்ப்பாய் சொல்வது அவர் வழக்கம். என் கணவருக்கு நேற்று முழுநாளும் தலைவலி என்று ஒரு மாமி சொன்னால் இவர், 'பாவம் இல்லியா?' என்பார். நாய் வாகனத்தில் சிக்கி தெருவோரம் இறந்து கிடந்தது என்று சொன்னாலும், 'பாவம் இல்லியா?' என்பார் இவர்.

இதைக் கவனித்த நான் அவருக்கு 'பாவம் மாமி' என்று பட்டப்பெயர் வைக்க, அதுவே அவருக்கு பெயராய் நிலைத்து விட்டது.

இப்போது நான் நீர்கொழும்பில் வசிக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னர் நாவலப்பிட்டி அத்தையின் மகளோடு தொலைப்பேசியில் பேசியபோது ''உன் பாவம் மாமி கடந்த மாதம் இறந்து போய்விட்டாங்களே, தெரியுமா?'' என்றாள். என் மனதில் 'பாவம் மாமி!' என்று தோன்றியது.

திருமதி. கலாவதி ரட்ணம்
நீர்கொழும்பு




# வியட்நாம்

வடக்கே சீனா, வடமேற்கே லாவோஸ், தென்கிழக்கே கம்பூச்சியா ஆகியவற்றையும் கிழக்கே தென்சீனக் கடலையும் எல்லையாகக்கொண்ட வியட்நாமின் சனத்தொகை 91.5 மில்லியன். ஆசியாவிலேயே எட்டாவது அதிக சனத்தொகை கூடிய நாடு இது.

கி.மு 938 முதல் சீனப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பிரதேசம் இது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்சின் காலணித்துவ நாடாக மாறியது. 1954இல் முதலாவது இந்தோசீனா யுத்தம் ஆரம்பமாகி பிரான்ஸ் வெளியேறும் வரை தொடர்ந்தது. அதன் பின்னர் ஜனநாயக தென்வியட்நாமை கம்யூனிஸ வட வியட்நாமிடம் இருந்து காப்பாற்றும் பொறுப்பை அமெரிக்கா ஏற்க வேண்டியதாயிற்று.

ஐஸனோவர், ஜோன் கென்னடி காலத்தில் இராணுவ உதவி என்ற நிலையில் இருந்த அமெரிக்கத் தலையீடு, லிண்டன் ஜோன்ஸன் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் நேரடித் தலையீடானது. அமெரிக்க படைகள் தென் வியட்நாமில் நிலைகொண்டன. அமெரிக்க விமானத் தாக்குதல்கள் உக்கிரமடைந்தன. அமெரிக்காவின் பொருளாதாரத்தை பாதிக்கும் அளவுக்கு யுத்தம் மோசமடையவே, அமெரிக்க மக்கள் யுத்ததுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கினர். மக்கள் ஜோன்ஸனை வெறுத்தனர். அடுத்த ஜனாதிபதியாக ரிச்சர்ட் நிக்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரின் இராஜாங்க செயலாளராக ஹென்றி கிஸிஞ்சர் நியமனமானார். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வியட்நாமில் இருந்து அமெரிக்க படை வாபஸ் பெற்றது. வியட்கொங் கெரில்லாக்கள் தென்வியட்நாமில் நுழைந்து சைகோனை கைப்பற்றினர். வியட்நாம் ஒரு நாடாக இணைந்தது.

அமெரிக்காவுக்கு எதிராக போரை நடத்திச் சென்ற ஹோசிமின் பெயரே சைக்கோனுக்கு சூட்டப்பட்டது. ஹோசிமின் 1969ம் வருடம் செப்டெம்பர் 3ம் திகதி மரணமடைந்தார் என்பதும் இன்றைக்கும் இரவாப் புகழ்பெற்றத் தலைவராக அவர் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. 1973ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதி அமெரிக்காவுக்கும் வட வியடநாமுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ஹோசிமின் கல்லறைக்கு முன் காவலில் இருக்கும் வீரர்கள் ஒவ்வவொரு மணித்தியாலமும் அவருக்கு சல்யூட் அடிக்கும் காட்சி வெளிநாட்டவரை கவர்கிறது.

போர் அழிவில் இருந்து மீள்வதற்கு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் வியட்நாம், கம்யூனிஸ பொருளாதாரத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்து 1986களில் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஓரளவுக்கு அனுமதித்தது. உலக நாடுகளோடு தொடர்புகளை அது அதிகரித்து வருகிறது.



**சரியான விடை:**

**இனியா**

1. குமாரி- பஸ்சரை
2. ஆர். ரன்சிலா- இங்கிரிய
3. ரிஸ்லான் லாபிர்- பத்தாம்பிட்டிய
4. தர்ஷிகா- வவுனியா
5. சஜி- பொத்துவில்
6. எம். மணிமாறன்- பருத்திதுறை
7. எம். விஜயகுமார்- அட்டன்
8. கார்த்திகா- சங்கானை
9. ஜெஸ்மின் ஆதம்- நாரம்மல
10. சானு- மாமடு
11. நஸ்லா- பாணந்துரை
12. டீ. வினோத்- மட்டக்களப்பு
13. கஸ்தூரி- நெளுக்குளம்
14. ரிஸ்மியா- கம்பளை
15. ரொசாந்தினி- மன்னார்
16. எஸ். லோஜினி- அக்கறைப்பற்று
17. கே.கோகிலா- இரத்தினபுரி
18. கி. புஸ்பராஜ்- இறக்குவானை
19. மோகனா அர்ஜுன்- இரத்தினபுரி
20. சலாம்- பாலமுனை
21. டெய்சி- கலவானை
22. பிரமிளா குமார்- இரத்தினபுரி
23. பாத்திமா- கிராண்பாஸ்
24. எஸ். சஜிதரன்- திருகோணமலை
25. ரிஸ்கி ஷெரிப்- கொழும்பு 11
26. ஆர். ஜீவா- ஹொரனை
27. எஸ். சசிக்கலா- மத்துகமை
28. எப்.எஸ். சுக்னா- கந்தளாய்
29. ஏ. அகிலேஷ்- மட்டக்களப்பு
30. கே. வைஷ்ணவி- யாழ்ப்பாணம்



**டொக்டர்:** உங்க மனைவிக்கு பல் புடுங்க 150 ருபா முடியும்.

**கணவன்:** இரண்டாயிரம் ருபா தர்றேன் அப்படியே நாக்கையும் புடுங்குங்க!

## படப்புதிர்

**27ஆம் பக்க புதிர்க்கான விடை**

| | | | |
|---|---|---|---|
| | | | கு |
| | ந | ந் | தி |
| | ங் | | ரை |
| | கூ | டு | |
| | ர | | |
| பா | ம் | பு | |

எங்க வீட்டுக் கல்யாணம் என்ற புதிய பகுதியில் வானவில் குடும்பத்தைச் சேர்ந்த புதுத் தம்பதியினர் தமது திருமண புகைப் படத்தை இலவசமாக பிரசுரித்து மகிழலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் திருமண அழைப்பிதழ், தபால் முகவரி, தொலைப்பேசி எண் மற்றும் திருமணபதிவு நகல் ஆகிய விவரங்களுடன் உங்கள் திருமண புகைப்படத்தை

**எங்க வீட்டுக் கல்யாணம்**
**The Edior**
**Vanna Vaanavil Editorial**
**Lake House**
**Colombo-10**

என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பது மாத்திரமே!

எங்கள் வாசகரின் திருமண புகைப்படத்தை பிரசுரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

## சொல் விளையாட்டு - 26

**சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**
மலைப்பாம்பு, திருப்தி, திகில், ரசிகன், வான், வலி, திம்பு, புகார்

**மேலிருந்து கீழ்**
மந்திரவாதி, பாரதி, புலால், ருசி, கிழவர், சினம், கம்பு

**சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்**

சஞ்சீவ் குமார், கொழும்பு-13

சி. சிவாந்தினி, திருகோணலை

எம். பௌசுயா, வரக்காப்பொல

## படம் சொல்லும் கதை



அப்போ எனக்கு 26 வயதிருக்கும், றைகம் தோட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்த காலத்தில் எடுக்கப் பட்ட இந்தப் படம் 40 வருடங்களை கடந்து என்னிடம் பொக்கிஷமாக இருக்கிறது.

படத்தில் இடமிருந்து வலமாக கமலம், நான் தங்கா, ஜெயமணி, பாக்கியம் ஆகியோர் இருக்கின்றோம். கமலமும், பாக்கியமும் றைகம் தோட்ட கீழ் பிரிவில் வசிக்கிறார்கள், தேயிலை தோட்டத்தில் வேலை செய்த நாட்களில் ஜெயமணி ஆவி பறக்க சுட்டெடுத்து வரும் தோசைக்காகவும் சட்னிக்காகவும் காத்துக் கிடந்த அந்த நாட்கள் பசுமையானவை. காலை ஏழு மணிக்கெல்லாம் ஜெயமணி கொண்டு வந்த தோசை, சட்டினியை ஒரு பிடி பிடித்து விட்டுத்தான் வேலையை தொடங்குவோம். அந்த தோசையின் மணம் இன்று நினைத்தாலும் நாவில் நீர் சுரக்கச் செய்கிறது. ஜெயமணி சுட்டுத்தரும் தோசைக்காக இன்றும் ஏங்கிக் கிடக்கிறேன். ஆனால் நான் அவரை சந்தித்து இப்போ முப்பது வருடங்கள் கடந்து விட்டது. ஜெயமணி எங்கே என்று தெரியவில்லை.

**எஸ். தங்கா அக்கா,**
**றைகம், மேல் பிரிவு, இங்கிரிய.**

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.



**ஆறு அதிர்ஷ்டசாலிகள்**

1. இந்திரா ஸ்ரீகாந்தன் - இங்கிரிய
2. பாரத் - றைகம
3. இர்.:.பான் - கல்முனை
4. சிவா - மட்டக்களப்பு
5. லக்ஷிதா - புத்தளம்
6. கலா - நெல்லியடி




கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 26

விடைகள்

**இடமிருந்து வலம்**

சக்கரவர்த்தி, திக்கு, தில்லை, புகலிடம், யமன், கடம், லட்சம், சம்பளம், பர்ஸ், பவளம், சலிப்பு, புவிசர்ப்பு, வளையல், புகழ், சதம், கைலாயம்

**மேலிருந்து கீழ்**

சத்தியம், கவலை, வம்பு, திட்டம், கும்கி, புடம், கம்பளி, கிரீடம், மலர், கசப்பு, பசப்பு, பர்வதம், புன்னகை, புயல், கரி, சய

**சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்**

ஆர்.உஷாநந்தனி, புத்தூர்

வஸந்தா பாலேந்திரா
கொழும்பு- 06

எஸ். யசோதரன், ஹட்டன்

# மருது என்ற பிரமாண்டம்



தெளிவத்தை ஜோசப்

கொழும்பு பூபாலசிங்கம் புத்தகசாலைச் சந்தியில் காலை ஆறு மணிக்கெல்லாம் வந்து சேர்ந்து, யாழ் நோக்கிப் பயணம் மேற்கொண்ட நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தோம். (18-10-2002)

யாழ் இளங் கலைஞர் மன்றத்தில் எங்களை வரவேற்று பயணக் களைப்பாற வைத்து; நாங்கள் பயணித்த அதே பஸ்ஸில் ஏற்றி எங்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஹோட்டலுக்கு எங்களை கூட்டிச் சென்றனர் 'தமிழ் கூடல்' விழாக் குழுவினர்.

எல்லாரையும் ஓடி வந்து ஓடி வந்து குசலம் விசாரித்தவர் புதுவை.

யாழ் மாவட்ட இலக்கியவாதிகள், தென்னிலங்கை எழுத்தாளர்கள், மன்னார், மட்டக்களப்பு, திருகோண மலை இலக்கியக்காரர்கள் என்று எத்தனையோ பெரிய பெரிய எழுத்தாளர்கள் குழுமிக்கிடந்தனர். முட்டிக்கொண்டாலும் ஒரு எழுத்தாளன் மீதுதான் முட்டிக்கொள்ளவேண்டும்.

தமிழகத்துப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அரசியல்வாதியான இரா. திருமாவளவன், கவிஞர் இன்குலாப், திரைப்பட இயக்குனர் புகழேந்தி தங்கராஜ், முற்போக்குப் படைப்பாளி பா. செயப்பிரகாசம், ஓவியர் ட்ராட்ஸ்கி மருது ஆகியோர்.

எனக்கும் டொமினிக் ஜீவாவுக்கும் பக்கத்துப் பக்கத்துக் கட்டில்கள் கிடைத்திருந்தன. 'தெளிவத்தை' என்றார் ஜீவா. என்ன என்பதுபோல் ஏறிட்டுப் பார்த்தேன்.

''மருதுவையும், செயப்பிரகாசத்தையும் ஒருக்கா பார்த்து விட்டு வருவோமா" என்றார்.

அவருடைய ஆர்வம் எனக்குப் புரிந்தது. பா. செயப்பிரகாசம் முற்போக்குப் படைப்பாளி, மனித நேயர். மனித உரிமைப் போராளி. முற்போக்கு என்ற இழையில் கோர்க்கப்பட்டவர்கள் இருவரும். மல்லிகையுடன் நீண்ட நாள் தொடர்பும் ஜீவாவின் நட்பும் கொண்டவர். ஓவியர் மருதுவும் அப்படியே.

'டொமினிக் ஜீவா சிறுகதைகள்' என்னும் பெருந்தொகுப்பு 1996ல் வெளிவந்தது. அதன் அட்டைப்படம் ஆதிமூலத்துடையது.



பா.செயப்பிரகாசம்



மருது



இன்குலாப்

'ஓவியம் என்றதுமே என் நெஞ்சில் கிளுகிளுப்பை ஏற்படுத்தியவரும், ஓவியப் பதிவையும் ஓவியத்தில் புதிய பார்வையையும் எனக்குள் ஏற்படுத்தியவர் பேராசான் ஆதிமூலமே' என்று குறிப்பிடும் மருது, ஆதிமூலத்தின் நேரடி சிஷ்யர். குருவும் சிஷ்யரும் ஒன்றாக செயலாற்றிய நூல் டொமினிக் ஜீவா சிறுகதைகள்.

இந்த நூலின் முன் பின் அட்டை ஓவியங்கள் ஆதிமூலம் என்பதைப்போலவே உள்ளே உள்ள படங்கள் மருதுவினுடையவை.

மருது ஓவியத்துறையில் ஒரு மருதுபாண்டியன்தான். மதுரை மாநகரை அண்டிய அருப்புக்கோட்டைக்குப் பக்கமாக உள்ள மருதங்குடி அவர் பிறந்த கிராமம். ஒரு பெரிய கலைக் குடும்பத்தின் வழித்தோன்றல் மருது.

மருதுவின் குடும்ப வழி முன்னோர்கள் இடது சாரிக் கொள்கையாளர்கள். கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தத்துடன் தொடர்புகொண்டவர்கள். மருதுவின் அப்பாவின் தாய்மாமன்மார்கள் என். எஸ் கிருஷ்ணனை வைத்து நாடகம் மேடையேற்றியவர்கள். அம்மாவின் சித்தப்பாதான் சினிமாக் கதை வசன கர்த்தா எம். எஸ் சோலைமலை. அம்மாவின் சித்தப்பா என்றால் மருதுவின் தாத்தா. எம். எஸ் சோலைமலை என்றார் பீம்சிங்கின் 'ப' வரிசைப் படங்களின் கதை வசனகர்த்தா - பாசமலர்; பாகப் பிரிவினை; பாவமன்னிப்பு என்று எத்தனைப் படங்கள்!

மருதுவின் பெரியப்பா மகன்தான் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன். இவருடைய குடும்பமே ஒரு கலைக் குடும்பம் என்பது மிகைக் கூற்றல்ல.

மதுரை என்றால் மனதில் எழுவது மீனாட்சியம்மன் ஆலயம்தான்.

''ஏழெட்டு வயதிலிருந்தே சிற்பங்கள் செய்கின்ற கலைஞர்கள் மண்ணைக் குழைத்துக் குழைத்து சிற்பங்களாக-சிலைகளாக மாற்றுவதைப் பார்த்துப் பார்த்து ரசித்து வளர்ந்தவன் நான்" என்கின்றார் மருது.

தமிழகத்தின் தனித்துவம் மிக்க ஏடுகள் அனைத்திலும் மருதுவின் கோட்டோவியங்கள் கோலோச்சுகின்றன.

தமிழக அரசின் சிறந்த ஓவியருக்கான விருதினை 1977ல் பெற்றவர் மருது. உலக அளவில் BEST COLLECTIONS பலவற்றில் இவருடைய ஓவியங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

டொமினிக் ஜீவாவின் சுயமரியாதை நூலின் அட்டைப் படமும் அதன் ஆங்கில மொழிப்பெயர்ப்பான 'UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY' நூலுக்கு அட்டைப்படம் வரைந்திருப்பவரும் மருதுவே.




இந்த நூல்களுக்கான முகப் போவியம் பற்றியும் ஜீவா அன்றுதான் பேசி முடிவெடுத்திருப்பார் என எண்ணுகிறேன்.

மருதுவின் ஓவியம் என்றால் எனக்கும் ஒரு ஈர்ப்புண்டு.

(தொடரும்)

# சோம்பிக் கிடக்கும் இலங்கைத் தமிழ் இலக்கியத்துறை

இலங்கை இலக்கிய உலகில் தொடர்ச்சியாக ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. சிலர், தேக்க நிலையா? அதுதான் தொடர்ந்து நூல்கள் வெளியிடப்படுகின்றவே, தமிழ் சங்கத்தில் கிழமைதோறும் இலக்கியக் கூட்டங்கள் மற்றும் ஒன்று கூடல்கள் நிகழ்கின்றனவே என்று சுட்டிக்காட்டலாம்.

அவை எல்லாம் நிகழ்ந்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இவற்றை வைத்துக்கொண்டு எமது இலக்கிய செயற்பாடுகள் வளர்ச்சி நோக்கிப் பயணிக்கின்றன என்று முடிவுக்கு வரமுடியுமா?

வெளியிடப்படும் நூல்களில் பெரும்பாலானவை தரமற்றவை. இப்படிச் சொல்வதற்காக மன்னிக்கவேண்டும். ஆனால் எவராவது உண்மையை உடைத்துச் சொல்ல வேண்டாமா?

வெளியிடப்படும் கவிதை நூல்களில் மிகச் சிலவே வாசிப்புக்கு ஏற்றவை. ஏனையவை, நாமும் நூல் வெளியிட்டோம் என்ற திருப்தியை நூலாசிரியருக்குத் தருபவை. சிறுகதைகள், கட்டுரை தொகுதிகளும் இந்த வரையறைக்குள்தான் வருகின்றன. தமிழகத்தில் இருந்து வரும் நூல்களுடன் ஒப்பிடும்போது நாம் எங்கேயோ என்பதே நிதர்சனம். ஆனால் இந்தத் தரமான தமிழக நூல்களையே வாங்கி வாசிப்பவர்கள் மிகவும் குறைவு. இனி எப்படி நம்மவர்கள் நமது படைப்புகளை வாங்கியோ அல்லது நூலகங்களில இருந்து பெற்றோ வாசிப்பார்கள் என்று எதிர்பார்க்கக்கூடும்?

புரவலர் ஹாஸிம் உமர் நலிந்த எழுத்தாளர்களின் நூல்களை இலவசமாகப் பதிப்பித்து வெளியிட்டு வைக்கும் ஒரு அருமையான இலக்கியப் பணியை ஆற்றி வருகிறார் இது. இதுவரை யாருமே செய்ய முன்வராதது. ஆனால் நலிந்த படைப்பாளர்கள் எனும்போது, பரவலர் புத்தகப் பூங்காவின் ஊடாக வெளியிடப்படும் இவர்களின் படைப்புகள் பொதுவாகவே தரமானதாக அமைவதில்லை. புரவலர் அப்படைப்பாளரின் ஆசையைத் தான் நிறைவேற்றி வைக்கிறார். அவ்வளவுதான். எனவே, புரவலர் வருடத்துக்கு இரண்டு முறையாவது சிறந்த படைப்புகள் இரண்டை முத்திரைப் படைப்பாக வெளியிட முன்வரவேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். இதற்கமைய அவர் அறிவிப்பு ஒன்றை வெளியிட வேண்டும்.

இலங்கைப் படைப்பாளர்களின் நூல்கள் பெரும்பாலும் இலவசமாகவே வழங்கப்பட்டு விடுகின்றன. சிலருக்குத்தான் விற்றுத் தீர்க்கும் அல்லது இலாபமீட்டும் கலை கைவருகிறது.

இலங்கைப் படைப்புகளை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களிடம் கேட்டால், 'அவை சும்மாதான் கிடக்கின்றன, வாங்குவோரில்லாமல்' என்று கூறுகிறார்கள். முதல் காரணம், அதை ஏன் வாங்க வேண்டும் என்ற வாசகனின் கேள்விக்கு பதில் இல்லாததாகும் என்கிறார் ஒரு கடை உரிமையாளர். தமிழகத்தில் தேவை கருதி நூல்கள் வெளியிடப்படுகின்றன. தேவைப்படும் வாசகர்கள் அவற்றை வாங்குகிறார்கள். செங்கை ஆழியன் இத்தகைய தேவைக்கேற்ற நூல்களை வெளியிட்டுள்ளார். சுனாமிப் பேரழிவு நிகழ்ந்த ஆறாவது மாதத்தில் சுனாமி பற்றிய தகவல்கள் பல அடங்கிய நூலை அவர் வெளியிட்டார். சுடச் சுட விற்பனையானது. யாழ்ப்பாண இராச்சியம், யாழ். கோட்டை போன்ற நூல்களை மாணவர்களும் ஏனையோரும் புலம் பெயர்ந்த் தமிழர்களும் தேவை கருதி இன்றைக்கும் தேடி வாங்குகிறார்கள். இவ்வாறு சந்தைத் தேவைக்கு ஏற்ப நூல்களை வெளியிடுவது முக்கியம். இதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. சந்தைத் தேவைக் கருதி வெளியிடப்படும் நூல்கள் என்றால் இன்றைக்கு அவை கல்வி சம்பந்தப்பட்ட நூல்கள் மாத்திரமே.

மேலும் நமது மாணவர்களும் பெற்றோரும், நூல்கள் என்றால் அவை பாட நூல்கள் மட்டுமே என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்

சிந்தனை தொடரும்

# பரிசோடு பட்டங்கள் படைதிரண்டு வாருங்கள்

எஸ். முத்துமீரான்

எங்கள் கடையில், இலக்கிய பட்டங்கள் ஏராளமாக உண்டு.
எல்லோரும் வாருங்கள்!
மலிவு விலையில், பொழுபொழுத்த பொன்னாடை,
சந்தன மாலை, சகலதும் உண்டிங்கே.
எழுத்துப் பித்தன், இலக்கியக்கோ, சேவைச் செம்மல்,
வாழ்நாள் வானரம், பந்தக்கோ, பம்மாத்து வள்ளல்,
தங்கமணி, குஞ்சுமணி, தமிழ்மணி, பூசணம்,
இந்தப் பட்டங்களெல்லாம் எங்களிடம் உண்டு.
எதையாவது எழுதிக் கிறிக்கிவிட்டு
எங்களிடம் வாருங்கள்.
வெளியீட்டு விழா தொடக்கம், அறிமுகவிழா வரை
ஆட்களை அழைத்து அழகாகச் செய்திடுவோம்.
மேடையில் உங்களை மேலே உயர்த்திப் பேச
மேதாவிகள், பேராசான், கலாநிதிகள்
கைவசம் உண்டு. காசோடு வாருங்கள்.
என்ன பட்டம் வேண்டும்? எங்களிடம் கூறுங்கள்,
அள்ளித் தருவோம் ஆதரவு தாருங்கள்
எல்லா இடங்களிலும் எங்கள் முகவர்கள்
பள்ளிகொண்டிருப்பதால், பாருங்கள் உடனே போய்.
எழுதாத நூல்களுக்கும், ஈயடிச்சான் படைப்புக்கும்
பரிசோடு பட்டங்கள் பலவுண்டு எங்களிடம்.
முதுகு சொறிவதற்கு முதுமாணிப் பட்டங்கள்,
காக்காய் பிடிப்பதற்கு கலைஞானி பட்டங்கள்,
பந்தம் பிடிப்பதற்கு, பக்திமான் பட்டங்கள்,
எங்கள் கடையில் ஏராளம், வாருங்கள்.
புகழுக்கு நீங்கள் போடுகின்ற கோலத்தை
படம்பிடித்து சாதனையாக பறைசாற்ற எங்களிடம்
பத்திரிகை பலமுண்டு. பயமின்றி வாருங்கள்.
சாதனையாளர், சாகித்திய கலாசூரி
என்ன பட்டம் வேண்டும்? எழுதுங்கள் எங்களுக்கு.
இலக்கியத்தைப் புரியாமல், எழுதுகின்ற வெம்பல்கள்
தலைக்கனத்தால் தடுமாறும், விட்டமில்லா வட்டங்கள்,
குரைக்கின்ற காலமெல்லாம், உலகம் அழியாது.
பட்டங்கள் வேண்டுமென்றால்
கடைக்கு உடனே படைதிரண்டு வாருங்கள்


## வானவில் டொட் கொம்

அனூப்




தற்போது Wi-Fi எனும் கம்பியில்லா வலைப் பின்னலூடாக வரும் இணைய இணைப்பு நமது நாட்டிலும் பரவலாகப் பயன் பாட்டிலுள்ளது. நாம் பணம் செலுத்திப் பெறும் இணைய இணைப்பை Wi-Fi வலையமைப்பூடாகச் செலுத்தும் போது அது நமது கணனியில் மாத்திரமன்றி அயலவர்களின் கணனி-களையும் எட்டிப் பார்க்கிறது. அதனால் எமது அயலவர்கள் எந்தக் கட்டணமும் செலுத்தாமல் இலவசமாக எமது அனுமதியின்றி இந்த வைபை இணைப்பு மூலம் இணையத்தை அணுக முடிகிறது.

உங்கள் வீட்டில் தற்போது இணையத்தை எவரும் பயன்படுத்தவில்லை. எனினும் நீங்கள் பயன்படுத்தும் ரூட்டரில் (Router) உள்ள Internet LED விளக்கு விட்டு விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. ரூட்டரில் நீங்கள் காணும் இந்த அறிகுறி வைபை இணைப்பை உங்கள் வீட்டுக்கு அருகாமையிலிலுள்ள யாரோ அனுமதியின்றிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நிச்சயமாகக் கூறலாம்.




அதனை இன்னும் உறுதி செய்து கொள்ள விரும்பினால் முதலில் ஒரு பிரவுசரைத் திறந்து கொள்ளுங்கள். பின்னர் ரூட்டரின் ஐபி முகவரியை பிரவுசரின் முகவரிப் பட்டையில் டைப் செய்யுங்கள். அனேகமான ரூட்டர்களின் பொதுவான ஐபி முகவரியாக 192.168.1.1. என்பதே பாவனையில் இருக்கும். பின்னர் ரூட்டரை அணுகுவதற்கான பயனர் பெயரையும் கடவுச் சொல்லையும் வழங்கி ரூட்டரின் நிர்வகிப்பதற்கான பக்கத்தினுள் நுழையுங்கள். பொதுவான ரூட்டரின் பயனர் பெயராகவும் கடவுச் சொல்லாகவும் admin என்பதே பயன் பாட்டில் உள்ளது.

ரூட்டரின் நிர்வகிப்பதற்கான பக்கத்தில் DHCP Client Table என்பதை Status - , Local Network - , DHCP Server ஊடாக அடையுங்கள். இந்த வழி முறை ஒவ்வொரு ரூட்டர் தயாரிப்பு நிறுவனத்தைப் பொறுத்து வேறுபடலாம். இந்த அட்டவணையில் தற்போது உங்கள் ரூட்டரில் இணைந்திருக்கும் கணினிகள் மற்றும் பிற கையடக்கச் சாதனங்கள் அனைத்தினதும் பெயர்களைப் பட்டியலிடும். இதிலிருந்து அயலவர்கள் எவரேனும் உங்கள் வைபை இணைப்பில் உள்ளார்களா என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் அயலவர்கள் பலரும் வைபை இணைப்பை உங்கள் அனுமதியின்றிப் பயன்படுத்துவதன் காரணம் பாதுகாப்பு முறைகள் எதுவும் பின்பற்றப்படாமல் திறந்த நிலையில் (Open) அவர்கள் கணனியை அடைவ-தே காரணமாகும்.

வைபை சமிக்ஞைகள் அயல் வீடுகளைச் சென்றடைவதை உங்களால் தடுக்க முடியாது. எனினும் அவர்களைச் சென்றடையும் சமிக்ஞைகளை அனுமதியின்றிப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம். இவ்வாறு திருட்டுத் தனமாகப் இணைய இணைப்பைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்குப் பல எளிய வழிமுறைகள் உள்ளன. இந்தப் பாதுகாப்புச் செயற்பாட்டை மேற்கொள்ள, முன்னர் குறிப்பிட்டது போல் இதற்கும் ரூட்டரின் நிர்வாக பக்கத்தில் நுழைய வேண்டும்.

1. உங்கள் வைபை இணைப்புக்கான பெயரை (SSID) பிறர் கண்டு கொள்ளாதபடி Broadcast SSID என்பதை No என மாற்றுவதன் மூலம் மறைத்து வைக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் அயலவர்களின் கணினியை வைபை இணைப்பு அடைந்தாலும் அதனைப் பயன்படுத்துவதற்கு அதன் பெயரைக் (SSID) அறிந்திருத்தல் வேண்டும். எனினும் கொஞ்சம் விசயம் தெரிந்தவர்களால் இந்தப் பாதுகாப்பை மீற முடியும்.

2. உங்கள் வைபை இணைப்பைப் பிறர் பயன்படுத்தத் தயங்கும் வகையில் அதன் SSID பெயராக c:\virus.exe , Police, Network Unavailable போன்ற சொற்களை வழங்கி அவர்களை ஏமாற்றலாம்.

3. உங்கள் வைபை இணைப்புக்கு ஒரு கடவுச் சொல் வழங்கிப் பாதுகாக்கலாம். இதற்கு ரூட்டரின் நிர்வாகப் பக்கத்தில் நுழைந்து வைபை பாதுகாப்பு முறைகளான (Authentication Type) என்பதில் WPA, WPA2 மற்றும் WEP போன்ற ஏதோவொன்றைத் தெரிவு செய்து அதற்குக் கடவுச் சொல் ஒன்றையும் வழங்குங்கள். எனவே வைபை இணைப்பில் இணைவதற்குக் கடவுச் சொல்லை அறிந்திருத்தல் வேண்டும். பலரும் இந்த முறையையே கையாளுகின்றனர்.


4. உங்கள் கணனி, கையடக்கத் தொலைபேசி மற்றும் டேப்லட் பீசி போன்ற அனைத்து சாதனங்களுக்கும் MAC Address எனும் தனிப்பட்ட அடையாள இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. இது ஐபி முகவரியிலிருந்து வேறு பட்டது. ரூட்டரின் நிர்வாகப் பக்கத்தில் Wireless Mac Address Filter எனும் பகுதியில் நீங்கள் பயன்படுத்தும் கணனிகள் அனைத்தினதும் மேக் முகவரியை வழங்கி விடுங்கள். மேக் முகவரி வடிகட்டல் MAC Address Filtering எனும் இந்த முறை மூலம் இந்தப் பட்டியலில் உள்ளவர்களால் மட்டுமே. வைபை இணைப்பைப் பயன்படுத்தக் கூடியதாய் இருக்கும். மேலே குறிப்பிட்ட DHCP Client Table மூலம் உங்கள் சாதனங்களுக்குரிய MAC முகவரியை அறிந்து கொள்ளலாம்.

### இணையம் வழி இலவச தொலைநகல் சேவை




தொலை நகல் சாதனம் (Fax Machine) இன்றி இணையம் வழியே தொலை நகல் கருவி-யொன்றுக்கு இலவசமாக ஒரு தகவலை அனுப்பலாம். இந்த வசதி மூலம் உள் நாட்டில் மட்டுமன்றி உலகின் எப்பாகத்திற்கும் ஒரு தொலை நகலை அனுப்ப முடியும்.

தொலை நகல் கருவி இல்லாதவர்கள் அல்லது வெளிநாடுகளுக்குத் தொலை நகல் அனுப்ப அதிக செலாவகும் எனக் கருதுபவர்-கள் இந்த இணையம் வழி தொலை நகல் சேவையைப் பயன்படுத்தலாம். இந்த சேவை மூலம் மாதம் ஒன்றிற்கு 50 இலவச தொலை நகல்களை அனுப்ப முடியும்.




HelloFax எனும் இந்த ஒன்லைன் சேவையைப் பெற உங்களிடம் ஒரு மைக்ரோஸொப்ட் (Hotmail அல்லது Windows Live ID) அல்லது கூகில் கணக்கு இருத்தல் அவசியம். இந்த இலவச தொலை நகல் சேவையைப் பயன்படுத்த விரும்புபவர்-கள் www.hellofax.com எனும் இணைய-தளத்திற்குச் சென்று முதலில் கூகில் அல்லது மைக்ரோஸொப்ட் கணக்கொன்றுடன் பதிவு செய்துக் கொள்ளுங்கள். பின்னர் நீங்கள் அனுப்ப வேண்டிய ஆவணத்தை அப்லோட் செய்து உரிய தொலை நகல் இலக்கத்தையும் குறிப்பிடுங்கள். அடுத்த சில நிமிடங்களில் குறிப்பிட்ட இலக்கத்தைப் போய்ச் சேரும்.

HelloFax சேவை மூலம் எம்.எஸ்.வர்ட் மற்றும், PDF பைகள், படங்கள் போன்றவற்றையும் தொலை நகலாக அனுப்ப முடியும். மேலும் ஏற்கனவே SkyDrive, Dropbox, Google Drive போன்ற இணைய சேமிப்பகங்களில் இருந்தும் பைல்களை தொலை நகலாக அனுப்ப முடியும்.

### இந்த மாத டவுன்லோட்

**Multiplicity**

- **ஒரு மவுஸ்**
- **ஒரு விசைப் பலகை**
- **இரண்டு கணனிகள்**

நீங்கள் இரண்டு கணினிகள் வைத்திருக்கிறீர்களா? உங்கள் இரண்டு கணினிகளையும் ஒரேயொரு மவுஸ் மற்றும் விசைப் பலகை கொண்டு இயக்கலாம் என்பதை நீங்கள் அறிவீர்களா?



முன்னர் நான் ஒன்றுக்கு மேற்பட்ட கணினிகளை ஒரு மவுஸ், ஒரு விசைப் பலகை மற்றும் ஒரேயொரு கணனித் திரை கொண்டு இயக்க KVM Swich எனும் ஒரு வன்பொருள் சாதனம் இருப்பதாக இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தேன்.

எனினும் இப்போது நான் சொல்ல வருவது வன் பொருளல்ல. ஒரு மென்பொருள். எந்தவொரு வன்பொருளும் இணைக்காமல் ஒரேயொரு மவுஸ் மற்றும் ஒரேயொரு விசைப் பலகை கொண்டு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கணனி-களை இயக்கக் கூடிய ஒரு மென்பொருளே Multiplicity. இது வலையமைப்பில் இயங்கும் ஒரு மென்பொருள் கருவியாகும். எனவே இதனை இயக்குவதற்கு உங்கள் கணினிகள் ஒரு வலையமைப்பில் இணைந்திருக்க வேண்டும்.

இந்த Multiplicity மென்பொருளின் இலவச பதிப்பு ஒரே நேரத்தில் இரண்டு கணனிகளை மட்டுமே ஆதரிக்கிறது. எனினும் கட்டணம் செலுத்திய பதிப்பு ஒரே நேரத்தில் 9 கணனிகளை ஆதரிப்பதோடு மேலும் பல வசதிகளையும் கொண்டிருக்கிறது.

அவற்றுள் ஒரு கணனி யிலிருந்து மற்றுமொரு கணனிக்குப் பைல் மற்றும் போல்டர்களைப் பிரதி செய்தல், எல்லாக் கணனிகளுக்கும் பொதுவாக ஸ்பீக்கரை மையப்படுத்திப் பயன்படுத்தல் போன்ற பல வசதிகள் அடங்கியுள்ளன.

சுமார் 9 மெகா பைல் அளவு கொண்ட இந்த மென்பொருளை http://www.stardock.com/ எனும் இணைய தளத்திலிருந்து டவுன் லோட் செய்து பயன்படுத்திப் பாருங்கள். நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள்.




FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:
facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com




"::பிகர் யாராவது பளார்னு அறைஞ்சா அவள விட்டு எங்கேயும் போய்டாதீங்க அங்கேயே வெய்ட் பண்ணுங்க 'ஏன்னா அடிக்கிற கைதான் அணைக்குமாமே"

Ashok Kumar@ facebook

Mohamed Hakeem@ facebook

## உங்களால் இதை படிக்க முடிகிறதா?

துப்பு-01 இரண்டு ஆங்கிலச் சொற்கள் இங்கே இருக்கின்றன.
02 உங்கள் கண்கள் எப்படிப்பட்டவை என்று புரிந்துகொள்ளலாம்.



முடியவில்லையா?
இப்போது உங்கள் கண்களை மூடிக்கொண்டு 10 விழுக்காடு அளவுக்கு மட்டும் திறந்து பார்க்கவும்.

Kanaga Sruthi@ facebook



வெங்காயம் வெட்டும் போது இனி இப்படி செய்யலாம்...!!!
http://www.facebook.com/fever.Kayccal

## யோகாவின் பயன்களைத் தரும் மது



Sreejith KC@ facebook

பழமொழியும் விளக்கமும் :

Arasaratnam Prashanthan@facebook

1.குரைக்கிற நாய் கடிக்காது :பேசுற பிகர் எல்லாம் பிக்கப் ஆகாது

2.மின்னுவதெல்லாம் பொன்னல்ல : ஜின்ஸ் போட்டதெல்லாம் ஹை கிளாஸ் பிகர் இல்ல

3.காற்றுள்ள போதே தூற்றி கொள் : சூப்பர் பிகர் திரும்பி பார்த்த உடனே உஷார் பண்ணிக்கோ

4.ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது : படிச்சா பிகர் எல்லாம் சத்தியமா சமைக்கவே தெரியாது !!!..........

கிராமத்து பொண்ணுங்க
புருஷன் பேர சொல்ல
மாட்டாங்க
**But**
சிட்டி பொண்ணுங்க
புருஷன் இருக்கிறதையே
சொல்லமாட்டாங்க

Soba Sri@facebook



சூப்பர் ஸ்டாருடன் நடிகர் ஜீவா சிறுவனாக...

கோபித்து கொண்டால் சமைக்காமல் படுத்து கொள்வது மனைவி —

சமைத்துவிட்டு சாப்பிடாமல் படுத்து கொள்வது அம்மா —

தாயை நேசி

Manoj Jonam@facebook

தொகுப்பு:
பா. பிரதீப்

தொகுப்பு: ஜெயா, [illegible]



வானவில் மங்கை

# நீங்கள் டை உபயோகிப்பவரானால்...



நரைத்த கேசம், வயதான தோற்றத்தை ஏற்படுத்துவதால் இதிலிருந்து தற்காலிகமாக விடுபடுவதற்கே இந்த டையை உபயோகிக்கின்றார்கள். ஆனால் சரியான டையைத்தான் உபயோகிக்கிறோமா என்பதில் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் இத்தகையோர் பல பக்க விளைவு-களை சந்திக்க நேரிடுகிறது. அலர்ஜி எனும் ஒவ்வாமையே அதிகமாக ஏற்படுகின்றது. இவற்றை தடுப்பதற்கு டையை முதன்முறையாக பாவிப்பவர்களும் புதிய தயாரிப்பிலான டையை உபயோகிப்பவர்களும் முதலில் டையை காதின் பின்புறம் பூசி ஒரு நாள் முழுவதும் வைத்திருக்கவேண்டும். முடியாதவர்கள் குறைந்தது 8 மணித்தியாலமாவது வைத்திருந்து தலைவலி அல்லது வேறு எந்த பிரச்சினையும் ஏற்படாத பட்சத்திலேயே உபயோகத்தை



1

தொடரவேண்டும். டையை தலையில் பூசி, குறிப்பிட்ட நேரம் வரை வைத்து விட்டு கழுவவும். அதற்குமேல் வைத்திருப்பதால் முடி உதிர்தல், மண்டையோட்டில் புண்கள் ஏற்படுதல், முடி கரடு முரடாதல் போன்ற பக்க விளைவுகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. காரணம் டையில் அடங்கியுள்ள இரசாயன பதார்த்தங்களாகும். டை அடிக்கும்போது பிரஷ்ஷால் பூசி விட்டு சீப்பால் சீவினால் டை எல்லா முடிகளிலும் ஒரே சீராக படியும். டை அடிக்கும்போது முடியில் எண்ணெய்ப் பசை இருக்கக்கூடாது. அப்படி எண்ணெய்ப் பசை இருந்தால் டை முடியில் திடமாகப் படியாது. டை முடியை கடினமாக்குவதால் குளிக்கும்போது கண்டிஷனரை பாவிப்பது அவசியமாகும். இதனால் முடி கடினமாகாமலும், முடி உதிராமலும், டையினால் முடியிலுள்ள



2

எண்ணெய் பசை அற்றுப்போகாமலிருப்பதையும் தவிர்க்கலாம். கண்டிஷனர் முடிக்கு ஒரு பொலிவையும், பொடுகு வராமலும் பாதுகாக்கிறது. டை அடிப்பவர்கள் அடிக்கடி தலைக்கு குளிக்கமாட்டார்கள். காரணம் டைபோய்விடும் என்ற பயம்தான். இது தவறான நம்பிக்கை. வாரம் இரு முறையாவது தலைக்கு குளிக்கவேண்டும். இல்லாவிட்டால் பொடுகு, அரிப்பு என்பன ஏற்பட்டு முடி பாதிப்படையும். நல்ல தயாரிப்பிலான டை வகையை பாவிப்பதால் டை போய்விடும் என்ற பயத்தை தவிர்த்துக் கொள்ளலாம். டையை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை உபயோகிப்பதே சரியானது. அவசியம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் தேவைக்கேற்ப பாவிக்கலாம். இளம் வயதினராக இருந்தால் டைக்கு பதில் இயற்கை ரெட் ஹென்னா (மருதாணி) பாவிக்கலாம். இதை பூசுவதால் கேசத்துக்கு நல்ல நிறம் கிடைக்கும். High Light பண்ணியது போல இருக்கும். பொடுகு, முடி உதிர்தல் என்பனவற்றைத் தவிர்க்கலாம். இது கேசத்துக்கு போஷாக்கு அளிக்கும். பக்க விளைவு அற்றது. இதை தயாரிப்பதற்கு

| | |
|---|---|
| ரெட் ஹென்னா பவுடர் | - 1 பக்கற் |
| தேசிக்காய் (சாறு எடுக்கவும்) | - 2 |
| முட்டை | - 1 |
| தயிர் | - 1 கப் |
| பீட்ரூட் | - 1 (பெரியது) |
| தண்ணீர் | - 1/4 கப் |

ஹென்னா, முட்டை, தயிர், தேசிக்காய் சாறு மூன்றையும் அடித்து எடுக்கவும். பின்னர் பீட்ரூட் சாறு எடுத்து கலக்கவும். கட்டித் தன்மை அதிகமாக இருந்தால் நீரை தேவைக்கேற்ப சேர்க்கவும். இக்கலவையை கேசத்தில் பூசி விட்டு பொலிதீன் பையால் தலையை மூடி 30 நிமிடங்கள் விடவும். பின்னர் தண்ணீரில் நன்றாக கழுவி விடவும். சவர்காரம், ஷம்பூ பாவிக்கவேண்டாம். பீனிசம் உள்ளவர்களானால் தயிருக்கு பதில் யோகட்டை பாவிக்கலாம்.

அதேவேளை, கோப்பி நிறம் தேவைப்படுபவர்கள் பீட்ரூட்டுக்கு பதில் தேயிலைச் சாயத்தை உபயோகிக்கலாம்.



3

## டிப்ஸ்



தோசை மாவு நீர்த்து விட்டால் அதில் இரண்டு பிடி சவ்வரிசியைப் போட்டு வையுங்கள். இது அதிகபடியான நீரை உறிஞ்சி விடுவதோடு தோசையும் மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும்.

~



கொட்டைப் பாக்கை மையாக அரைத்து அந்த விழுதை ஒரு தேக்கரண்டி எடுத்து அதில் சிறிதளவு பாலை கலக்கவும். இதை வெறும் வயிற்றில் கொடுத்தால் ஒரே நாளில் குழந்தைகளின் வயிற்றில் உள்ள குடல் புழுக்கள் மொத்தமாகவே வெளியேறும்.

~



மீன் வளர்ப்பவர்கள் தொட்டி நீரை மாற்றும்போது அந்நீரை செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் நன்றாக வளரும்.

~





புதினா, கறிவேப்பிலையை காயவைத்து இரண்டு கிராம்பு சேர்த்து பொடித்து இரவு படுக்கைக்கு போகுமுன் இதைக் கொண்டு பல் துலக்கி வந்தால் பற்கள் பளிச்சென்றிருக்கும்.

~

## பன்னீர் (Cottege cheese)

ஞானசௌந்தரி

**தேவையானவை:-**

| | |
|---|---|
| பால் | - 1 லீட்டர் |
| தேசிக்காய் | - 1 (பெரியது) |

**செய்முறை:-**

பாலை ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து காய்ச்சும்போது பால் பொங்கிவரும். அடுப்பை நிறுத்தி அதில் ஒரு தேசிக்காயை பிழிந்து விட்டு கரண்டியால் நன்கு கலக்கவும். அப்போது பால் திரிந்துவிடும். பின் அதை ஒரு வெள்ளைத் துணியில வடிகட்டி இறுக்கமாக கட்டி அதன்மேல் ஒரு சதுரவடிக கனமான பொருளை வைத்து விட்டு 6 - 7 மணித்தியாலங்களின் பின் எடுத்து விரும்பிய வடிவில் துண்டுகள் போட்டு எடுங்கள்.

இப்போது கொட்டேஜ் சீஸ் எனப்படும் பன்னீர் (இது ஹிந்திப் பிரயோகம். தமிழில் என்ன பதம் என்று தெரியவில்லை. தமிழக ஏடுகள் பன்னீர் என்றே உபயோகிக்கின்றன. பனீர் என்பதுதான் சரியான உபயோகம்) தயாராகிவிடும். இந்திய நளபாகங்களில் பன்னீர் ரொம்ப பிரசித்தம். மாமிச உணவை உண்பது போன்ற பிரமையை ஏற்படுத்தும் அளவுக்கு பிரமாதமாக இந்தியர்கள் சமைப்பார்கள்.



## சமைத்துப் பாருங்கள்

## பன்னீர் மசாலா



**தேவையானவை:-**


| | |
|---|---|
| பன்னீர் | - 1/2 கிலோ |
| வெங்காயம் | - 4 (பெரிய) |
| தக்காளி | - 5 |
| இஞ்சி, பூடு விழுது | - 2 தேக்கரண்டி |
| தயிர் | - 1 கப் |
| மஞ்சள் தூள் | - 1 தேக்கரண்டி |
| மிளகாய்தூள் | - 3 தேக்கரண்டி |
| மல்லித் தூள் | - 2 தேக்கரண்டி |
| கரம்மசாலாத்தூள் | - 1 தேக்கரண்டி |
| சீரகத்தூள் | - 1 தேக்கரண்டி |
| பட்டை | - 2 |
| கராம்பு | - 3 |
| ஏலக்காய் | - 3 |
| எண்ணெய் | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| கஜு | - 15 |
| கசகசா | - 2 தேக்கரண்டி |
| சீனி | - தேக்கரண்டி |

**செய்முறை:-**

பன்னீருடன் தயிர், உப்பு, இஞ்சி விழுது, கரம்மசாலா, மிளகாய்த்தூள், எண்ணெய் சிறிதளவு சேர்த்து கலந்து 1 மணிநேரம் ஊறவைக்கவும். பின் அதை அடுப்பிலேற்றி வெந்ததும் இறக்கிவிட்டு சிறிது எண்ணெய் விட்டு அதில் சீனியை போட்டு பிரவுன் நிறமானதும் அதில் பட்டை, ஏலம், கராம்பு, வெங்காயத்தை அரைத்தெடுத்து அதையும் தக்காளியின் தோலை நீக்கிவிட்டு அரைத்தெடுத்த விழுதையும் சேர்த்து வதக்கி 2 தேக்கரண்டி மிளகாய்த் தூள், மல்லித்தூள், மஞ்சள்தூள், சீரகத்தூள், உப்பு சேர்த்து வதக்கியபின் ஒரு கப் நீர் விட்டு கொதித்ததும் கசகசாவை வறுத்து கஜுவுடன் சேர்த்து அரைத்து விழுதை சேர்த்து நன்கு கொதிக்க விடவும். அதில் வெந்த பன்னீரை கொட்டி கிளறி 2, 3 நிமிடம் வைத்துவிட்டு அடுப்பிலிருந்து இறக்கி விடவும். பன்னீர் மசாலா ரெடி. இந்தியாவில் இது பிரசித்தமான உணவு. சோறு, ரொட்டி, நாண், சப்பாத்தி-எதனுடனும் நன்றாக ஒத்துப்போகும்.




# தாத்தாவின் பெருமை



தேர்வுக்கு கணக்குகளைப் போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான் கோகுல். ஆண்டு இறுதித் தேர்வில் கணக்கில் 100-க்கு 100 வாங்கிவிட வேண்டும் என்று கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்தான்.

ஒரு கணக்கு மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் அம்மாவிடம் கேட்டான்.

அவனது அம்மாவும் போட்டுப்பார்த்து விடை வராமல் போகவே, 'அப்பாவைக் கேள்' என்று சொல்லி விட்டார்.

'எனக்குப் படிக்கும்போதே சுட்டுப்போட்டாலும் கணக்கு வராது, உன் நண்பன் அரவிந்தனிடம் கேள்' என்று அவனிடம் அனுப்பினார்.

அரவிந்தனிடம் கணக்கை கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அவனது வீட்டை நோக்கி புறப்பட்டான் கோகுல். அரவிந்தன் வீட்டில் நுழையும் முன் அவன் கண்ட காட்சி அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அங்கே தனது தாத்தா அரவிந்தனுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான் கோகுல். இங்கே தன் தாத்தா என்ன செய்கிறார், என்று கவனித்தபோது அரவிந்தனுக்கு கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார் கொஞ்ச நேரம் மறைந்திருந்து கவனித்தான் கோகுல்.

'தாத்தா இந்தக் கணக்கு, தேர்வுக்குக் கண்டிப்பாய் வரும் என்று என் கணக்கு ஆசிரியர் கூறியுள்ளார். எனக்குத் தெரியாததை எல்லாம் உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதால்தான் என்னால் வகுப்பில் முதல் மாணவனாக வர முடியுது' என்று அரவிந்த், கோகுலின் தாத்தாவிடம் கூறினான்.

'அப்படியா தொடர்ந்து நல்லா படிக்கனும் சரியா பேராண்டி' என்றார் தாத்தா.

'எனக்கு சொல்லித் தரும் உங்களுக்குத்தான் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை' என்று வருத்தப்பட்டான் அரவிந்தன்.

'எனக்கு நீயும் ஒரு பேரன் மாதிரிதான். உன் அம்மா வீட்டு வேலை செய்து உன்னை படிக்க வைக்கிறாள். உன்னால் பணம் கொடுத்து டியூஷன் படிக்க முடியாது. நான் அந்தக் காலத்து கணக்குப் பட்டதாரி. என் பேரனுக்கு சொல்லிக் கொடுத்தா பணமா வாங்குவேன். அதேமாதிரிதான் உனக்கும். நீ நல்லா படித்தால் அதுவே போதும்' என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு புறப்பட்டார்.

எல்லாவற்றையும் மறைந்திருந்து கேட்ட கோகுல் வெட்கப்பட்டான்.


அம்மாவும் அப்பாவும், என் தாத்தாவை ஒன்றுக்கும் உதவாதவர் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் நானும் அவரைக் கண்டுகொள்ளாமல் ஒதுங்கியே இருந்துவிட்டேன். தாத்தாவுக்கோ அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரியாத கணக்கு கூட தெரிந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டே அரவிந்தன் முதல் மார்க் வாங்கியிருக்கிறான். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்த கதையாக, நானோ என் தாத்தாவைப் பயன்படுத்திக்கொள்ளாமல், கணக்குப் புரியாமல் தவித்திருக்கிறேன். இனிமேல் நானும் தாத்தாவை மதிப்பேன். அவரிடம் கணக்குப் பாடம் கற்றுக் கொண்டு நூற்றுக்கு நூறு மதிப்பென் வாங்குவேன்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.

வீட்டுக்குள் ஒரு மூலையில் ஒதுங்கி இருந்த தாத்தாவின் அறைக்கு ஓடினான்.

'தாத்தா எனக்கு இந்தக் கணக்குச் சொல்லித் தாங்க தாத்தா'

'என்ன கணக்கு கோகுல், கொண்டா சொல்லித் தரேன்' என்று தாத்தா சந்தோஷமாக கணக்கை சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தார்.

## சொல் விளையாட்டு 27




### இடமிருந்து வலம்


1. கசக்கும் காய்கறி (5)
5. இனிக்கும் (2)
6. ஒரு தொலைக்காட்சி சேவை (2)
7. ஓய்வு பெற்ற நடிகை (3)
9. உறைக்கும் (3)
10. தடி (3)

### மேலிருந்து கீழ்

1. வெள்ளை (2)
2. வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது (3)
3. யமன் (3)
4. நீளமான காய்கறி (6)
5. இதன் பாலை கறிக்கு பயன்படுத்துவார்கள் (4)
6. பூக்கோர்வை (3)
8. கடிக்கும் (3)

சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 26ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...

## சிறுவர் சித்திரம்



உ. சஜீவராஜ்
தரம் 04
யா/வதிரி வடக்கு
மெ.மி.த.க. பாடசாலை

## விந்தை விஞ்ஞானம்

ஒரு கண்ணாடித் தம்ளரில் பாதி அளவுக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் இரண்டு டேபிள் ஸ்பூன் சாப்பாட்டு உப்பைப் போட்டு, ஸ்பூனினால் நன்றாகக் கலக்குங்கள்.

சிறிய நூல் கயிறு ஒன்றை (9 அங்குலம் இருக்கட்டும்) உப்புக் கரைசலில் ஒரு மணி நேரம் ஊற வையுங்கள். பிறகு அந்த நூலை எடுத்து நன்றாகக் காய வையுங்கள்.

நூல் காயந்ததும் அதன் ஒரு முனையில் ஒரு சிறிய வொஷரையோ, நட்டையோ முடி போடுங்கள். மறு முனையை இடுக்கியால் பிடித்துக் கொள்ளுங்கள். இதை வோஷ் பேஸினின் மேலாகப் பிடித்துக் கொள்வது நல்லது.

இனி உன் அண்ணாவையோ, அக்காவையோ தீக்குச்சியைக் கொளுத்தி, அதன் சுவாலையை நூல் கயிற்றில் காட்டச் சொல் லுங்கள். நூல் கயிறு எரியும். எரிந்து அணைந்த பிறகும், இரும்பு வொஷரை அதன் சாம்பல் தாங்கிக் கொண்டு அந்தரத்தில் நிற்பதைக் காண்பீர்கள்! இது எப்படி?

**இப்படித்தான்:**

நூல் கயிற்றை உப்புக் கரைசலில் ஊற வைத்த போது, கரைசலில் உள்ள உப்பு, நூல் இழைகளில் புகுந்துள்ளது. நூல் காய்ந்ததும் உப்பு ஸ்படிகமாகி நூல் இழை முழுவதிலும் ஆதரவை அதிகமாக்கியுள்ளது. நெருப்பு, நூல் இழையை மட்டுமே எரித்தது, உப்பு ஸ்படிகத்தின் பரவலான ஆதரவு அப்படியே இருந்து, மறுமுனையில் உள்ள வாஷரைத் தாங்கி நிற்கிறது.



| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
| --- | --- |

## படப்புதிர்



படங்களின் பெயர்களைக் கொண்டு கட்டங்களை பூர்த்தி செய்யுங்கள். பூர்த்திசெய்ய முடியாவிட்டால் 22ம் பக்கத்தை பார்க்கவும்.

## தீச்சுவாலை ஏன் மஞ்சளாக எரிகிறது?



தீக்குச்சி, தீபம், மெழுகு என பலவி-தமான தீ சுவாலைகளும் மஞ்சள் நிறத்தில் ஒளிர்வதைப் பார்த்திருப்பீர்கள். ஏன் அவை மஞ்சளாக இருக்கின்றன தெரியுமா? விறகு தாவரங்கள் மக்கி உருவாகும் பெட்ரோல் என எல்லாவற்றிலும் கார்பன் அணுக்கள் இருக்கின்றன. எரியும்போது கார்பன், போதிய அளவு ஒக்சிஜன் கிடைக்குமானால் கார்பன்-டை- ஒக்சைட் வாயுவாக மாறிவிடும். ஒக்சிஜன் குறைவாக உள்ள சுவாலையின் உட்பகுதியில் அது கார்பனா-கவே இருக்கும். சாதாரணமான நிலையில் கருப்பு நிறமாக இருக்கும் கார்பன்தான், உயர்ந்த வெப்பத்தில் மஞ்சளாகப் பிரகாசிக்கிறது. அதனால்தான் தீ சுவா-லைகளும் மஞ்சளாக இருக்கின்றன.

## விடுகதைகள்

1. சின்னத்தம்பிக்கு தொப்பியே வினை?
-அது என்ன?

2. உலகெங்கும் பரந்திருப்பான்,
உறக்கமின்றி விழித்திருப்பான்
-அது என்ன?

3. ஒட்டகம்போல ஓடுவான்,
இறக்கை இருந்தாலும்
பறக்கமாட்டான்
-அது என்ன?

4. அழுக்கு மூட்டை சுமக்கும், அலங்கார நடை நடக்கும், சந்தோஷம் வந்தால் சங்கீதம் பாடும்.
-அது என்ன?

5. காற்று வீசும் மரம்
-அது என்ன?

விடைகள்
1. தீக்குச்சி 2. கடல்
3. நெருப்புக்கோழி 4. கழுதை
5. சாமரம்

## வண்ணம் தீட்டுங்கள்



# ஜன்னலுக்கு வெளியே...

ஒரு பொண்ணும் பையனும் கார்ல போறாங்க. அந்த பையன் அந்தப் பெண்ணை ரொம்பவும் விரும்புறான். காரில் போகும் போது அந்த பையன் அந்தப் பெண்ணிடம் தன்னோட லவ்வை சொல்லி ஒரு லெட்டரை கொடுக்கிறான். ஆனா அந்த பெண் அந்தப் பையனை திட்டி விட்டு காரிலிருந்து கீழே இறங்கச் சொல்கிறாள். அந்தப் பையனும் இறங்குகிறான். ஆனா அந்த பையன் இறங்கும்போது ஒரு லொரி அவன் மேல மோதி ஆள் காலியாகி விடுகிறான். பின்னர் அவள் அந்தக் கடிதத்தை ஓப்பன் பண்ணுகிறாள். அதில் ''என்னைப் பிரியும்போது என் உயிர் பிரியும்'' என்று எழுதியிருந்தது.

- எம்.ஆர்.சியாமளா, பதுளை.

# SMS பூக்கள்

*நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்எம்எஸ், கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.*

0778021501



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. விக்ராம்
B. ஆர்யா
C. எஸ்.ஜே.சூர்யா
D. விஷால்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

பெட்றோல், டீசல், கேஸ்
போட்டு வண்டி ஓட்ட
அரசாங்கம் அனுமதி
கொடுக்குது. அப்போ நாம
தண்ணி போட்டு
வண்டி ஓட்டினா
போலிஸ் ஏன்
பிடிக்குது?

- ஏ.எம்.இம்ரான், கண்டி

பூவுக்குள் தேன்
நெல்லுக்குள் அரிசி
சிப்பிக்குள் முத்து
மண்ணுக்குள் வைரம்
உன் மனசை தொட்டு
சொல்லு உன்
மண்டைக்குள் களி
மண்தானே?

- எம்.சங்கீதா, கிளிநொச்சி

ஏய் நிலவே உனக்கு என்ன கொழுப்பா என் பிரண்ட் தூங்குவதை எப்படி மறைந்து நின்று பார்க்கிறாய் ஏன் நீ குரங்கு தூங்கி பார்த்தது இல்லையா?

- கே.தீபமலர், ரம்பொட

காற்றுக்கும் என் மீது கோபம்
காரணம் கேட்டேன்,
சுவாசிப்பது என்னை,
நேசிப்பது உன் நன்பனையா என்றது.

- டி.அபிராமி, அக்கறைப்பற்று

மனக் கதவை
திறக்கும்
மரணக் கதவு காதல்

- திலானி, வத்தளை

சூரியனுக்கு பாய் சொல்லி
நிலவுக்கு ஹாய் சொல்லி
தலையணைக்கு தேங்க்ஸ் சொல்லி
கனவிலும் காத்திருக்கிறேன்
உனக்கு வெல்கம் சொல்ல

- நிஸ்ரா, தர்காடவுன்

உன் பெயரை கேட்ட பிறகுதான்
தெரிந்து கொண்டேன், உன்
பெற்றோருக்கும் கவிதை எழுத
தெரியும் என்று...!

- மனசாட்சியே இல்லாமல் பொய் சொல்வோர் சங்கம்

- ஆர்.சித்ராதேவி, ரங்கல. கண்டி

யார் மனசுல...
மில்க் மனசுல தயிர்!
தயிர் மனசுல மோர்!
மோர் மனசுல யாரு?
வேற யாரு நீங்க தான்
வெண்ண...

என்னதான் பெரிய ஸ்வீட் கடைக்கே முதலாளியாய் இருந்தாலும் சலூனுக்கு போய் முறுக்கு மீசைதான் வைச்சுக்க முடியும். லட்டு, பால்கோவா, மீசைன்னு வச்சுக்க முடியாது.

- சு.யிந்துஷா, மீசாலை

அழும்போது தனியா அழு,
சிரிக்கும்போது கூட்டத்தில் சிரி,
கூட்டத்தில் அழுதால்
நடிக்கிறேன் என்பார்கள்...
தனியா சிரித்தால்
பைத்தியம் என்பார்கள்

- எச்.எம்.அஸ்ஸாம், ஓட்டமாவடி

மண்ணில் விழுந்த
மழைத் துளியைப்
பார்த்து பூமி கேட்டது
எத்தனை முறை
விழுவாய் என்று
மழை துளி சொன்னது,
என்னைத் தாங்கி கொள்ள நீ
இருக்கும் வரை என்று.

அழகான ரோஜா கூட உன்
புன்னகையை பார்த்தால் ஒரு
நொடி சிந்திக்கும். யார்
பெத்த புள்ளயோ இப்படி
மென்டல் மாதிரி
சிரிச்சிக்கிட்டு இருக்குன்னு!

- இஸ்புல்லா, திகன

மாடு போல, but சின்னதா
இருக்கும் but அது மாடு
இல்ல அது என்ன?
பதில்: கன்றுக்குட்டி

- ஆசிப் அலி, வெல்லம்பிட்டிய

ஒரு எறும்புக் கூட்டம் குளத்தில் குளிச்சிட்டு இருந்ததாம். அப்போ ஒரு யானை குளத்தில் பாய்ந்ததாம். உடனே எறும்பெல்லாம் கறையேறி விட்டதாம் ஒரு எறும்பு மட்டும் யானையின் மீதேறி இருந்ததாம். அதைப் பார்த்த மற்ற எறும்புகள், அமுக்குடா மச்சான் அமுக்கு அவன தண்ணியில் தள்ளிக் கொல்லுடா என்றதாம்.

- ரிஸ்மியா

வலிகளை சுமக்கும்
இதயத்துக்கு
கண்ணீர் சிந்தத்
தெரியாது...!
கண்ணீர் சிந்தும் கண்களுக்கு
வலிகளை தாங்க முடியாது.

- கே.நிவேதித்தா, பூநகர்

தாஜ்மஹாலைப் பார்த்து எல்லோரும் இது புனித காதலர்கள் வாழ்ந்த இடம் என்று சொல்றாங்க. ஆனா இந்த மெசேஜ்ஜ படிச்ச யாரும் அப்படி சொல்ல மாட்டாங்க...

1. சாஜஹானுக்கு 6 வைப், அதுல 4வது தான் மும்தாஜ்.
2. மும்தாஜை கல்யாணம் பண்ணுவதற்காக மும்தாஜின் கணவனை சாஜஹான் கொலை செய்தான்.
3. மும்தாஜ் அவளோட 8வது பிரசவத்தில் செத்திட்டா
4. அவள் இறந்த பிறகு அவளோட தங்கச்சியையும் கல்யாணம் பண்ணிகிட்டான்.

இப்ப சொல்லுங்க இது லவ்வா?

- எஸ். எம். சகீர், ஓட்டமாவடி

1990 காதல்
ஆரம்பிப்பது கண்களில் வளர்வது கனவுகளில் முடிவது கல்லறையில்

2012 காதல்
ஆரம்பிப்பது போனில் வளர்வது சிம்மில் முடிவடைவது சிம் சேன்ஜில்

- என்.பிரியங்கா, அப்புத்தளை

மரணமே வந்தாலும்
உன்னை... மறக்காத
இதயம் வேண்டும்.
மீண்டும்
ஒரு
ஜனனம்
என்றால்
அதில் நீயே வேண்டும்
உறவாக அல்ல என்
உயிராக

- இர்ஷான், சரீகா
கொழும்பு

அடிச்சி பெய்தா தான் மழை
அசையாம நின்னாதான் சிலை
மீன் பிடிக்க வேணும் வலை
நம்ம நாட்டுக்கு ஏது விலை
எஸ். எம். எஸ்க்கு நான்
தான் தலை
குட் நைட்

என் இதய துடிப்பின் ஓசை
மெசேஜ் டோன் ஆக
ஒலிக்கும்போது...
உன் இன்பொக்சை
திறந்துப்பார்
எஸ்.எம்.எஸ் வடிவில் என் அன்பு
உன் மொபைல் தேடி வரும்.

- அந்தோணி, கிளிநொச்சி




கடவுள் பூமிக்கு
வருவதில்லை
ஏன் தெரியுமா
காதலித்து விடுவார் என்ற
பயமாம்
இருந்தாலும் போய் பார்ப்பம் என்று
வந்தாலும் தாடியுடன் தான்
திரும்பி போவார்.

- அ. உஷா
வன்னேரிக்குளம்

தாஜ்மகாலுக்கு கிரீன் கலர் பெயிண்ட்
அடிச்சா என்னவாகும்?
என்னவாகும்...? சொல்லுங்க பார்க்கலாம்...
செலவாகும்!

- எச்.எம்.அஸ்லம், ஓட்டமாவடி-09

லவர்ஸ் டேக்கு லவ்வர கிஸ் பண்ணலாம்!
மதர்ஸ் டேக்கு மதர கிஸ் பண்ணலாம்!
சில்ரன் டேக்கு சில்ரனை கிஸ் பண்ணலாம்!
but
டீச்சர் டேக்கு
டீச்சரை
கிஸ் பண்ண
முடியுமா?

- பீ.சதீஸ் பிரபு,
அப்புத்தளை

நீயெல்லாம் ஒரு பிரண்டா?
டுடே என்ன டே தெரியுமா?
வேஸ்ட் அறிவாளி டே.
என்னை விஷ்
பண்ணவில்லை
எவ்வளவோ பேர் கோல் பண்ணி
வாழ்த்தினாங்க தெரியுமா?
இரு இரு 'முட்டாள்' டே
வரட்டும்... உன்ன நான் விஷ்
பண்ணவே மாட்டேன்.

பூவின் மணமும்,
நட்பின் குணமும் ஒன்றுதான்.
பூ வாடினாலும் வாசம் போகாது
நட்பு பிரிந்தாலும் நேசம் போகாது

- டி.அபிராமி, கோலாவில்.
அக்கறைப்பற்று

# மலேசியாவில் தமிழர்கள்

க. இராஜசிங்கன்

*மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் என் சகோதரன் பணியாற்றி வருகிறார். அவரது அழைப்பின்பேரில் அங்கே சென்றிருந்தேன். அங்கே எனக்கு வித்தியாசமான அனுபவங்கள் கிட்டின. பல உண்மைகளை நேரிலும் கண்டேன். அவற்றின் தொகுப்பே இக்கட்டுரை.*

## பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் தவிக்கும் தமிழர்கள்

மலேசியாவில் இந்து ஆலயங்கள் சட்டத்திற்கு புறம்பாக தகர்க்கப்படுகின்றன என்பது இங்கு வாழும் இந்தியத் தமிழர்களின் குற்றச்சாட்டாகும். இதனை மூன்று வகையாக வகைப்படுத்தலாம். கூட்டரசாங்கம் தகர்க்கும் ஆலயங்கள் (மத்திய அரசு). மாநில அரசாங்கங்கள் தகர்க்கும் ஆலயங்கள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் தகர்க்கும் ஆலயங்கள். மூன்றாவது. இந்த ஆலயங்கள் மலேசிய சிறுபான்மை மக்களான இந்தியர்களுக்கு சொந்தமானவை.

எங்கெங்கே ஆலயங்கள் தகர்க்கப்பட்டுள்ளன என்பதை ஆர்வத்தோடு விசாரித்தேன். ஏராளமான பெயர்களைச் சொன்னார்கள். பலவற்றை என்னால் குறித்துக் கொள்ள முடியாமற்போனது. காஜாங் உள்ளூராட்சி மன்றம் காஜாங், செமினி ரிஞ்சிங், பெரானாங், செராஸ், பலாக்கோங் மங்கி செர்டாங், சிலாங்கூர் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களும் ஸ்தாபாக் ஸ்ரீ சிவ முனீஸ்வரர் இந்து ஆலயம், பாடாங் ஜாவா கின்னாவில் அமைந்திருந்த ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், தீக்கிரையான ஷா ஈபோர் தோட்ட இந்து ஆலயம், ஷா ஆலாம் மாநகரசபை ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. மலாய் குண்டர்கள், ஆயுதம் ஏந்திய பொலிசார் இணைந்து படாங் ஜாவா ஆலயத்தினை தகர்த்தெறிந்துள்ளனர் என்ற தகவலையும் அவர்கள் வேதனையுடன் சொன்னார்கள்.

இவை தவிர ஆயிரக்கணக்கான நாட்டுப்புற தெய்வ வழிப்பாட்டு சின்னங்கள், சிலைகள் மற்றும் கோவில்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

இந்து மயானங்கள் அகற்றப்பட்டுள்ளன. சில இடங்களில் தோட்டங்கள் இருந்ததற்கான அடையாளமே இல்லை. அங்கே இந்தியர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளமும் இல்லை.

கோயில்கள் தகர்க்கப்படும்போது அங்குள்ள தெய்வசிலைகள், விக்கிரகங்களும் உடைத்து தூளாக்கப்படுவதாக ஒரு முதாட்டி கூறினார்.

கோவில்கள் தகர்க்கப்படும்போது மக்கள் எதிர்ப்பார்கள் அல்லவா? என்று கேட்டேன்.

"எதிர்ப்பு காட்டுவதா? எதிர்த்தால் உங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும். கொலை செய்யப்படும் அபாயமும் உள்ளது" என்று பதில் வந்தது. எதிர்ப்பவர்கள் மீது வழக்குகள் தொடுக்கப்படுவது இங்கே மலேசியாவில் சகஜம் என்கின்றனர் இந்தியர்கள். இந்தியர்கள் வழக்கு தொடர்ந்தால் ஏற்கப்படாமல் தள்ளுபடியாகின்றனவாம். எனினும் இந்து ஆலயங்களைத் தகர்ப்பதற்கு முன் முஸ்லீம் மாந்திரீகர் ஒருவர் கோயிலுக்கு வந்து இஸ்லாமிய முறைப்படி வழிபாடு செய்து மந்திரித்த நீரைத் தெளித்து பின்னரே கோவில் தகர்ப்பு மேற்கொள்ளப்படுகிறதாம். ஆலயத் தகர்ப்பு நிகழும் போது ஒரு பொலிஸ் ஹெலிகொப்டர் ஆலயத்திற்கு மேலே சுற்றிச் சுற்றி வலம் வருவதாகவும் உடைத்து முடியும் வரை அது கண்காணிப்பில் ஈடுபடுவதாகவும் ஒருவர் தகவல் சொன்னார்.

வீதி அபிவிருத்தி. நகர அபிவிருத்தி நடவடிக்கையின்போது இந்து ஆலயங்கள் தகர்க்கப்படுவது போல வீதியோரத்திலுள்ள மசூதிகள் உடைக்கப்படுவதில்லையா? எனக் கேட்டேன். இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள், சீன புத்த ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்களை பாதுகாக்க அவ்விடங்களில் மேம் பாலங்கள் அமைக்கப்படுவதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

படாலிங் கோயிலில் சந்தானம் என்பவர் என்னுடன் பேசினார். மலேசியாவில் சீன, முஸ்லீம், கிறிஸ்தவ மயானங்கள் பெரிய பூந்தோட்டங்களைபோல் காட்சியளிக்கின்றன. இந்து மயானங்களோ சேற்றில் மிதக்கின்றன என்றார் வேதனையுடன். இத்தகவலும் என்னில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சந்தானம், நான் ஸ்ரீலங்காவா என என்னைப் பார்த்து கேட்டார். நான் ஆம் என்றேன். அங்கு புத்தர் சிலைகள் உண்டா என்றார். அதற்கும் நான் ஆம் என்றேன். உலகிலே மிக பெரிய புத்தர் சிலை எங்கே இருக்கிறது தெரியுமா? என்றார் பீடிகையுடன். சற்று யோசித்தேன்.

"உலகிலே மிகப்பெரிய புத்தர் சிலை தும்பாட்கிளந்தானில் அமைந்துள்ள கம்போங்நெட்டிங் என்ற இடத்திலுள்ளது எனத் தகவல் தந்தார் அவர். மலேசியாவில் உள்ள பௌத்தர்கள் பெரும்பாலும் சீனர்களே. இவர்கள்தான் இங்கு வர்த்தகத்துறையில் சிறந்து விளங்குகின்றனர்.

மலேசியா சுதந்திரம் அடைந்த பின்னர் பிரதமர், துணைப் பிரதமர், தலைமை நீதிபதி மேல் முறையீடு நீதிமன்றத் தலைவர், அட்டர்னி ஜெனரல், தலைமை பொலிஸ் மா அதிபர், தரைப்படை, ஆகாயப்படை, கப்பற்படை தளபதிகள், தலைமை செயலாளர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர்கள், மாவட்ட அதிபர்கள், மேயர்கள் என்போர் மலாய் முஸ்லீம்களாக இருக்கவேண்டும் என்ற கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. இது மலாயா அரசியல் சாசனத்திலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதை மறுக்க முடியாது. எனவே இந்தியர்களுக்கு அரச உயர் பதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. எனவே மலேசிய இந்திய காங்கிரஸ் மற்றும் இந்திய நகர சமூகத்தினர் இந்திய தொழிலாளர்களின் நலன் பற்றி பேசுவதைத் தவிர்த்துள்ளனர். இவர்களுக்காகப் பேசினால் 60 வீத மலேயர்களின் ஆதரவை இழந்து விடுவோம் என்ற அச்சம் இவர்களுக்கு உண்டு" என்று விளக்கமாக பேசினார் சந்தானம்.

அம்னோ அரசில் (தேசிய முன்னணி) ம.இ.கா (மலேசிய இந்திய காங்கிரஸ்) ஒரு கூட்டுக் கட்சியாகவும், மூன்றாவது மூத்த கட்சியாகவும் உள்ளது. ம.இ.காவுக்கு குத்தகைகள், அரச பட்டங்கள், அரச விருதுகள், பதவிகள் வழங்கி கைக்குள் வைத்துக்கொள்வதாக இங்குள்ள இந்தியர்கள் குறை கூறுகின்றனர்.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்பது போல நூற்றுக்கணக்கான கோயில்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு கூலாயில் அமைந்துள்ள ரிங்சிங் ராஜ காளியம்மன் ஆலயத்திற்கு அரசு 4000 வெள்ளி வழங்கியுள்ளது. இதற்கு ஊடகங்களில் பெரிய அளவில் விளம்பரங்களும் செய்யப்பட்டன. இதனை மலேசிய இந்திய காங்கிரஸ் பெற்று தந்ததாக விளம்பரப்படுத்துகின்றனர் என குறை கூறுகின்றனர்.

இலங்கையில் இ.தொ.கா, ம.ம.மு மற்றும் ஸ்ரீ.ல.மு.கா ஆகியன அரசுடன் இணைந்து சேவையாற்றுவதைப் போலவே ம.இ.கா சேவையாற்றுகிறது என நினைத்திருந்த எனக்கு மக்களிடையே ம.இ.கா பற்றிய அபிப்பிராயம் கண்டு அதிர்சியடைந்தேன். ஆனால் இந்தியத் தமிழர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவப்படுத்த வேறு கட்சியில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

இந்து ஆலய இடிப்புக்கு எதிராக இந்து அமைப்புக்களின் கூட்டமைப்பான ஹிண்ட்ராஃப் (HINDRAF- HINDU RIGHTS ACTION FORCLE) போராட்டங்களை நடத்தி வருகின்றது. இது தவிர ஒரு லட்சத்துக்கு 50 ஆயிரம் இந்தியர்கள் பிறப்பு சான்றிழ் இல்லாமல் இருக்கின்றனர் என்ற செய்தி எம்மில் பலருக்குத் தெரியாது. இதைக் கேள்விபட்டவுடன் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. சிலாங்கூர் மாநிலத்தில் மட்டும் 40,000 மலேசிய இந்திய பிள்ளைகளுக்கு பிறப்புப்பத்திரம் இல்லையாம். இதனால் வேலைவாய்ப்பு கல்வி, மற்றும் லைசென்ஸ் பெறும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

523 தமிழ் பள்ளிகள் மலேசியாவில் உள்ள போதும் இதில் 71 சதவீதம் (370 பாடசாலைகள்) அரசமானியம் இன்றியே இயங்கி வருவதாக என்னிடம் தெரிவித்தனர். இஸ்லாமிய பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதி வாய்ப்புகள் தமிழ் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதில்லையாம். தமிழ்ப் பாடசாலைகள் கொள்கலன்களிலும், மாட்டுத் தொழுவம் போன்ற மடுவங்களிலும் நடத்தப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

ஒரு காலத்தில் இலங்கையில் தோட்டப் பாடசாலைகளின் நிலை இப்படித்தான் இருந்தது. 1977இன் பின்னர் நிலைமைகள் மாறின. பெரும்பாலான தோட்டப் பாடசாலைகள் இன்று அரசு பள்ளிகளாக நல்ல நிலையில் இயங்குகின்றன. இதற்காக இலங்கை அரசுக்கு நன்றி சொல்லவேண்டும். ஆனால் எம்மை விட சிறந்துள்ளதாக நாம் கற்பனை செய்யும் மலேசியாவில் இந்தியத் தமிழர்களின் நிலை எம்மைவிட மோசமாகவேயுள்ளது.

ஒரு ஆலயக்குருக்களை சந்தித்தேன். அவர் சொல்வதைக் கேட்க அதிர்ச்சியாக இருந்தது. மலேசிய மொத்த சனத்தொகையில் 8 வீதமானோரே இந்தியர். இதேசமயம் பொலிஸ் தடுப்புக்காவலிலும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் இறப்பவர்களில் 60 வீதமானோரும் இந்தியர்கள்தான் என்று கூறியபோது அதை நான் முதலில் நம்பவில்லை. ஆனால் அவரோ உண்மைதான் என்று அடித்துச் சொன்னார்.

(தொடரும்)


இந்தியத் தமிழ்க் குடும்பம்


போராட்டத்தில் ஹின்ட்ராஃப் உறுப்பினர்கள்


மூடப்பட்டுள்ள தமிழ்ப் பாடசாலை




**சிம்புவுக்கு எப்போ நல்ல காலம் பிறக்கும்?**

**- எஸ். நந்தினி, தியத்தலாவை**

சிம்புவுக்கு நல்ல காலம் எப்பவோ பொறந்தாச்சு. கதை, ஹீரோயின், பாடல், இசை, காமிரா, சண்டை என்று அனைத்திலும் மூக்கை நுழைக்காமல் நடிகராக மட்டும் என்று மாறுகிறாரோ அன்று முதல் அவருக்கு நல்ல காலம்தான். வி.தா.வ வில் கவுதம் மேனனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தார். நல்ல பெயர் கிடைத்தது. வானத்தில் பரவாயில்லை. ஒஸ்தியில் மீண்டும் முருங்கை மரம். இனிமேல் எப்படியோ?



சிம்புவுக்கு நல்ல காலம் பொறந்தாச்சு



**லாரன்சுக்கு 'முனி 3' கைகொடுக்குமா?**

**- கே. விஜயன், கொழும்பு**

'முனி 3' பட்ஜெட் சொன்னதிலும் பார்க்க எகிறி விட்டதாக லாரன்ஸ் (டைரக்டர்) மீது தயாரிப்பாளர் தரப்பு வழக்கு போட்டிருக்கிறது. கோடிக்கணக்கான பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கிறது. 'முனி 3' லாரன்ஸை நன்றாக பிடித்தாட்டுகிறது.

லாரன்ஸ் இப்போது சிக்கலில்

**இலியானாவுக்கு என்ன இருக்கிறது? பார்க்க கிழவி மாதிரி இருக்கிறாரே?**

**- எச்.எம். ரிஷாத், கண்டி**

BARFI படத்தில் நடித்த இலியானா எட்டாத உயரத்திற்கு போய்விட்டார். இனி இலியானா இந்திக்கு தான்னா!

இந்திக்காரர்களுக்கு பிடித்த ஏதோவொன்று இலியானாவிடம் இருக்கிறது

**கமலஹாசனுடன் இணைந்து நடிக்க ஸ்ருதி ஹாசன் மறுத்துவிட்டாராமே?**

**- எம்.எஸ்.எல்.சுக்னா, காத்தான்குடி**

மறுக்கவில்லை. அப்பாவும் மகளும் நடிப்பதற்கு ஏற்ற நல்ல கதை இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார், 'அன்புள்ள அப்பா' மாதிரி.

கற்பனைக் குதிரையே நல்ல கதை தருவா்யா?



**நயன்தாரா திருமணம் முடித்து விட்டாரா? அவரது வாழ்க்கை எப்படிப் போகிறது?**

**- எம். ரிஸ்னா, கிண்ணியா**

இருந்த பணத்தை பிரபுதேவா சுருட்டிக்கொண்ட பின் மீண்டும் இப்போது சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறார் நயன். அவரது வாழ்க்கை ஜாலியாக போகிறது.



இப்போது அவருடன் ஆடுபவர் ஆர்யா

**'கும்கி' பார்த்தீர்களா? படம் எப்படி?**

**- ஆர்.கீதா, கிராண்ட்பாஸ்**

'கும்கி' நல்ல பெயர் வாங்கியிருக்கிறது. வசூலிலும் வெற்றியாம். சிவாஜி பேரனுக்கு சிறப்பான எதிர்காலத்தை கொடுத்திருக்கிறது.

மிருகங்கள் ஏமாற்றுவதில்லை



**இப்போ இஞ்சி இடுப்பழகி யாரு?**

**- எஸ். மயூரன், வவுனியா**

இலியானாவுக்கு இடுப்பு இல்லையென்று விஜய்யே சொல்லி விட்டாரே. ஆனால் சிம்ரனின் சிற்றிடுப்பு, ஷ்ரேயாவின் சிறப்பிடுப்பு, புதியவர் பிரணீதாவின் குட்டி இடுப்பு இவைதான் கண்ணுக்கு விருந்து.

சிம்ரன் இடுப்பு டாப்பு



**நமீதாவை பற்றி சொல்லுங்களேன்.**

**- டீ. காவியன், தெனியாய**

நானும் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். நமீதாவை பற்றி ஒவ்வொரு மாதமும் ஒரு கேள்வியாவது வந்து விடுகிறதே! இருப்பதை நிறையக் காட்டுவதும் இல்லாததை மறைத்துக் காட்டுவதும் நமீதாவின் ஸ்பெஷாலிட்டி.

இருப்பதை மறைக்காதவர் நமீதா





சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்சிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்,

சினிமானந்தா
பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501




## வானவில்லுக்கு நன்றிகள் விக்னேஷ் எழுதுகிறார்

என்னைப் பற்றி முழுப்பக்கப் பேட்டிக் கட்டுரை வரைந்து எனது பிரச்சினைகளையும், தப்பு என்ற இசைக் கருவியையும் நாடறியச் செய்த உங்களுக்கு எனது நன்றிகள். கிணற்றில் இருந்தவனை குன்றில் மேல் ஏற்றி வைத்திருக்கிறீர்கள். மீடியா பலம், ஊடக சக்தி என்கிறார்கள். அது என்ன என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன். நன்றி.

என்னை எப்போதும் மட்டம் தட்டிப் பேசிக் கொண்டிருந்த சித்தப்பா, இந்தக் கட்டுரையைப் படித்து விட்டு மனம் மாறி விட்டார். எனக்கு இனி எல்லா வகையிலும் உதவுவேன் என்றும் தன்னிடம் இனிமேல் எதை வேண்டுமானாலும் வந்து கேட்கும்படியும் அவர் சொல்லி இருக்கிறார். என்னை பொருட்டாகக் கொள்ளாத என் சொந்தங்கள் இப்போது என்னுடன் பேசுகிறா-ர்கள். விசாரிக்கிறார்கள். என்னைக் கண்டு கொள்ளாத நண்பர்கள் என்னுடன் பேசுகிறார்கள். உதவி என்ன வேண்டும் என்று கேட்கிறார்கள். வாத்தியங்கள் இசைக்கத் தெரிந்தவர்கள் தொடர்பு கொண்டார்கள். எனக்கு இனிமேல் வாய்ப்பு தருவோம் என்கிறார்கள்.

இவை ஒருபுறமிருக்க, இந்தக் கட்டுரையை வாசித்த பலர், தமது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி எனக்கு அழைப்பு அனுப்பி இருக்கிறார்கள். திடீரென நான் பிஸியாகி விட்டேன். ஒரே ஒரு பேட்டியை வெளியிட்டதன் மூலம் வண்ணவானவில் என் வாழ்க்கையில் ஒளியேற்றி இருக்கிறது. வானவில்லை நான் மறக்கவே மாட்டேன்.

**- எம். விக்னேஷ்வரன்**
**றைகம் மேல்பிரிவு**

## விக்னேஷ் 2

இந்த இதழில் என்னை மிகவும் கவர்ந்த விஷயங்கள் இரண்டு. முதலாவது நான்காம் பக்கத்தில் வெளியான தப்பு தொடர்பான விக்னேஷின் பேட்டி. பறை இசை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இசையைக் கேட்டதில்லை. அது ஒரு வெறும் வாத்தியம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதனுடன் சாதி சமயம் என்றெல்லாம் பல சிக்கல்கள் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை அறிந்து கொண்டபோது முள்ளந்தண்டு சில்லிட்டது என்பது உண்மை. விக்னேஷ் தன் துறையில் சிறந்து விளங்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

இரண்டாவது, இலங்கையில் கலைச் சேவையாற்றி வரும் தம்பு குடும்பம் என்ற படைப்பு. தம்பு குடும்பம் பற்றி தெரிந்து கொண்டமைக்காக தம்பி ஐயாவுக்கு நன்றி.

**- இரத்தினராஜா**
**கொழும்பு 13**

## சுவையான உண்மைச் சம்பவங்கள்

வானவில்லில் வெளியாகும் உண்மைச் சம்பவங்கள் மிகவும் சுவையாக உள்ளன. இந்த இதழில் வெளியான குப்பைத் தொட்டிக்குள் போன செல்போன், காணாமல் போன செருப்பு ஆகிய கதைகள் வாசிக்க ரசமாக இருந்தன. மன்றில் கேட்ட கதைகள், ஒரு சோகத்துக்குள் நகைச்சுவையை என்பதாக அமைந்துள்ளது. அவள் பூனை பிடிக்காததால்தான் தற்கொலை செய்தாளா அல்லது வேறு காரணங்களா? என்பதைச் சொல்லவில்லையே! மொத்தத்தில் வானவில் மெருகேறி வருகிறது. எழுத்துப் பிழைகளை தவிர்ப்பது நல்லது.

**- எம். அப்துல்லாஹ்**
**அக்குறணை**

## மலேசியாவில் தமிழர்கள்

இந்த இதழில் ஆரம்பமாகி இருக்கும் மலேசியாவில் தமிழர்கள் என்ற கட்டுரைத் தொடரைப் படித்து ஆச்சரியப்பட்டுப் போனேன். அந்த நாடு சொர்க்க பூமி என்றும் அங்கு வாழும் தமிழர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றும்தான் எண்ணியிருந்தேன். கட்டுரையாளர் தரும் தகவல்களோ முற்றிலும் வேறானவையாக இருக்கின்றன. இப்படியான தகவல்களை வானவில்தான் முந்தித் தருகிறது. மொத்தத்தில் வாசிப்புக்கு நிறைய தகவல்களைத் தாங்கி வரும் சஞ்சிகை இது.

**- பி. எஸ் பாலன்**
**டிக்கோயா**

## கோர்க்கியின் சிறுகதை

மாக்ஸிம் கோர்கியின் சிறுகதை ஒன்றை நீண்டகாலத்துக்குப் பின்னர் வாசிக்கக் கிடைத்தது. நேர்த்தியான மொழிபெயர்ப்பு. கதை என் நெஞ்சைத் தொட்டது. இந்தப் பெரிய கதாசிரியன் எவ்வளவு எளிமையாக மனதைத் தைக்கும் கதையை சொல்லி இருக்கிறான்! இந்தக் கதைக் கரு இன்னைக்கும் பொருத்தமானதே என்பது விசேஷம். இந்த மாதிரி சிறந்த உலக சிறுகதைகளை அவ்வப்போது தந்தால் நன்றாக இருக்கும்.

**- நஸீம் அன்சார்**
**மாவனல்லை**

## கில்லாடி!

நீ, நான் நேசிக்கின்ற வானவில். ஒவ்வொரு இதழையும் (கண்களில்) ஒற்றிக்கொள்ளாத குறையாக எடுத்து வாசித்து மகிழ்வேன். கவனக்குறைவான எடுத்துப் பிழைகளையும் சினமா செய்திகளையும் குறைத்துக்கொண்டால் இன்னும் ஜொலிப்பாய். விஸ்வரூபம், டிஎச் தொடர்பான விவரங்களை எங்களுக்கும் விளங்குகின்ற மாதிரி தந்ததற்கு நன்றி. விஷயங்களை அறிந்து முன்கூட்டியே தருவதில் நீ கில்லடி!

**- ரேணுகா, சுபா**
**மன்னார்**

## புதிய பாதைக்கு வாருங்களேன்!

ஊடக கலாசாரம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப பத்திரிகைகளும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். குறிப்பாக விரைவாகவும் புதுப்புது கோணங்களிலும் இயங்கும் இலத்திரன் ஊடகங்கள் தம்மை அவ்வப்போது சுய பரிசோதனை செய்து புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியம். அன்னை வானொலி தன் மவுசை இழக்கக் காரணம் காலத்துக்கு ஏற்ற மாதிரித் தன்னைப் புதுப்பிக்கத் தவறியமையே என்பது ஒன்றும் புதிய தகவல் அல்ல.

நேத்ரா டீவியில் சில அறிவிப்பாளர்கள் தமிழ்மொழி உச்சரிப்பில் கோட்டை விடுவதைப் பார்த்திருக்கிறேன். நிகழ்ச்சியிலும் புதுமை தேவை. இதே சமயம் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகள் பாராட்டும்படி உள்ளன. கடந்த நோன்புப் பெருநாள் நாடகமும், நடிப்பு, கதை அம்சம், நெறியாள்கை என்பனவும் பாராட்டும்படி அமைந்திருந்தன. இவ்வாறான படைப்புகள் அடிக்கடி வரவேண்டும்.

வசந்தம் டிவி, சக்தி டிவி, டான் டிவி, ஆகியனவும் வசந்தம் அலை, வெற்றி, சூரியன், சக்தி ஆகிய எப்.எம் களும் பல ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளை தந்து கொண்டிருக்கின்றன. இவை மாற்றங்களை ஏற்று நேயர்களுக்கு விருந்து படைக்க, தென்றல் எப்.எம், நேத்ரா டிவி என்பன பழைய பாதையிலேயே போய்க் கொண்டிருந்தால் எப்படி?

**- ஸைனஸ் கதீஜா,**
**சாய்ந்தமருது-02**

## சாதி, காதல், பழிவாங்கல்...

(11ஆம் பக்கத் தொடர்)

சந்தர்ப்பத்துக்காக காத்திருந்த பால, சஞ்சீவவை பழி வாங்குவதற்கு சிமியோனை பயன்படுத்தத் தீர்மானித்தான்.

''இங்கே பார். நான் உன்னோட சாதிக்காரன். அதுவும் கிட்டத்து சொந்தக்காரன். உன்னுடைய மகளை ஏன் எனக்குக் கொடுக்கக்கூடாது? அப்படி நடந்தால் நீ எந்த வேலையும் செய்யவேண்டியதில்லையே. காலை மாலை இரவு என்று எந்த நேரமும் மதுவில் குளிக்கலாமே! அவள் வேறு சாதிக்காரனுடன் சம்பந்தம் வைத்திருக்கிறாள். அது சரியா?''' என்று சிமியோனின் காதில் ஓதிக்கொண்டே வாயில் கசிப்பை ஊற்றுவான் பால. அது சிமியோனின் மனதில் வெறியையும் உடம்பெங்கும் பழிவாங்கும் உணர்வையும் ஏற்படுத்தியது.

சிரியலதா தனக்குத்தான் என்று ஒவ்வொரு நாளும் சிமியோனிடம் வாக்குறுதி வாங்கிக் கொள்வான் பால. சில சமயங்களில் எழுத்தில் வாங்கிக் கொண்டதும் உண்டு.

ஒவ்வொரு நாளும் பால வேதம் ஓதியதால் சஞ்சீவவை ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் சிமியோனிடம் வெறித்தனமாக எழுந்தது. என்ன செய்யலாம் என்று பாலவிடமே யோசனை கேட்க அவன் ஒரு யோசனை சொன்னான்.

பாலாவின் யோசனைப்படி 5 அங்குல கிரிஸ் கத்தியொன்றை இதற்காகவே தயாரித்து தனது இடுப்பில் செருகி வைத்திருந்தான் சிமியோன்.

ஒருநாள் வேதம் நன்றாக ஓதப்பட்டு போதையும் நன்றாகவே ஏறியிருந்த நிலையில்...

மாலை நேரம்

சஞ்சீவ டிரக்டர் மூலம் வயலை உழுது விட்டு கை கால் கழுவுவதற்காக அருகில் உள்ள ஓடைக்குச் சென்றான். கை கால் கழுவி விட்டு டவலால் முகம் துடைத்துக்கொண்டிருந்தபோது அருகில் இருந்த பெரிய கும்புக் மரத்தின் பின்னால் ஒளிந்திருந்த சிமியொன் சரியாக சஞ்சீவவின் மார்புப் பகுதியை குறிவைத்து கிரிஸ் கத்தியை இறக்கினான்.

சஞ்சீவ தன்னை சுதாரிப்பதற்குள் நன்றாக தீட்டியிருந்த கிரிஸ் கத்தி அவனது மார்பில் ஆழமாக இறங்கியது.

அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்த வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஓடி வருவதற்குள் சிமியோன் அம்பேல்.

ஓடையில் விழுந்து கிடந்த சஞ்சீவவை வரப்பினில் தூக்கி வைப்பதற்குள் அரை உயிர் பிரிந்து விட்டது. சடலத்தைத்தான் ஆஸ்பத்திரிக்கு எடுத்து எடுத்துச் சென்றார்கள்.

நீண்ட கத்தியால் ஆழமாக குத்தப்பட்டதில் அதிக இரத்தம் இழக்கப்பட்டதனால் ஏற்பட்ட மரணம் என்று சட்ட வைத்திய அதிகாரி மரண சான்றிதழில் குறிப்பிட்டார்.

அடுத்த சில மணி நேரத்தில் பால சிரியலதாவை எங்கேயோ கடத்திக் கொண்டு போனது மற்றொரு கிளைக்கதை!

## மொழியை நான்...

(09ஆம் பக்கத் தொடர்)

தமிழ் என்பது ஒரு இசை மொழி. அதைப் பயன்படுத்த வாய்மொழியால் அந்த பழக்கத்தை நீங்கள் உருவாக்கவேண்டும். ஒவ்வொருத்தருக்கும் ஒரு கொள்கை இருக்கிறது. மொழி என்பது [illegible] என்று ஒருத்தன் நினைக்கிறான். மொழி என்பது எனது அடையாளம் என்று இன்னொருத்தன் நினைக்கிறான். மொழி என்பதை அடையாளமாக நினைப்பவன் மற்றவனுக்கு அந்த உணர்வை ஏற்படுத்தவேண்டும்.

நான் மொழியை எனது அடையாளமாக நினைக்கவில்லை. என் மொழி மற்ற மொழிகளை விட சிறப்பானதாக இருப்பதனால் நான் தமிழில் பேசுகிறேன். எனினும் இந்த சிறப்பை ஒரு தகுதியாக பார்க்கவேண்டிய அவசியமில்லை. இதை சிறப்பு தகுதியாக பார்க்கவேண்டும் என்பதுதான் எனக்கு பிரச்சினையாக தோன்றுகிறது," என்ற கோபியின் செல் மணியடிக்க, ஒரே வரியில் பதிலளித்துவிட்டு நம்மிடம் தொடர்ந்தார்.

''நிறைய தேடல் என்னிடம் இருக்கிறது. ஸ்கிரிப்ட் எழுதி வைத்து பாடமாக்கி பிறகு கெமராவுக்குள் முன்பாக சொல்வது என் அகராதியிலேயே கிடையாது. டைரக்டர் விசயத்தை சொல்வார்; நான் அதை உள்வாங்கி கொண்டு பேச ஆரம்பிப்பேன் அவ்வளவுதான். என்னிடம் ஸ்கிரிப்ட் தந்தால் எனக்கு பேச்சே வராது'', என்றவரிடம், உங்களுக்கு மற்றவர்களின் தாக்கம் இருக்கிறதா? என்று வினவினோம்.

''நான் ஒன்றும் சுயம்பு இல்லை. நிறைய பேரின் தாக்கம் எனக்குள் இருக்கிறது. மனிதனே குரங்கோட தாக்கம்தானே!

இத்தனை நூற்றாண்டுகளுக்கு பிறகும் மனிதன் குரங்கின் தாக்கமாகத்தானே இருக்கிறான். ரவி பெர்ணாட்டில் தொடங்கி, கே.எஸ்.ராஜா, உதுமான்கனி, அப்துல் ஹமீது என்று எல்லோருடைய தாக்கமும் எனக்குள் இருக்கிறது. இதை தாண்டி முன்னால் உள்ள டீக் கடையில் கறிவேப்பிலை விற்கிற பாட்டி, பக்கத்து கடையில் வடை சுடுகிற அண்ணன், பரோட்டா மாஸ்டர் இவங்களுடைய தாக்கமும் என்னிடம் இருக்கிறது. தாக்கம் என்பது பெரிய மனிதர்கள், தலைவர்கள் ஏற்படுத்துவது அல்ல. எதிர்வீட்டுக்காரராகவோ, பக்கத்து வீட்டுக்காரராகவே கூட இருக்கலாம்," என்றவரிடம் உங்களின் நிகழ்ச்சிகள் சிலவற்றில் உலக நாயகன் கமலை நீங்கள் கொஞ்சம் அதிகமாக புகழ்வதாக தெரிகிறதே என்று கோபியின் வாயைக் கிளறினோம். விழிகளை அகல விரித்த கோபி எம்மை நிமிர்ந்து பார்த்தார்.

''தமிழ் திரையுலகில் ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள ஒரு பெரிய கலைஞன். இந்தப் படம் ஓடுமா ஓடாதா என்று ஒரு சாதாரண ரசிகனுக்குத் தெரியும்போது அது கமலுக்கு தெரியாதா? ஆனால் அப்படியும் அவர் அதில் சில ரிஸ்க் எடுக்கிறார் என்றால் தான் நிற்கும் ஊடகத்தின் வழியாக ஒரு தகவலை சொல்ல வேண்டும் என்கிற தவிப்பு அவரிடம் இருக்கிறது. அந்த வகையில் அவர் பாராட்டுக்குரியவர்," என்று சொல்லி தமது நேர்காணலை கோபிநாத் நிறைவு செய்தார்.



ஐயா இரண்டு சிகரெட் தாங்க

அடப்பாவி இந்த சின்ன வயசிலேயே சிகரட் கேக்கிறியா?

சீ... சீ இது எனக்கில்ல என் தம்பிக்கு!

**- ஜே.எச்.எம். அஸ்ரன், நேகம**




**அப்பா:** மகனே நேற்று நைட் முழுவதும் படிக்கிறேன் என்று சொன்னாயே ஆனால் லைட் எரிந்ததை காணலியே?

**மகன்:** அய்யோ அப்பா படிக்கிற அவசரத்திலே லைட்ட போட மறந்திட்டேன்.

**- எஸ். மதுரா, சங்கானை**

## ஐநூறு ரூபாய்...

(12ஆம் பக்கத் தொடர்)

''இந்த றைவர் ஒரு மடையன். பொலிஸ்காரங்களிலே ஒருத்தர் ரெண்டு பேர் லஞ்சம் வாங்குறாங்க என்பதுக்காக எல்லோரையும் அப்பிடிக் கருதலாமா சார்?. இதைப் பாருங்க சார். பிளேன் டிக்கட். நடுச்சாமம் ரெண்டு மணிக்கு எனக்கு பிளைட். பன்னிரெண்டுக்கு முன்னாலே எயாபோட் போயிடணும். றைவர் மெதுவாகத்தான் சார் ஓட்டி வந்தார். நான்தான் சார்கொஞ்சம் வேகமா போகச் சொன்னேன். பிழை என்னிலேதான்சார்"

''ரைமுக்கு அங்கே போகணுமென்றா நேரத்தோடே புறப்பட்டிருக்கலாமே. இன்னும் இருநூறு கிலோ மீட்டர் போகவேணுமே"

முத்தலிப் சடுதியாக தன் தகப்பனாரை நினைத்தான்.

''பின்னேரம் நாலு மணிக்கு புறப்பட்ட பிரயாணம் சார். இடையிலே டயர் பஞ்சராயிட்டு. ஸ்பெயா வீலைப் போட்டாகொஞ்ச நேரத்தாலே அதுவும் பஞ்சராயிட்டு. ஆட்டோவிலேபோய் ரயரை செய்துட்டு வந்து இப்போ உங்ககிட்டேமாட்டிக்கொண்டோம் சார். தயவுசெய்து..." முத்தலிப் அழாதகுறையாக நடித்தான்.

''பிரயாணத்திலே இப்படியெல்லாம் நேருமுன்னு தெரிஞ்சிருக்கணுமே. அதை விடவும் முந்தி புறப்பட்டிருக்கலாமே"

''அதை ஏன் சார் கேக்கிறீய்ங்க. நான் இப்படி போறேன்னு நினைச்ச என் வாப்பாவுக்கு காலைலே சடுதியா ஹாட் அட்டக்வந்துட்டுது. அவரை ஹாஸ்பிடலுக்கு கொண்டு போய்பார்த்து திரிந்ததாலே நேரத்தோட புறப்பட முடியாம போயிட்டுது சார். வாப்பாவை நினைச்சாத்தான்...." வெம்பி விசும்பி அழுவதாக நடித்தான்.

பண்டார சிறிது நேரம் எதைப் பற்றியோ சிந்தித்தார்.

''பார்த்தா பாவமா இருக்கிறீங்க. இந்தத் தடவ மன்னிக்கிறேன். வேகமா போகாதீங்க. உங்க நன்மைக்குத்தான சொல்றேன்"

''ரொம்ப தாங்ஸ் சார். உங்களை என் வாழ் நாளிலேயே மறக்கமாட்டேன் சார். வாரம் சார்"

''குற்றத்தைச் செய்துட்டு லஞ்சம் கொடுத்து தப்புறதை நினைச்சும் பாக்காதீங்க. பத்திரமா போங்க"

முத்தலிபும் சபீக்கும் வாகனத்தை நோக்கிச் செல்லும்போது ''பாவம். ரொம்பத் தங்கமான பையன். அப்பாவை நினைச்சதுமே அழுதிட்டான். பிள்ளைகளென்டா அப்பா அம்மாவோட இப்படித்தான் பாசமா இருக்கோணும்" என்றார் பண்டார சார்ஜன் தன் பக்கத்தில் நின்ற மற்ற கான்ஸ்டபிளிடம்.

வாகனம் பயணத்தைத் தொடர்ந்தது. முத்தலிபும் சபீக்கும் இன்னும் வாய்விட்டுச் சிரித்துக்கொண்டிருந்தனர்.

''உங்கிட நடிப்பு ஏ வண்! முத்தலிப். உங்களை நம்பி எந்தஸ்பீட்லேயும் வாகனத்தைச் செலுத்தலாம்."என்றான் சபீக் சிரித்தவாறு.

''அந்த ஆள் ஒரு வாழத் தெரியாதவன். இந்தாள்ட சம்பளத்துக்குள்ளே அவர்ர பொஞ்சாதி எப்படித்தான் குடும்பம் நடத்துறாளோ!" கூறிவிட்டு முத்தலிபும் சிரித்தான்.

ஸ்பீடோமீட்டர் மீண்டும் நூறைத் தொடுவதும் விலகுவதுமாக கண்ணாமூச்சி காட்டி விளையாடியது. எதிரே வேகமாக வந்தவாகனமொன்றுக்கு வழிவிடுவதற்காக சபீக் இடப்புறமாக சற்றுநொடிக்க பள்ளமான குழியொன்றினுள் சடுதியாக விழுந்து எழுப்பிய வாகனம் மீண்டும் பாதைக்கு வந்ததும் ஒரு பக்கசக்கரம் குட்டத் தொடங்கியது. சபீக் வாகனத்தை சடுதியாகநிறுத்தினான்.

''என்ன சபீக்? என்ன பிரச்சினை"

சபீக் பதில் கூறாமலேயே ஆசனத்திலிருந்தும் கீழே இறங்கிவாகனத்தின் இடது பக்கமாகச் சென்று பார்த்தான்.

''டயர் பஞ்சராயிட்டு" என்றான்.

''கஸ்ட காலம்டா! வரும்போது யாரிலே முழிச்சோமோ! ஸ்பெயா வீல் இருக்கா? "

''இருக்கு. ஆனா தேய்ஞ்சது. இப்போ மாத்துறேன். போகும்வழியிலே கழற்றுற வீலை சரிசெய்து திரும்பப் போட்டுக்கொண்டுபோவோம். கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க. இதோ மாத்திடுறேன்"

அவர்கள் இருவருமாக வேகவேகமாக இயங்கி.... சுமார் இருபது நிமிடங்களில் மீண்டும் வாகனம் பயணத்தைத் தொடர்ந்தது.

கால் மணி நேர ஓட்டத்தின் பின்னர் நகரமொன்றில்நிறுத்தி பஞ்சரான டயரை சரி பண்ணி மீளவும் வாகனத்தில்பொருத்திக்கொண்டனர். ஹோட்டலொன்றில் அவசரவசரமாக எதையோ கொறித்துக்கொண்டனர்.

''சபீக். நேரம் பதினொன்றாகப் போகுது. இன்னும் நூறுகிலோமீட்டராவது ஓடணும். எந்த அளவுக்கு வேகமாகப்போகலாமோ அந்த அளவுக்குப் போங்க." என்றான் முத்தலிப்.

''நான் நூத்திஅம்பதிலேயும் போக ஆயத்தம். இந்தட்ரபிக்காரனுகள்தான்....."

வாகனம் நூறை விடவும் வேகமாக சிறுத்தையாகப் பாய்ந்துகொண்டிருந்தது. ஒரு பதினைந்து நிமிடங்கள்சென்றிருக்கலாம். சபீக் கையொன்றால் தலையிலடித்தவாறே சரேலென பிரேக்கை நசித்தான்.

''போச்சுடா! திரும்பவும் ட்ரபிக் பொலிஸ்காரன். நீங்களும் இறங்கி வாங்க. இன்டைக்கி கஷ்டகாலம்தான்." முணுமுணுத்தவாறே சபீக் வாகனத்திலிருந்தும் இறங்கினான்.

''என்னப்பா. சாகப்போறியா? இப்படி வேகமா வாறியே. ஊட்லே சொல்லிப்புட்டு வந்தியா. லைசனை எடு" பொலிஸ்காரன் வள்த்தான்.

''சார்......"

''கதையாதே. லைசனை எடு"

''பிளேனுக்கு நேரமாயிட்டு சார். இன்னும் கால் மணியிலே இவர் எயாபோட்டிலே நிக்கணும் சார். இந்தத் தடவ மட்டும் மன்னிச்சிக்கொள்ளுங்க சார். இந்தாங்க சார். இதை வைச்சுக்கொள்ளுங்க" கூறியவாறு ஐநூறு ரூபா தாளை சபீக் பொலிஸ்காரனின் கைக்குள் திணித்தான்.

''சரிசரி. இவர் எயாபோட்டுக்கு நேரத்துக்குபோகணும்கிறதுக்காக உன்னை மன்னிச்சி விடுறன். பக்கட்டுக்கே சிகரட் இருக்கா?"

''இல்லை சார்"

''இவர் இங்கே நிக்கட்டும். நீ அந்தக் கடைக்கி ஓடிப்போய இருபது போட்ட ஒரு பக்கட் கோல்ட் லீவ் வாங்கிக்கொண்டுவந்து தந்திட்டுப் போ"

சபீக் ஓடிச்சென்று சில நிமிடங்களில் திரும்பி வந்தான்.

வாகனம் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது.

''சிகரட்டுக்கும் அந்தப் பொலிஸ்காரனுக்கு ஹத்தம் ஓதியதுக்குமாக ஆயிரம் ருபா போயிட்டு. வழமையா ஐநூறு ருபாவோட சரிக்கட்டிடலாம். இவன் ஆள் பெரிய கல்லுளிமங்கன்."என்றான் சபீக்.

''வாப்பா சொன்னதை அப்போது கேட்டிருந்தா இந்த நேரம் எயாபோட்டிலே செக்கிங் எல்லாம் முடிச்சி காலுக்கு மேலே காலபோட்டு உட்கார்ந்திருக்கலாம். நீங்க கதைக்காம வேகமா வண்டியைச் செலுத்துங்க."

ஏற்கனவேயே கறுத்திருந்த வானத்திலிருந்து சரேலெனமழை கொட்டத் தொடங்கியது.

''சபீக். றோட்டு வழுக்கும். கவனம்" என்றான் முத்தலிப்.

''அதை நான் பார்த்துக்கறேன்"

அடிக்கடி பிரேக்கை நசிப்பதும் விடுவதுமாககட்டுக்கடங்காத வேகத்தில் வாகனம் ஓடிக்கொண்டிருந்தபோது முன்னால் வந்த வளைவொன்றில் அதே வேகத்துடன் வாகனத்தை வளைக்க,......எதிரே வேகமாக வந்துகொண்டிருந்தவாகனமொன்றின் வெளிச்சத்தைக் கண்டதும் சடுதியாக பிரேக்கை நசிக்க, வாகனம் ஒரு பக்கத்துக்குவழுக்கியவாறு........ இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக.......

வானத்தில் மிகப் பிரமாண்டமானதோர் இடியோசை வெடித்ததைப் போன்று ஒலித்த சப்தத்தினால் திடுக்குற்ற பாதைக்குப் பக்கத்தில் வசித்த பல குடும்பத்தினர் பதைபதைக்க எழுந்து தெருவுக்கு ஓடிவந்தனர்.

# வரலாற்று சாதனையை தவறவிட்ட உசேய்ன் போல்ட்

உலக கனிஸ்ட மெய்வல்லுன சாம்பியன் பட்டத்தை உசேய்ன் போல்ட் சுவீகரித்துக்கொண்டதையடுத்து உலகின் பிரபல விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான 'பூமா' (PUMA) நிறுவனம் உசேய்ன் போல்ட்டின் விளையாட்டு திறமைகளுக்கு அனுசரனை வழங்க முன்வந்தது.

பதின்ம வயதில் விளையாட்டு உலகில் பிரபல்யம் பெற்ற ஒரு நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட வாய்ப்பு பெற்றதே உசேய்ன் போல்ட்டுக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

போல்ட்டுக்கு தேவையான அனைத்து விளையாட்டு உபகரணங்கள், ஆடை அணிகள், போஷாக்கு உணவு ஆகியவற்றுடன் வெளிநாடுகளில் பயிற்சி மற்றும் ஒரு மாதத்துக்கான குறிப்பிட்ட சம்பளம் ஆகியன இந்த உடன்படிக்கையின் கீழ் கிடைத்தது.

பொருளாதார பிரச்சினைகளில் சிக்கித் தவித்த உசேய்ன் போல்ட்டுக்கு இந்த உடன்படிக்கை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

உசேய்ன் போல்ட்டுக்கு இந்த அனுசரணையை பெறுவதற்கு மிகவும் உதவியாக இருந்தவர் ஜமேய்க்காவின் முன்னாள் பிரதமர் பி.ஜே. பெட்டர்சன். அவர் ஒரு விளையாட்டுப் பிரியர். ஜமேய்க்காவின் மிகச்சிறந்த மெய்வல்லுன வீரர் உசேய்ன் போல்ட் என்று பட்டர்சன் அடிக்கடி கூறி வந்தார்.

'பூமா' நிறுவனத்துடனான உடன்படிக்கையின்படி உசேய்ன் போல்ட் தனது நேரத்தை பெரும்பாலும் தலைநகரான கிங்ஸ்டனிலேயே கழிக்கவேண்டியிருந்தது. எனவே கிங்ஸ்டன் தொழில்நுட்ப கல்லூரியில் விளையாட்டு மைதானமும், உடற்பயிற்சி அரங்கும் உசேய்ன் போல்ட்டுக்காக எப்போதுமே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

அதுமட்டுமன்றி உசேய்ன் போல்ட்டுக்கு என ஒரு பயிற்சியாளரும் கிங்ஸ்டனில் அமர்த்தப்பட்டிருந்தார். அவரது பெயர் பிட்ஸ் கொல்மன். எனினும் வாழ்ந்து பழகிப்போன கிராமத்தை விட்டு விட்டு நகர்புறத்துக்கு வருவது உசேய்ன் போல்ட்டுக்கு கொஞ்சம் சிரமமாக இருந்தது. அம்மாவை விட்டு பிரிவது அவருக்கு பெருங்கஷ்டமாக இருந்தது.

''அனைத்து சந்தர்ப்பங்களிலும் என்னுடன் கூடவே இருந்த அம்மாவை விட்டுப் பிரிவது எளிதாக இருக்கவில்லை. அத்துடன் எனது பயிற்சியாளர் மெக்னில்லையும் பிரியவேண்டியிருந்தது" என்று தனது நிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் போல்ட்.

கிங்ஸ்டனில் போல்ட் மேற்கொண்ட விடுதி வாழ்க்கை திடீர் உணவுகளுக்கும் நொறுக்குத் தீனிக்கும் அவரை நன்கு பழக்கியது. அத்துடன் இரவு நேர கேளிக்கை விடுதிகளுக்கு சென்று வரவும் பழகினார்.

மெல்ல மெல்ல கிங்ஸ்டன் விடுதி வாழ்க்கை போல்ட்டுக்கு பழகிப்போனது, அதேசமயம் மைதானத்தில் பயிற்சிகள் தீவிரமாகின. இவ்வகையில் 2003 ஆம் ஆண்டு போல்ட்டுக்கு வெற்றிகரமாக அமைந்தது.

2002 ஆம் ஆண்டு உலக கனிஷ்ட மெய்வல்லுன போட்டிகளில் வேகமான வீரர் என்ற பெருமையை பெற்ற போல்ட்டுக்கு உலக மெய்வல்லுன சம்மேளனம் RISING STAR AWARD 2002 என்ற விருது வழங்கி கௌரவித்தது. கனிஷ்ட மெய்வல்லுன வீரர் ஒருவர் பெறக்கூடிய அதியுயர் விருது இதுவாகும்.

2003ஆம் ஆண்டு 'கரிப்டா' விளையாட்டு விழாவில் நான்கு தங்கப் பதக்கங்களை சுவீகரித்த உசேய்ன் போல்ட்டுக்கு அந்த விளையாட்டு விழாவில் சிறந்த வீரருக்கான AUSTIN SEALYTROPHY வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டுக்கான உலக கனிஷ்ட மெய்வல்லுன விளையாட்டு போட்டிகள் இம்முறை கனடாவில் நடைபெற்றன. இப்போட்டியில் உலகின் தலைசிறந்த கனிஷ்ட வீரர்கள் பலர் 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரையும் தோற்கடித்து 20.40 செக்கன்களில் அத்தூரத்தை ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை உசேய்ன் போல்ட் சுவீகரித்துக்கொண்டார்.

அதேவருடம் இடம்பெற்ற பான் அமெரிக்கன் கனிஷ்ட மெய்வல்லுன போட்டிகளில் போல்ட்டின் திறமைகள் பளிச்சிட்டன.

இப்போட்டிகள் மேற்கு இந்திய தீவுகளின் பார்படோஸ் தீவின் பிரிட்'ஜ் டவுன் நகரில் இடம்பெற்றது. உசேய்ன் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான பிரிவில் போட்டியில் பங்கேற்றார். 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 45.3 செக்கன்களில் ஓடி முடித்தார். இது புதிய சாதனையாகும். முன்னைய சாதனையை விட 0.87 குறைவான செக்கன்களில் அவர் ஓடி முடித்திருந்தார். 200 மீட்டர் தூரத்தை 20.13 செக்கன்களில் முடித்தார். ரோய் மார்டின் என்ற வீரரின் சாதனை மிகு ஓட்டப் பிரதியை இது சமப்படுத்தியது.

உலக மெய்வல்லுன சாம்பியன் போட்டிகள் (WORLD CHAMPIONSHIPS) என்பது மெய்வல்லுன போட்டிகளின் ஒலிம்பிக் போன்றதாகும். 2003 ம் ஆண்டு உலக மெய்வல்லுன போட்டிகளில் உசேன் கலந்து கொள்ளவிருந்தார்.

உசேய்ன் போல்ட் அதுவரை ஓடியிருந்த வேகப் பெறுதிகளை கணக்கில் எடுக்கும்போது அவ்வருடம் 200 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் உசேய்ன் போல்ட்டுக்குத்தான் கிடைக்கும் என்பது விளையாட்டு விமர்சகர்கள் அனைவரினதும் ஒருமித்த கருத்தாக இருந்தது. அந்த ஆண்டு உலக மெய்வல்லுன சாம்பியன் போட்டிகள் பிரான்ஸின் தலைநகரமான பாரிஸில் நடைபெறவிருந்தது.

2002 ஆம் ஆண்டு உலக கிண்ண கால்பந்து சுற்றுப் போட்டியின் இறுதி போட்டி நடைபெற்ற 'ஸ்டேடிய பிரான்ஸ்' என்ற நவீன விளையாட்டரங்கில் உலக மெய்வல்லுன சாம்பியன் போட்டிகள் நடைபெற்றன.

உசேய்ன் உள்ளிட்ட ஜமேய்க்கா வீர வீராங்கனைகள் போட்டி ஆரம்பமாக 17 நாட்கள் இருக்கும்போதே பாரீஸ் வந்து சேர்ந்தனர். பான் அமெரிக்க போட்டிகளில் கிடைத்த போல்ட்டின் 200 மீட்டர் ஓட்ட நேரப் பெறுதியான 20.13 செக்கன்கள் இம்முறை போல்ட்டுக்கு தங்கப் பதக்கத்தை பெற்றுத்தர போதுமானதாக இருந்தது.

16 வயதில் அப்போட்டியில் கலந்து கொண்ட போல்ட் தங்கப்பதக்கத்தை சுவீகரிப்பாரேயானால் 1983 ஆம் ஆண்டு பின்லாந்தின் ஹெல்சிங்க் நகரில் ஆரம்பிக்கப்பட்ட உலக மெய்வல்லுன சாம்பியன் போட்டிகளில் ஆகக்குறைந்த வயதில் தங்கப்பதக்கமொன்றை சுவீகரித்துக்கொண்டவர் என்ற பெருமையை பெறுவார்.

முதலாவது தெரிவுப்போட்டியை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட உசேய்ன் போல்ட் இரண்டாவது தெரிவுப்போட்டிக்கு தயாராகியபோது அவரது மணிக்கட்டில் வீக்கம் ஏற்பட்டது. பயிற்சியாளர் மற்றும் முகாமையாளர்களின் ஆலோசனையின் பேரில் அவருக்கு சிறிது ஓய்வு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அவர்களது அந்தத் தீர்மானம், உசேய்ன் போல்ட்டினால் எளிதில் ஏற்படுத்தக்கூடிய, எப்போதுமே உடைத்தெறிய முடியாத சாதனையை உருவாக்கும் முயற்சியை இல்லாமற் செய்தது.


(தொடரும்)

# இணையத்தில் திரியும் எத்தர்கள்

சோஷியல் நெட்வொர்க்கிங் என்று சொல்லப்படும ஆர்க்குட், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் எவ்வளவோ நல்ல விஷயங்கள் உள்ளன. நல்ல எண்ணத்தில் பரிமாறப்படும் தகவல்கள், படங்களை திரித்து தவறாக பயன்படுத்துவோர் வெகு சிலர்தான். அவர்களை தண்டிக்க சட்டம் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் பள்ளியில் படித்த சக மாணவ, மாணவியை தொடர்பு கொள்ள வேண்டுமானால், இதில் போய் பள்ளி பெயரை, நாம் படித்த ஆண்டை பதிவு செய்தால் போதும்; உங்கள் அன்றைய நண்பர்களில் சிலர் கண்டிப்பாக சிக்குவர். அவர்களை 'நெட்' வழியில் தொடர்பு கொண்டு, மற்ற நண்பர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

இப்படி நண்பர்கள், உறவினர்களை தேடிக் கண்டுபிடித்து மீண்டும் உறவை, நட்பைத் தொடரச் செய்ய முடிகிறது என்றால், இன்னொரு பக்கம் நம் கருத்துக்களையும் பதிவு செய்ய முடியும். பொது விஷயமாக இருந்தாலும், தனிப்பட்ட விஷயமாக இருந்தாலும் மனதில் உள்ளவற்றை கொட்டித் தீர்க்க இந்த பக்கங்கள் பயன்படுகின்றன. நம் ஆதங்கத்தைக் கொட்டவும் முடிகிறது; அதே கருத்தைக் கொண்டவர்களின் அறிமுகமும் கிடைக்கிறது. ஆனால். இப்படி பொது விஷயங்களை பரிமாறிக்கொள்ளும்போது கட்டுப்பாடு தேவை. தனிப்பட்ட விமர்சனங்கள் சட்ட சிக்கல்களில் கொண்டுபோய் விடும். ப்ளொக் எனப்படும் வலைப்பூக்களிலும் இப்படித்தான்!

அவர் எம்டெக், எம்பிஏ படித்தவர். முன்னணி மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றுபவர். கொழுத்த சம்பளம். ஆனால், கார் வாங்க விருப்பமில்லை. பஸ்ஸில் தான் போவார். கண்டக்டர் கொடுத்த பணத்துக்கு சில்லறை தரா விட்டால் சும்மா விட மாட்டார். சலித்துக் கொள்வதுடன் உடனே பிளாக்பெர்ரி மொபைலை எடுத்து, நெட்வொர்க்கில் கருத்தை பதிவு செய்தும் விடுவார்.



இவர் வீட்டு நாய் பக்கத்து வீட்டுக்குப் போய் அசுத்தம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தது. எவ்வளவோ சொல்லியும் நாயை திருத்துவதாக இல்லை. அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டு எரிச்சல் அடைய வைத்தார். சண்டை பெரிதானது. அடுத்த வீட்டிலும் ஒரு மென்பொருள் துறை சார்ந்த பெண் இருக்கிறார். அவரும் வந்து ஆங்கிலத்தில் தாட்பூட் என்று மல்லுக்கு நிற்க, மனிதர் டென்ஷன் ஆகி விட்டார். கத்தி விட்டு ஆபிசுக்கு போக பஸ்சில் ஏறி உட்கார்ந்தவர், வழக்கம் போல் இந்த சம்பவத்தையும் எழுதி, அந்தப் பெண்ணை மட்டரகமாக விமர்சித்திருந்தார். இதை எப்படியோ அறிந்த அந்தப் பெண் போலிசில் புகார் செய்ய மனிதர் மாட்டிக் கொண்டார். பின்னர் மன்னிப்பு கேட்டு பிரச்சினை ஓய்ந்தது.

சைபர் க்ரைமில் எத்தனையோ விதங்கள் உண்டு. கண்டபடி திட்டித்தீர்ப்பது முதல் அடுத்தவர் வங்கிக் கணக்கில் இருந்து பணம் திருடுவது வரை சொல்லாம். முதன்முதலாக இந்தியாவில் ப்ளொக் விஷமத்தில் இறங்கி இன்னொரு பெண்ணுக்கு அவமானத்தைத் தேடித் தந்தவர் 2001ம் ஆண்டில் மாட்டினார். மனிஷ் கதூரியா என்பவர், ரித்து என்ற பெண்ணின் பெயரை தவறாகப் பயன்படுத்தி, அப்பெண்ணின் படங்களை, போன். இமெயில் முகவரிகளில் பதிவு செய்தார். ரித்து படங்களை திரித்து, ஆபாசமாக வெளியிட்டார். பழிவாங்குவதற்காக இப்படிச் செய்தவர், சில நாட்களில் பிடிபட்டார். இந்தியாவில் ப்ளொக் கிரிமினல் நடவடிக்கையில் முதன் முதலாக பிடிப்பட்டவர் இவர்தான்.

# பழம் முள்ளாக இருந்தாலும் பயன்கள் அப்பிளைப் போல்



மலேசிய நாட்டிலிருந்து எமது நாட்டுக்கு அறிமுகமாகியுள்ள தூரியன் பல்வேறு போஷணையுடன் கூடிய சுவையான பழமாகும். 1850ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் தனது பிரசன்னத்தை ஆரம்பித்த இப்பழமானது, கண்டி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் நுவரெலிய ஆகிய பிரதேசங்களில் தற்போது பரவிக் காணப்படுகிறது.

50- 120 மீட்டர் உயரம் வரையில் வளரக் கூடிய தூரியன் மரமானது 80- 250 வருடங்கள் வரையில் உயிர் வாழக்கூடியது. மலேசியாவிலிருந்து புறப்பட்ட இம்மரம் இலங்கை, மியன்மார், தென் இந்தியா, அவுஸ்திரேலியா, நியுகினியா, ஆகிய நாடுகளில் வேரூன்றியிருக்கிறது. அதிக வருமானத்தைத் தரக்கூடிய பழச்செய்கை மிகப் பிரபலமானதொன்றாகும்.

தசை நிரம்பிய சுளைகளையுடைய தூரியன் பழங்கள் சுமார் 2 முதல் 7 றாத்தல் வரையில் எடைகொண்டது. இப்பழத்தில் கிளம்பும் மணம் சிலருக்கு பிடிப்பதில்லை. எனினும் அதன் சுவையை விரும்பி உண்பவர்கள் மணத்தை கணக்கில் கொள்வதில்லை.

மாச்சத்து, புரதம், கொழுப்பு, கனியுப்புக்கள் உட்பட பல சத்துக்கள் நிறைந்த தூரியன் பழத்தில் பல்வேறு மருத்துவக் குணங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. உஷ்ண தன்மையுடைய தூரியனில் காணப்படும் விதைகளை அவித்து அல்லது எண்ணெயில் பொரித்து உண்ண முடியும். தோல் நோய்களுக்கு இது சிறந்த மருந்தாகும். முற்களுடன் கூடிய தோலானது பழத்துக்கு பாதுகாப்பையும் அழகையும் கொடுப்பதுடன் குடற்புழு நோய்க்கும் மருந்தாக அமைகிறது. காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் அதன் இலையை அரைத்து குளிப்பர். உடலில் ஏற்படும் புண், மற்றும் வீக்கங்களைக் குறைப்பதற்கு ஆயுர்வேத வைத்தியர்கள் இம் மரத்தின் பாகங்களைப் பயன்படுத்துவர்.

ருசியிலும், தோற்றத்திலும் தனித்துவத்துடன் காணப்படும் தூரியன் பழத்தை உட்கொள்வதனால் சீரணத்தை துரிதப்படுத்துவதுடன், நிறை குறைந்த பிள்ளைகளின் நிறையை அதிகரிக்கவும் உதவுகிறது. இலேசான இனிப்பு காணப்படுகின்றமையினால் இலகுவாக உடலில் கலக்கிறது.

மலச்சிக்கலை போக்குவதுடன், மல வாயிலில் நோ உள்ளவர்களுக்கு மிகவும் சிறந்த உணவாகும். குடல்களில் ஏற்படும் புற்று நோயை தடுப்பதுடன் செங்குருதி சிறு துணிக்கைகளை இரத்தத்தில் அதிகமாக உற்பத்தி செய்யும் தன்மை இதற்குள்ளது.

நீங்கள் நித்திரையின்றி அவதிபடுகிறீர்களா? அப்படியானால் உங்களுக்கான சிறந்த மருத்துவ உணவு தூரியன்தான். தோல் நிறத்தை மாற்றியமைப்பது, கூந்தல் வளர்ச்சி, மூட்டுக்களின் இறுகிய தன்மையை இலகுவாக்குவது, ஆண்மையை அதிகரிக்கச் செய்தல் போன்ற இதன் பலன்களை பட்டியலிட்டுக்கொண்டே செல்லலாம்.

ஜுன்- ஆகஸ்ட் வரை அதிகமாக விளையும் தூரியனின் பரபரப்பு விற்பனை காரணமாக விலையும் சற்று அதிகமாகவே காணப்படுகிறது.

பல்வேறு மருத்துவக் குணங்கள் கொண்ட தூரியன் பழத்தை உண்போம்! பலனைப் பெறுவோம்!

**நன்றி: மிஹிதுரு**
**தமிழில் ஆர்த்தி**

# பொருத்தமான ஹெங்கர்களை தெரிவு செய்யுங்கள்



வீட்டை ஒழுங்குபடுத்தி பராமரிப்பது என்பது எளிதான வேலையல்ல. இல்லதரசிகளுக்கு பெரும்பாலும் இது ஒரு சவாலாகவே அமையும். அத்துடன் வீட்டில் உள்ளவர்களின் உடுப்புகளை கழுவி, துவைத்து அடுக்கி வைப்பது மற்றொரு சவாலான விடயம்.



பெரியவர்களின் உடுப்புகளை விட சிறுவர் சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் உடுப்புகளை ஒழுங்காக வைப்பது மிகவும் சிரமமானது. சில வீடுகளில் சிறுவர்களே தமக்கு மிகவும் பிடித்த உடுப்புகளையே அடிக்கடி போடச் சொல்லி அடம் பிடிப்பார்கள். கைக்கு எட்டிய தூரத்தில் அவை இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சிறுவர்கள் அழுது அரற்றி வீட்டையே இரண்டுபடுத்துவார்கள்.


சில வீடுகளில் பார்க்கும் இடமெல்லாம் சிறுவர்கள் உடுப்பு பரப்பிக் கிடக்கும். யாரும் விருந்தாளிகள் வந்தால் உட்கார நாற்காலி கூடக் கிடைக்காது.

ஆனால் இவ்வாறு எல்லா இடங்களிலும் பரப்பிப் போடாமல் ஒழுங்காக வைத்தால் வீடும் அழகாக இருக்கும். மனதுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

துணிகள் மற்றும் உடுப்புகளை தொங்கவிடும் 'ஹெங்கர்'களில் அவற்றை மாட்டி வைப்பதன் மூலம் இப்பிரச்சினையை எளிதாக சமாளிக்கலாம்.

எனினும் லாபமாக நடைபாதைகளில் கிடைக்கும் ஹெங்கர்களை வாங்குவதுதான் எங்களில் அனேகருக்கு பழக்கம். இவ்வாறான செயல்களால் சிறிய லாபத்தை விட நட்டமே ஏற்படுகிறது.

துணிகளை தொங்கவிடும் ஹெங்கரைக் கூட சரியான முறையில் தெரிவு செய்து வாங்க வேண்டும். நடை பாதைகளில் வாங்கும் ஹெங்கர்களில் பூசப்பட்டுள்ள வர்ணப்பூச்சு சில சமயங்களில் துணிகளில் ஒட்டிக் கொள்ளும். கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக பலகையால் செய்யப்பட்ட ஹெங்கர்களில் இந்த ஆபத்து அதிகம்.



அத்துடன் அவ்வாறான ஹெங்கர்களை நீண்டகாலம் பாவிக்கவும் முடியாது. அவ்வளவு தூரத்துக்கு அவை தரமின்றி இருக்கும். கீழே விழுந்தால் சில சமயங்களில் அவை உடைந்து போவதும் உண்டு.

அதேவேளை நல்ல தரமான ஹெங்கர் ஒன்றை நீங்கள் தெரிவு செய்தால் அது உங்களுக்கு நீண்ட காலம் உழைக்கும்.

அத்துடன் உங்கள் துணி பீரோவுக்கு ஏற்ற அளவிலும் சேர்ட், கோட், காற்சட்டை ஆகியவற்றுக்கு தகுந்த வகையிலும், சேலை, ரவிக்கை ஆகியவற்றுக்கு ஏற்ற வகையிலும் அமையுமாறு பார்த்துக்கொள்ளவும்.

சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கான உடுப்பு மற்றும் துணி வகைகளை 'ஹெங்கர்களில் மாட்டி வைக்கும் அதேநேரம் அவற்றை மடித்தும் வைக்கலாம்.

துணிகளை ஒழுங்காக வைப்பதற்கு 'ஹெங்கர்'களில் அவற்றை தொங்க வைத்து அல்லது மாட்டி வைப்பதோ தான் ஏற்றது.



ஒரு அலுவலக நிர்வாகியாக உங்களை கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு 'பைல்' எடுத்து வரச்சொல்லி, பியூனிடம் உத்தரவு போடுகிறீர்கள். அவர், 'பைலை' மிகவும தாமதமாகக் கொண்ட வருகிறார்.

''ஏன் இவ்வளவு லேட்? உடனே எடுத்து வர முடியாதா? உன்னையெல்லாம் வேலைக்கு வச்சிருக்கிறேன் பாரு...'' என்று 'காச்மூச்'' கூச்சல் போடுகிறீர்கள்.

இன்னொரு நிர்வாகியை கற்பனை செய்யுங்கள். இதே சம்பவம் நடக்கிறது ஆனால் அவர் கோபப்படாமல், ''என்னப்பா... பைலை கடைல வாங்கி, பேப்பரெல்லாம் 'பிரின்ட்' போட லேட்'-ாயிடிச்சா?'' என்று சிரித்தப்படியே கேட்கிறார். அந்த பியூன் ஒரு நிமிடம் அதிர்ச்சியுடன், அதே சமயம் ஆச்சரியத்துடன் தனது தவறை உணர்கிறார். அடுத்த வேலைகளை பியூன் 'மளமள'வென செய்யத் துவங்குகிறார்.

ஒரே விஷயத்தை நாம் எப்படி கையாள்கிறோம், அதற்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதில் தான் நம் 'டென்ஷன்' அடங்கியிருக்கிறது.

அதற்காக, எல்லா நேரத்திலும் 'டென்ஷனே' இல்லாமல் இருந்துவிட்டால், எந்த வேலையுமே ஆகாது.

வீட்டுக்கு பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நேரத்தில் நம் வாகனப் போக்குவரத்தில் கோளாறு ஏற்பட்டு, சரியான நேரத்திற்கு செல்ல முடியாவிட்டால் 'டென்ஷன்' ஏற்படுவது இயற்கை தான். ஆனால், அந்த நேரத்திலும் முன்கூட்டியே சமயோசிதமாகச் செயல்பட்டால் அந்த 'டென்ஷனை'யும் தவிர்க்கலாம்.

குழந்தைகளுக்கு தேர்வு நேரத்தில், அவை படிக்க நேரம் ஒதுக்காமல் விளையாட்டில் கவனவம் செலுத்தினால், 'டென்ஷன்' ஏற்படுகிறது. குழந்தைகளிடம் 'காச்மூச்' என்று கத்துவதற்குத் தோன்றும். குழந்தைகள் மீது கோபப்படாமல், குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்கள், கண்விழித்துப் படிக்க வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக்கொடுத்து, நீங்களும் கூடவே அமர்ந்து பாருங்கள். உங்கள் குழந்தைதான் தேர்வில் முதல் மார்க் பெற்றிருக்கும். எனவே, 'டென்ஷன்' என்பது, ஒவ்வொரு விஷயத்தையும் நாம் எப்படி அணுகுகிறோமோ அதே 'டிகிரி'யில் தான் அது உங்களைப் பாதிக்கும்.

# டென்ஷனை ஆளத் தெரியவேண்டும்


இதை அறியாமல் டென்ஷன் என்றால் என்ன என்பது தெரியாமல், எதற்கெடுத்தாலும் டென்ஷனாகி அதிலேயே வாழ்ந்தால் என்னென்ன நடக்கும் தெரியுமா?

நாடித் துடிப்பு எப்போதும் அதிகரித்த நிலையிலேயே காணப்படும். உயர் ரத்த அழுத்தத்துடன் அலைய வேண்டியதாகி விடும். ரத்தத்தில் சர்க்கரை அளவும் அதிகரித்து விடும். உடலில் கொழுப்புச் சத்தும் அதிகரிக்கும். டென்ஷனால் தோலிலும் மாற்றங்கள் உண்டாகி ஒவ்வாமை ஏற்படுகிறது. வயிற்றில் அதிக அளவில் அமிலம் சுரந்து, புண் ஏற்படுகிறது.

உடலுக்கு ஒக்சிஜன் போதுமான அளவு கிடைக்காமல், இருதயக்கோளாறு, ஆஸ்த்துமா, மூட்டு வலி, புற்றுநோய் உண்டாகிறது. மனம் எப்போதும் அலைபாய்ந்தபடி இருக்கிறது. இந்த நோய்களின் உச்சகட்டமாக மாரடைப்பு மற்றும் மூளைச் செயலிழப்பு ஆகியவை ஏற்படுகின்றன. டென்ஷன் மனிதனை நோயாளியாக்கி விடுகிறது.

எனவே, ஒரு விஷயத்தை அனைவரும் புரிந்துகொண்டே தீரவேண்டும். ஒரே விஷயத்தைக் கையாளும் பலருக்கும், டென்ஷனும், மன அழுத்தமும் ஒரே அளவில் வருவதில்லை. ஒருவருக்குக் குறைவாகவும், ஒருவருக்கு அதிகமாகவும் வருகிறது.

ஆகவே டென்ஷனை ஆளப் பழகுவோம். பரந்த சிந்தனை, விட்டுக்கொடுப்பு, வெற்றித் தோல்விகளை சமனாகவும் இயல்பாகவும் பார்க்கும் மனப்பான்மை என்பனவற்றை வளர்த்துக் கொண்டால் டென்ஷனில் இருந்து தப்பிக்கலாம்.



# பவர் ஸ்டார்: விசித்திர வீரியன்

இந்தப் பொங்கல் பண்டிகை குதூகலத்துடன் தமிழ் திரையுலகத்துக்கு ஒரு புதிய நடிகர் கிடைத்திருக்கிறார். ரசிகர்களை ஒரு கலக்கு கலக்கியும் வருகிறார்.

தமிழக மக்கள் (ரசிகர்கள்) இப்படி ஒரு மனிதரை இதுவரை சந்தித்ததில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இது வரை தமிழ் ரசிகர்கள் பார்த்திருக்கும் நகைச்சுவை நடிகர்களான கலைவாணர், 'டணால்' தங்கவேலு முதல் நாகேஷ், சுருளிராஜன், வடிவேல், சந்தானம் வரை எடுத்துக்கொண்டால் அவர்களை விட இவர் வேறுபட்டவர். மேற்கூறிய நகைச்சுவை நடிகர்கள் அனைவருமே நல்ல திறமையான நடிகர்கள். ஆனால் இப்போது வந்திருப்பவர் நடிக்கவே (நடிப்பே) தெரியாமல் நடிப்பவர். அவருக்கு நடிக்க தெரியாது (வராது) நமக்குப் பிடிக்கிறது. அதுதான் இதில் விசேஷம்!

நமக்குப் புதியவராயினும் தமிழ் திரையுலகுக்கு இவர் புதியவரல்ல. 'லத்திகா' என்ற படத்தை தயாரித்து கதாநாயகனாக நடித்தவர்தான் இவர். இந்தப் படம் கடந்த வருடம் தமிழகத்தில் திரையிடப்பட்டு 300 நாட்கள் ஓடியதாக (ஓட்டப்பட்டதாக) கூறப்படுகிறது. ஆனால் ஒரு சிலர் மட்டுமே லத்திகாவை திரையில் பார்த்திருப்பார்கள். ஆனால் இப்போது இவரை தமிழகத்தில் தெரியாதவர் இல்லை. இத்தனை பெருமையை சம்பாதித்திருப்பவர் டாக்டர் சீனிவாசன்.

தெரியாது என்கிறீர்களா? சரிதான் இவரது உண்மைப் பெயரை சொன்னால் நிறையப்பேருக்கு தெரியாதுதான். இவரது வெகுஜனப் பெயரான பவர்ஸ்டார் என்றால்தான் அனைவருக்கும் தெரியும்.

இவர் உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய விளம்பரப் பிரியர். விளம்பரத்துக்கென்றே தனக்குப் பின்னால் ஒரு குழுவையே வைத்திருப்பவர். எங்கு சென்றாலும் அவரது இந்த சிஷ்யர் கூட்டம் பின் தொடரும். ஆனால் சின்னத் திரையிலோ பெரியத் திரையிலோ அவர் தன்னை உயர்த்திக் கொள்வதில்லை. பொறுமை காத்து அடக்கம் காட்டுவார். இதவே அவரது பிளஸ் பொயின்டாக அமைகிறது.

இவருக்கு ஒரு நெகடிவ் இமேஜ் இருப்பதை மோப்பம் பிடித்த தமிழக மீடியாக்கள்தான் அவரை அழைத்து வந்து கலாய்ப்பதில் முதலிடம் பெற்றது. விஜய் டிவியின் நீயா நானா புகழ் கோபிநாத்தான். பவர் ஸ்டாரை சீண்டும் நோக்கில் கேள்விக் கணைகளை முதலில் அள்ளி வீசினார் கோபிநாத்தை சிரிப்புடனே எதிர்கொண்டு கலாய்த்தார் பவர்! வேறு நடிகனாக இருந்தால் செட்டை விட்டே வெளியே போயிருப்பார். ஆனால் அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் கோபிநாத்தையே தவறாக பார்க்கும் அளவுக்கு நிலைமையை தனக்கு சாதகமாக மாற்றிக்கொண்டவர் பவர்.

அனைத்து (அச்சு, இலத்திரனியல், பதிவுலகம்) ஊடகங்களும் இவரைக் கிண்டல் பேர்வழியாகத்தான் பார்த்தன. ஆனால் அண்மையில் வெளியான 'கண்ணா லட்டு தின்ன ஆசையா' என்ற படத்தின் மூலம் அனைத்து பாதக விமர்சனங்களையும் தனக்கு சாதகமாக்கியிருக்கிறார் பவர் ஸ்டார்.

தனக்கு 50 லட்சம் ரசிகர்கள் இருப்பதாக இவர் பேட்டிகளில் ரீல் விடும்போது அதனைப் பார்ப்பவர்கள் அனைவருமே விழுந்து விழுந்து சிரித்தார்கள். கொக்கரித்தார்கள். மொத்த தமிழகமும் 'பைத்தியக்காரன்' என்று மனதுக்குள் கூறிக்கொண்டது. தனக்கு ஒரே செலன்ஞ் சுப்பர் ஸ்டார் என்றும் கோச்சடையான் வெளிவரும்போது அதற்கு போட்டியாக தனது படம் வெளிவரும் என்றும் ஜெகஜால பவர் வித்தை காட்டும்போது யார் தான் சிரிக்காமல் இருக்க முடியும்?

ஆனால் லட்டு தின்ற பின்பு சிரித்தவர்கள் அனைவருமே அவரின் ரசிகர்களாகி விட்டார்கள் என்பது ஓசையில்லாத உண்மை. எண்ணிப் பாரர்த்தால் நிச்சயம் 50 லட்சத்துக்கு ஒன்றிரண்டு அதிகமாகத்தான் இருக்கும். (50 லட்சம் கணக்கு இப்போது சரியா?)

இணையம் என்ற ஊடகம் சிலரை பிரபலமாக்கி திக்குமுக்காட வைத்துவிடும். அதுபோல் விமர்சித்தே சிலரை காணாமற் போகச் செய்து விடும். ஊடகங்களினால் கோமாளி நாயகனாக வளர்க்கப்பட்ட பவர் ஸ்டாரை அதே ஊடகங்கள் இப்போது கொண்டாட்ட நாயகனாக்கியிருக்கின்றன என்பது விசித்திரமான விந்தை!

பவர் ஸ்டாரின் ரீல் தொல்லை இனி இன்பத் தொல்லையாகி, இல்லாமல் இல்லை என்றாகி என்றாவது ஒரு நாள் வேண்டாத தொல்லையாகவும் மாறலாம்.


வளர்த்துவிட்ட ஊடகங்களே நாளை பவரின் மார்பில் பாயலாம்.

யாரறிவார் பராபரமே!





மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை





# கரடிக்கு கருணைக் கொலை



தெஹிவளை மிருகசாலையில் மிருக வைத்தியராக பணியாற்றி வரும் அருந்ததி பொன்னுசாமி தமது சேவைக்காலத்தில் நடந்த ஒரு நெகிழ்ச்சியான சம்பவத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னர் அந்த சம்பவம் நடந்தது. தெஹிவலை மிருகசாலையில் முப்பது வருடங்களுக்கு மேலாக தனது பெருத்த உடலை ஆடி அசைத்து கம்பீரமாக நடைபோட்டபடி வாழ்ந்தது ஒரு கரடி. வருடங்கள் கழிய அதற்கும் வயதாகி விட்டது. முதுமையின் அறிகுறிகள் அதன் உடலில் தோன்ற ஆரம்பித்தன. அதன் 'புசு புசு' மயிர்கள் உதிர ஆரம்பித்தன. நாளடைவில் மயிர் முற்றிலும் உதிர்ந்து அது தோல் கரடியாகி விட்டது. பொலிவிழந்த அந்தக் கரடியே பார்வையாளருக்கு விருந்தானது. மயிர் உதிர்ந்த கரடியை அவர்கள் ஆச்சரியத்துடன் பார்க்க ஆரம்பித்தார்கள். குழந்தைகள் ''அதோ பாருங்கள் அந்த மிருகத்தின் பெயர் என்ன?'' என்று கேட்க, பெற்றோரும் அது என்ன? என்று குழம்பிப்போனார்கள்.

கரடி இருந்த இடம் ரொம்பவும் விசாலமானதாக அமைந்திருந்தது. அதோடு அங்கே நீர்த் தடாகமும் இருந்தது. கரடி தனது அன்றாட பொழுதின் முழு நேரத்தையும் அந்த நீர் தடாகத்திலேயே கழித்தது.

கரடி எப்போதும் தண்ணீரில் மூழ்கிக் கிடப்பதையும் அதன் மயிர்கள் உதிர்ந்து விட்டதையும் பார்த்த மிருகசாலை நிர்வாகம், கரடியை வேறு ஒரு இடத்திற்கு மாற்றலாம் என்று அபிப்பிராயப்பட்டது.

யோசனை என்னிடம் வந்தபோது நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முப்பத்தைந்து ஆண்டுகளை ஒரே இடத்தில் கழித்து பழகிய அந்த கரடியை ஒரு புதிய இடத்திற்கு மாற்றும்போது கரடிக்கு அது உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் புதிய இடத்தில் தாம் தனிமைப்படுத்தப்பட்டதை நினைத்து கவலைப்படும் என்றும் சொன்னேன். நிர்வாகம் அரை மனதோடு கரடியின் இடமாற்றத்தை சிறிது காலம் தள்ளிப்போட்டது. நிர்வாகம் கரடியை இடமாற்றம் செய்யாதது எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. சில மாதங்களுக்கு பிறகு கரடியின் உடல் நிலை கவலைக்கிடமாகி, கரடி படுத்த படுக்கையாகி விட்டது. உடனே அதை இடமாற்றம் செய்து மக்கள் கண்படாத இடத்தில் வைக்கும்படி நிர்வாகம் உத்தரவிட, வேறு வழியின்றி அதை செய்ய வேண்டியதாயிற்று. கரடியை மிருகசாலை வைத்தியசாலையில் வைத்து பராமரித்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்போது கரடி கோமா நிலைக்கு சென்றிருந்தது. அதற்கு பால் மட்டுமே கொடுக்கக் கூடியதாக இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல கரடி ஒரே இடத்தில் அசையாமல் படுத்திருந்ததால் கரடியின் உடம்பில் படுக்கைப் புண் வந்து துர்நாற்றமும் வீசத் தொடங்கியது. இதை அறிந்த நிர்வாகம் உடனே கரடியை கருணை கொலை செய்யும்படி எனக்கு உத்தரவிட்டது. இவ்வாறு கருணைக் கொலை செய்வது வழக்கமானாலும் அந்தப் பணி எனக்கு வந்து சேர்ந்ததால் நான் அதிர்ந்து போனேன்!

| | | |
|---|---|---|
| விஞ்ஞானப் பெயர் | - | Meluresus Ursinus |
| இனம் | - | Animalia |
| வர்க்கம் | - | Chordate |
| பிரிவு | - | Mammalia |
| வகுப்பு | - | Carnivora |
| குடும்பம் | - | Ursidae |
| ரகம் | - | Meluresus |
| பொதுவான பெயர் | - | South Bear (இலங்கை கரடி) |



முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த மிருகசாலையில் வசித்த கரடியின் மரணம் இயற்கையாக இருக்கவேண்டும் என்பது என் வேண்டுதலாக இருந்தது. என் கையால் அதைக் கருணைக் கொலை செய்ய நான் விரும்பவில்லை.

அதனால் மிருகசாலை நிர்வாகத்திடம் நான் ஒரு வேண்டுகோளை முன்வைத்தேன். கரடியை கருணை கொலை செய்ய மூன்று நாட்கள் அவகாசம் கேட்டேன். மூன்று நாட்கள் முடிந்த பின்னரும் அது உயிரோடு இருந்தால் நான் அதை கொன்று விடுகிறேன் என்று சொன்னதை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

துர்நாற்றம் வீசுவதாகவும் அது மிருகசாலையின் நல்ல சூழலுக்கு இடையூராக இருப்பதாகவும் கூற நான் பிடிவாதமாக பேசி நீண்ட இழுப்பறிக்கு பிறகு மூன்று நாள் மட்டும் அவகாசம் தருவதாகக் கூறவே நான் நிம்மதி பெருமூச்சு விட்டேன்.

அன்று இரவு எனக்கு தூக்கமே இல்லை. கரடியின் மரணம் இயற்கையானதாக இருக்கவேண்டும் என்பதே என் வேண்டுதலாக இருந்தது. ஆனால் இரண்டு நாட்கள் முடிந்த பிறகும் கரடி உயிரோடு இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மூன்றாவது நாள் காலையில் எழும்பி கரடியின் மரணம் இயற்கையானதாக இருக்கவேண்டும் என்று நினைத்து கடவுளை வணங்கினேன். பிறகு மிருகசாலைக்கு நுழைந்ததும் கரடியைப் பற்றி விசாரித்தேன். கரடி உயிரோடு இருப்பதாக சொன்னதும் எனக்கு பகீர் என்றது. என் கையாலேயே கரடிக்கு விஷம் கொடுக்கவேண்டியதை நினைத்தபோது எனக்கு ஏதோ பெரிய குற்றம் செய்வதுபோலத் தோன்றியது. கரடிக்கு விஷம் கொடுக்கவேண்டிய நேரம் நெருங்கி கொண்டிருந்தது.

நான் மருந்தை ரெடி பண்ணி ஒரு போத்தலில் ஊற்றி எடுத்துக்கொண்டு கரடி இருக்கும் அறையை நோக்கி நடந்தேன். கரடியின் அறைக்கு வெளியே நின்ற வேலையாள் என்னைப் பார்த்து,

''இப்போ தான் மேடம் கரடி பால் குடித்தது'' என்றான். எனக்கு நெஞ்சு படக் படக்கென்று அடித்துக்கொண்டது. கரடிக்கு அருகில் சென்றபோது கரடி கோவில் சாமிக்கு முன்னால் இருக்கும் நந்தி போல படுத்திருந்தது. நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு விஷப்பாட்டிலைத் திறந்து கரடியின் வாயைத் திறக்க என் கையை நீட்டி கரடியின் தாடையை பிடித்து நிமிர்த்தினேன். கரடியின் உடல் அசைவற்று கிடந்தது. சந்தேகத்தில் தாடையை விட்டு கையை எடுத்தேன். அடுத்த நொடியே கரடி தொப்பென்று சரிந்தது.

கரடி உயிர் விட்டிருந்தது.

என் வேண்டுதல் பலித்து விட்ட சந்தோஷத்தில் மனதில் பெரிய நிம்மதி.

கடவுளுக்கு நன்றி சொல்லி விட்டு விஷ பாட்டிலை மூடி வைத்தேன்.








முஹம்மத் இஸ்மத்
பாத்திமா அஸ்மா
உலகிடிவலை, மள்வானை



எஸ். தினேஷ்குமார்
எஸ்.ஞானசுந்தரி
றைகம், இங்கிரிய
20-12-2012



எம். ஆனந்தகிருஸ்ணன்
எஸ்.சந்திரகலா
அலவத்துவல, அங்கும்புர

உங்கள் திருமண படங்களும் இந்தப் பகுதியில் இடம்பெற வேண்டுமா? விபரங்களுக்கு 22ஆம் பக்கத்தைப் பாருங்கள்.




Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in February, 2013.